கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர்சபை

அளவெட்டி

# வைரவிழா

1956 - 2016

## சிறப்பு மலர்



"எம் கடன் பணிசெய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
## தொண்டர் சபை

# வைரவிழாச் சிறப்பு மலர்
## 1956 - 2016

தொகுப்பு :

**மலர்க்குழு**

வெளியீடு
**கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்**
**தொண்டர்சபை அளவெட்டி**
**2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்குறிப்பு :


தலைப்பு : அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோயில் தொண்டர்சபை வைரவிழாச் சிறப்பு மலர்.

தொகுப்பு : மலர்க்குழு

வெளியீடு : கோயில் தொண்டர்சபை, அளவெட்டி.

பதிப்பு : 2017 வைகாசி

அட்டை ஓவியம் : ஓவியர் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, இணுவில்.
(ஆசிரியர், யா/ அருணோதயக் கல்லூரி அளவெட்டி)

அச்சகம் : அன்றா பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.

பக்கம் : 74

பிரதிகள் : 250

விலை : அன்பளிப்பு ரூபா 1000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிமூல சந்திரசேகரப் பிள்ளையார்



தொண்டர் சபையினரின் வைரவிழா சிறப்பு மலரை
கும்பழாவளை விநாயகப் பெருமானின் திருவடிகளில்
பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி கும்பழாவளை - பஞ்சமுக விநாயகர்



அகரமென அறிவாகி உலக மெங்கும்
அமர்ந்தகர உகரமக ரங்கள் தம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- மலர்க்குழுவின் மனப்பதிவுகள் ........ 02
- ஆசிச் செய்திகளும் வாழ்த்துச் செய்திகளும்
  - ஆலயப் பிரதம குருவின் ஆசியுரை ........ 03
  - ஆதீன முதல்வரின் அருளாசியுரை ........ 04
  - சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஆசிச் செய்தி ........ 05
  - யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி ........ 06
  - ஆலயத் தர்மகர்த்தாக்கள் சபை தலைவரின் வாழ்த்துச் செய்தி ........ 07
  - அளவெட்டி சைவ வாலிப சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி ........ 08
  - ஆலயத் தொண்டர் சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி ........ 09
  - ஆலயத் தொண்டர் சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி ........ 10
  - ஆலயத் தொண்டர் சபை ஆரம்பகாலச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி ........ 11
- தொண்டர் சபை நிர்வாகக் குழு 2016 தொண்டர் சபை மலர்க்குழு ........ 13
- கும்பழாவளை தொண்டர்சபையின் வரலாறு ........ 15
- தொண்டர் சபை : சில நினைவுகள். மனவாழ்த்துக்கள் - *மகேன் சுப்பிரமணியம்* ........ 21
- தொண்டர் சபை ஆரம்பமும் அதன் பின்னணியும் *செ.சுப்பிரமணியம்* ........ 23
- புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் நித்தம் நித்தம் நினைவலைகள் மோதும்
  - *இ.யோகேந்திரன்* ........ 26
- என் கடன் பணி செய்து கிடப்பதே - திருமதி கல்யாணி லோகநாதன் ........ 27
- கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் சில வரலாற்றுத் தகவல்கள்
  - *சோபிதா முகுந்தன்* ........ 29
- பாடும் பணியே பணி - *எஸ். சிவானந்தராஜா* ........ 31
- அட்டாங்க யோகம் - *சைவப் புலவர் சு.செல்லத்துரை* ........ 37
- கும்பழாவளையே கூட்டுப் பிரார்த்தனையின் தோற்றுவாய்
  - *கலாபூஷணம் கே.எஸ்.சிவஞானராஜா* ........ 41
- அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் பிரபந்தங்கள் : ஒரு விவரணக் குறிப்புரை
  - *பிரம்மஸ்ரீ க.சௌந்தரராஜசர்மா* ........ 43
- சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியும் ஏழு விநாயகர் ஆலயங்களும்-*ச.சஜீலன்* ........ 55
- யாசகம் : கவிதை - *கை.சரவணன்* ........ 60
- அளவையூர் தவில் சக்கரவர்த்தி - *வ.மருதலிங்கம்* ........ 61
- தொண்டர் சபையின் கடந்த கால நிர்வாகக் குழு -*சில பதிவுகள்* ........ 62
- நன்றியுரை ........ 72




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் மனப்பதிவு

வடபுலத்தில் நிலவளம், நீர்வளம், கலைவளம் முதலான பல வளங்களையும் தன்னகத்தே கொண்டு தன்னிகரற்ற சிறப்புடன் திகழும் அளவையம்பதியில் அருளாட்சி புரியும் கும்பழாவளைச் சந்திரசேகர விநாயகப் பெருமானுடைய திருக்கோயிலானது வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு திருத்தலமாகும். சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியினால் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏழு விநாயகர் ஆலயங்களுக்கும் நடுநாயமாக மிளிர்கின்ற சிறப்பைப் பெற்றது இவ்வாலயம். மாருதவல்லியின் மாமுகம் நீக்கியமை, தென்னையிற் பைங்காய் செங்காய் ஆக்கியமை போன்ற அற்புதங்களை நிகழ்த்திய பெருமைக்குரிய விநாயகப் பெருமானை நாடிவரும் அடியவர்க்கு உடற்பிணி , உளப்பிணி நீக்கி அருளாட்சி புரிவதால் எம்பெருமானை நாடி வரும் பக்தர்கள் பல்லாயிரம்.

இத்திருத்தலத்தின் கண்ணே, தங்களை முற்றுமுழுதாக அர்ப்பணித்து " என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரடிகளின் திருவாக்கைத் தாரக மந்திரமாகக் கொண்டு சரியைத் தொண்டுகளைச் செய்து வருகின்றார்கள் தொண்டர் சபையினர். 1956ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது அளப்பரிய பணிகளை ஆற்றி இவ்வாண்டு தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்கின்றது. ஆறு தசாப்தங்களாக தொண்டாற்றி வரும் இச்சபையின் பதிவுகள் எவையும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லையே என்று கருதிய இச்சபையின் மூத்த உறுப்பினர்கள் பலரின் அயரா முயற்சியினால், புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய கும்பழாவளையின் கனடா திருப்பணிச் சபையினரது நிதிப்பங்களிப்புடன் தொண்டர் சபையின் வைரவிழாச் சிறப்பு மலர் இன்று வெளிவருகின்றது.

எம்பெருமானுடைய பிரம்மோற்சவம் நிகழுகின்ற இவ்வேளையில், புலம்பெயர்ந்து வாழும் விநாயகர் அடியார்கள் பலர் வருகை தந்துள்ள இவ்வினிய பொழுதில் மலர்ந்து மணம் பரப்புகின்ற இம்மலரைப் பெற்று முகர்ந்து பார்க்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தின் புராதன தோற்றம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகத்தின் பின் ஆலயத்தின் புதிய தோற்றம்



"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் அந்தணப் பெருமக்கள் அருளிய ஆசியுரை

ஆலய சிவாச்சாரியார் பரம்பரை சார்பாக,
**சோ.குமாரதாஸக் குருக்கள்.**



அளவையூர் அருட்கவி சீ.வினாசித்தம்பிப் புலவர் இவ் ஆலயத் திருப்பள்ளி எழுச்சிப் பாடலில் குறிப்பிடுவது போல,

"மன்னிய மயில் வாகனத் தொடு
மருவு பல் தொண்டரும் பணி செய நயந்து
பொன்னெடுங் கோபுரக் கோயில்...."

ஆகவமைந்த அருள்மிகு கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலின் தொண்டர் சபை இவ்வாண்டிலே தனது வைரவிழாவினைக் கொண்டாடுகின்றமையை இட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

இக் கோயிலிலே இடம்பெறுகின்ற கிரியா நிகழ்வுகள், மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற விசேட காலங்கள் மற்றும் வார, மாத உற்சவங்களின் போதெல்லாம் பல்வகையான சரியைத் தொண்டுகளை ஆரம்ப காலந்தொட்டே ஆற்றி வரும் சீரிய தொண்டர்களை இச்சபையானது நிரம்பவே கொண்டுள்ளமை போற்றுதற்குரியதாகும். இக்கிராமச் சைவமகா ஜனங்களிடையேயிருந்து வழி வழியாக வந்த அடியார் திருக்கூட்டமாகிய இத்தொண்டர் சபை சமய அறிவை, மொழி அறிவை, இசை அறிவை, கல்வி அறிவை, கலை அறிவை வளர்க்கும் திருத்தொண்டுகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருவதுடன் சமூகத் தொண்டுகளையும் காலநேரம் பாராது ஆற்றி வருகின்றமை மிக்க சிறப்பாகும்.

போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் துயரடையும் மக்களுக்கும் பல்வேறு வகையான உதவிகளை உடனடியாகவே நிறைவேற்றுவதிலும் முன்னிற்பவர்களாக இத்தொண்டர் சபையினர் அமைந்திருப்பதை அனைவரும் அறிவர். ஆலயத் தர்மகர்த்தா சபையினரும் தொண்டர் சபையினரும் இணைந்து பல்வேறு திருப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றார்கள். எல்லாம்வல்ல எம்பெருமான் ஆலயத்தில் ஆகம விதிகளுக்கமைய அனைத்து நிகழ்வுகளும் நிறைவேற்றத் துணை நின்று உதவி வரும் அடியார்கள் அதிகாலைப் பூஜை முதல் அர்த்தசாமப் பூஜை வரையான காலத்தில் ஆலயத் தொண்டுகளைக் கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூடி அயராது ஆற்றி வருகின்றார்கள்.

இச் சபையின் தோற்றத்துக்கும் தொடர்ச்சிக்கும் காரணர்களாகவிருந்து வழி வழியாக உழைத்த பெரியார்களை மனத்தில் நிறுத்தி, சபையின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அனைவரின் தொண்டுகளுக்காக நன்றி பாராட்டுகின்றோம். இச்சபை மேலும் சிறந்தோங்கிச் செயலாற்றவும் இப்பணிகளில் மனமொன்றி ஈடுபடும் அடியார்கள் அனைவருக்கும் சகல நலன்களும் சித்திக்க வேண்டும் என்றும் கும்பழாவளை விநாயகரின் திருவருட் துணையை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

'ஸர்வே ஜனஹா சுகிணோ பவந்து'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

12.08.2016

## ஆசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையீர்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத் தொண்டர் சபை 60ஆண்டுகள் சேவையினைப் பூர்த்தி செய்து இன்று வைர விழாவினைக் கொண்டாடுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து 60 ஆண்டுகள் சமூகப்பணியாற்றி கலாசாரத் தொண்டர்களை உருவாக்கி சமயத்திற்கும் சமூகத்திற்கும் சேவையாற்றிய பெருமை இச்சபைக்கு உண்டு. அளவெட்டிப் பிரதேசம் பல சிறப்புக்களைக் கொண்ட பிரதேசம். பல்துறை சார் பெருமக்களும், வாழ்ந்த இப்பிரதேசத்தில் கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் பல செயற்பாட்டிற்கு உரியதாகும். ஆலயம் பல வளர்ச்சிகளைக் கண்டிருப்பது தொண்டர் சபையின் பெருமையைக் காட்டுகின்றது. தொண்டர்கள் பெருமை சொல்லவும் பெரிது என விநாயகரின் அருள் பெற்ற ஔவை மூதாட்டி முன்மொழிந்துள்ளமை தொண்டர் சபைக்கு மகுடமாகும். இப் பணியில் பணியாற்றிய அனைத்து தொண்டர்களையும் வாழ்த்துகின்றோம். இச்சபை மேலும் வளர்ச்சியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)

**CHINMAYA PRAGATI :** NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA. TEL : + 94 11 259 1344

web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

SRI LANKA


## ஆசிச் செய்தி

**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா**
*வதிவிட ஆச்சாரியார்*
*சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.*



"என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்னும் மகுட வாசகத்திற்கேற்ப கிடைத்தற்கரிய பிறவியாகிய மானிடப் பிறவியிலே நாம் அனைவரும் பலனை எதிர்பாராது பணிகளைக் கடமைகளாகச் செய்ய வேண்டும். இதனையே திருமுறைகளும் ஸ்ரீமத் பகவத்கீதையும் எடுத்துச் சொல்கின்றன.

அந்த வகையில் இளைஞர்களை எல்லாம் ஆன்மீக நெறிப்படுத்தவும், சைவ வாழ்வியலை வாழ வழிவகுக்கும் நோக்கோடு, யாழ்ப்பாணத்தில் பக்தி, பண்பாடு, கலை ஆகியவற்றில் சிறந்து விளங்கும் அளவெட்டிக் கிராமத்தில் உள்ள கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது சிறப்புக்குரியதாகும்.

இதனை முன்னிட்டு இச்சபையினரால் நடாத்தப்பட உள்ள வைர விழா சிறப்பாக நடைபெறவும், அது குறித்து வெளியிடவுள்ள மலர் சிறப்பாக வெளிவரவும் ஆசி வேண்டி விநாயகப் பெருமானையும், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிராத்திக்கின்றோம்.

சின்மயா மிஷன்
இல 9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථන
தொலைபேசி } 021-222 2235
Telephone

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථන පොදු
பொது தொலைபேசி } 021-222 2233
General Telephone } 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය
எனது எண் } Jf/GA/VAL/03/2016
My No.

ඔබේ අංකය
உமது எண் }
Your No.

දිනය
திகதி } 11.08.2016
Date

## வாழ்த்துச் செய்தி



அளவெட்டி கிராமத்தில் அறுபது ஆண்டுகள் தனது மகத்தான சேவையினைப் பூர்த்தி செய்து வைரவிழாக் கொண்டாடும் கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை அளவெட்டி, வைரவிழாச் சிறப்பு மலரினை வெளியீடு செய்வதனை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"பணிசெய் பலனை எதிர்பாராதே" என்னும் தனது மகுட வாசகத்திற்கு ஏற்பச் சிறந்த சேவை ஆற்றி வருவது கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபை என்றால் மிகையில்லை. இத் தொண்டர் சபையானது ஆலயத்தில் நடைபெறும் விழாக் காலங்களில் சிறந்த சேவையினை ஆற்றி வருகின்றது.

தொண்டர் சபை வைர விழாவை முன்னிட்டு மகோற்சவ காலத்தில் சைவத்தின் அருமை பெருமைகளைப் பேசும் "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்" என்னும் நோக்கோடு மலரினை வெளியீடு செய்வது சிறப்புக்குரியது. அருள் மணம் கமழ வெளிவரும் இம்மலர் அடியவர்களின் ஆன்மீகத் தேடலுக்கு அருமருந்தாக அமையும். எத்தகைய பிரதிபலனையும் எதிர் பாராது அடியவர்களின் நலனுக்காகக் கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் உற்சவத்தினைத் திறம்பட அடியவர்கள் பக்தி பூர்வமாக அனுட்டிக்க பொதுச் சேவைகள் ஆற்றி வரும் தொண்டர் சபையின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கது ஆகும்.

தொடர்ந்தும் தமது பணி சிறக்க ஊக்கத்துடன் உழைத்த மலர்க் குழுவினருக்கும், கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபையினருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்து, மலர் சிறந்து மணம் பரப்ப நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**நா. வேதநாயகன்**
*அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவரின் ஆசிச்செய்தி

**ம.பத்மநாதன்**
*ஓய்வுபெற்ற உப அதிபர்*
*யா/ அருணோதயக் கல்லூரி*
*அளவெட்டி*



இந்து சமுத்திரத்தின் முத்து எனப் பெயர் பெற்ற ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்ததும் சிவபூமி என்று வியந்து போற்றப்பட்ட யாழ்ப்பாண நன்நகரில் கல்வி, கலை, கலாசாரம் ஆகிய சகல துறைகளிலும் புகழ்பூத்து விளங்குவது தான் அளவெட்டிக் கிராமமாகும். அங்கே குடிகொண்டு மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருப்பது தான் கும்பழாவளை விநாயகர் ஆலயம் ஆகும்.

சகல சிறப்புக்களும் பொருந்தியிருக்கும் ஆலயத்தில் 1956ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது தான் கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபை. ஆரம்பத்தில் ஒரு சில அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சபை படிப்படியாக வளர்ச்சியுற்று இடப்பெயர்வுக்குப்பின் இன்று 75 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் சிறந்த தொண்டர் சபை அமைப்பாக கும்பழாவளை விநாயகர் ஆலயத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இச் சபையானது ஆலயத்தில் ஆற்றும் தொண்டுகளோ அளப்பரியன. இந்தத் தொண்டர் சபையினர் கும்பழாவளை ஆலயத்திற்குச் செய்யும் தொண்டுகள் மட்டுமன்றி அயற் கோவில்களிலும் தம்மாலான தொண்டுகளை ஆற்றி மக்களின் நன் மதிப்புக்களையும் பாராட்டுக்களையும் பெற்று வருகின்றனர்.

கும்பழாவளைத் தொண்டர் சபையானது சமயப் பணிகளோடு மட்டும் நின்றுவிடாமல் சமூகப் பணிகளும் ஆற்றி வருகின்றது. குறிப்பாக கும்பழாவளை முன்பள்ளிச் சோலையை மேற்பார்வை செய்து கண்காணிப்பது மட்டுமல்லாமல் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா, பண்ணிசை நிகழ்ச்சி, கலை, காவடியாட்டம், கரகாட்டம் போன்றவற்றையும் முன்னின்று நடத்தி சிறார்களை ஊக்குவிக்கும் முகமாகப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தும் வருகின்றனர்.

கும்பழாவளைப் பிள்ளையார் தொண்டர் சபையானது தனது அறுபதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விழாவெடுத்து அந்த விழாவில் அறுபதாவது ஆண்டு மலர் ஒன்றையும் வெளியிடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வது போற்றத்தக்க விடயமாகும். எனவே இந்த நன்நாளில் தொண்டர் சபையானது மேன்மேலும் வளர்ச்சியுற்று மேலும் இளம் தொண்டர்களையும் சபைக்கு உள்வாங்கி ஒரு மகா சபையாக இறைபணியை சீராகவும் சிறப்பாகவும் செய்வதற்கு எம் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி சைவ வாலிப சங்கத் தலைவரின் செய்தி

இ.நாகேந்திரம்,
தலைவர்,
அளவெட்டி சைவ வாலிபர் சங்கம்.



பெருமை வாய்ந்த கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தொண்டர் சபையின் சேவைகளைப் பற்றி இங்குள்ளவர்கள் மட்டுமல்ல வெளிநாட்டில் உள்ள அன்பர்கள் அபிமானிகள் அனைவரும் புகழ்ந்திடுவர். இளைஞர்களைக் கட்டுப்படுத்தப் பெற்றோர்கள் சிரமப்படும் இக்காலத்திலே இத்தொண்டர் சபை அங்கத்தவர்கள் அனைவரும் பக்தி பூர்வமாக ஆசார சீலர்களாக கும்பழாவளைப் பிள்ளையாரின் தொண்டர்களாகத் தங்களை மாற்றி இறைபணியிலே மூழுமூச்சாக ஈடுபடுவதைப் பார்த்து யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள். ஆலய வளாகத்தைச் சுத்தமாக வைத்திருத்தல், ஒவ்வொரு மாதமும் ஆலயக் கேணியைச் இறைத்துச் சுத்தம் செய்தல், மின் தடை ஏற்படுமிடத்து அதைச் சீர்செய்தல், மின் உபகரணங்களைப் பாவித்தல், மின் இயந்திரத்தைப் பராமரித்தல், ஆகிய வேலைகளை உற்சாகமாகச் செய்யும் தொண்டர்சபையின் பெருமையைச் சொல்வதற்கு ஆயிரம் நாக்குகள் படைத்த ஆதிசேடனாலும் முடியுமோ தெரியவில்லை. அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து அறுபத்தோராம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபை மேன்மேலும் பல ஆண்டுகள் நிலைத்திருந்து பிள்ளையாரின் தொண்டுகளைச் செய்வதற்கு எல்லாம் வல்ல கும்பழாவளையான் அருள்புரிவாராக.

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அளவெட்டி
# ALAVEDDY
# கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
# Kumbalavalai Pillaiar Temple

## தொண்டர் சபை
## Thondar Sabai

ஸ்தாபிதம் / Estd. 1956

ALAVEDDY
(SriLanka)

அளவெட்டி
(இலங்கை)



### ஆலய தொண்டர் சபைத் தலைவரின் செய்தி

**பு**ன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி நன்னெறி ஒழுகச் செய்து என்னையும் தொண்டனாக்கி அருள்பாலித்துவரும் விநாயகப் பெருமானது பாதக் கமலங்களைப் பரவிப் பணிந்து, கும்பழாவளைத் தொண்டர் சபையின் முன்னாள் தலைவர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்கச் சந்தர்ப்பம் அளித்த மலர்க்குழுவினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமரர்கள் செ.மயில்வாகனம் ஆசிரியர், இ.முருகேசு ஆசிரியர் போன்ற சைவப் பெரியார்களின் அயராத பெருமுயற்சியின் பேறாக 1956ஆம் ஆண்டில் உருவாக்கம் பெற்ற அளவெட்டி கும்பழாவளைத் தொண்டர் சபையானது பரிணாம வளர்ச்சிபெற்று 2016இல் அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து இப்பொழுது வைரவிழாவைக் கொண்டாடிச் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியீடு செய்வது பற்றி மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன்.

இச்சபையானது வட புலத்தில் முதன் முதல் ஆரம்பமான தொண்டர்சபை என்ற பெருமையைப் பெற்றிருக்கின்றது. சமயம்-சமூகம் இரண்டையும் இரு விழிகளாகக் கொண்டு மகத்தான சேவையாற்றிவரும் இச் சபை தொடர்ந்தும் ஆலயத்திற்கும் சமூகத்திற்கும் சிறந்த பணியாற்ற விநாயகப் பெருமான் அருள்புரியவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

தலைமைத்துவத்தை ஏற்று அடியேன் இறைபணி ஆற்றிய காலப்பகுதியில் எமக்குச் சகல ஒத்துழைப்புக்களையும் நல்கிய அனைத்துத் தொண்டர் சபை உறுப்பினர்களுக்கும் விநாயகர் அடியார்களுக்கும் நன்றி தெரிவித்து வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி.

**அ.மயூரன்**
தலைவர்,
தொண்டர்சபை கும்பழாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அளவெட்டி
ALAVEDDY

# கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
# Kumbalavalai Pillaiar Temple

## தொண்டர் சபை
## Thondar Sabai

ஸ்தாபிதம் / Estd. } 1956

ALAVEDDY
(SriLanka)

அளவெட்டி
(இலங்கை)

### தொண்டர் சபை செயலாளரின் செய்தி



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபை 60 ஆம் ஆண்டில் காலடி வைப்பதில் மனம் பூரிப்படைகின்றது. தொண்டர்சபையின் செயலாளர் என்ற வகையில் அதனுடைய வளர்ச்சியையும், தொண்டையும் எண்ணிப் பெருமைப்படுகின்றேன். 1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தொண்டர் சபையானது உயர் கல்விமான்கள், சமூக சமய பெரியார்களின் வழிநடத்தல்களில் உயர்வை அடைந்தது. இன்றைய இளைய தொண்டர்கள் நாம் அவர்களின் வழியில் செல்ல வேண்டி உள்ளது. தொண்டர் சபையின் நோக்கம் "எம் கடன் பணி செய்து கிடப்பதே" அதுவே ஒவ்வொரு அங்கத்தவர்கள் மனங்களிலும் பதியப்பட்ட ஒன்று. ஆகையால் தான் பெயர் சொல்லத்தக்க தொண்டர் சபையாகவும் பலருக்கு முன்னுதாரணமாகச் செயற்படுவதைக் காணலாம்.

எமது தொண்டர் சபையானது சமய, சமூகப் பணிகளைத் தனது தலையாய நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது. சமயப் பணிகளில் ஆலயத் தொண்டு செய்தல் மஹோற்சவ காலங்களில் சிறந்த திட்டமிடல்களுடன் நேர்த்தியாக தொண்டாற்றல் என்பவற்றைச் சிறப்பாக செய்து வருகின்றது.

சமூகப் பணிகளில் முதன்மையானதாக 1997ஆம் ஆண்டு பாலர் கல்வி சேவை ஆரம்பிக்கப்பட்டு அதனைச் சிறப்பாக நிர்வகித்து வருகிறது. அதிலே மாணவர்களைக் கொண்டு மஹாசிவராத்திரி நிகழ்விற்கு கலை நிகழ்வுகளை ஆலயத்தில் மேடையேற்றல், தேர் உற்சவ தினத்தில் தேர்ப் பண்ணிசைக்கு முன்னதாக கலை நிகழ்வுகள் நிகழ்த்துதல், சிறப்பாக வருடாவருடம் மாணவர் களின் விளையாட்டு நிகழ்வை நடத்துதல் போன்றவற்றையும் தொண்டர் சபை செய்து வருகின்றது.

தொண்டர் சபையின் முன்னைய அறிஞர் பெருமக்கள் இளைய சமூகத்தை ஆன்மீகத்துடன் இணைத்து நேரான வழியில் செல்லவே தொண்டர் சபையை ஆலயத்தில் ஆரம்பித்தனர். அதில் இருந்து இளைய சமூகத்தை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு எமது மூத்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. யாரொருவன் தானாக உணர்ந்து இறைபணி செய்ய முற்படுகின்றானோ அவன் வாழ்வில் வெற்றி பெற்றுள்ளான். இதுவே நான் கண்ட உண்மை. இதற்கு முன்னைய வரலாறுகளும் தக்க சான்றாக உள்ளன.

**ஞா.திரோணன்**
*செயலாளர், தொண்டர் சபை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப காலத் தொண்டர் சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

**திரு.செ.கணபதிப்பிள்ளை**
*ஆரம்ப காலத் தொண்டர் சபைச் செயலாளர்*



யாழ்ப்பாணத்தின் வடபால் வயலும், வனப்புமாய், சைவமும், தமிழுமாய் கவியும், கலையுமாய், செழுமையும் பெருமையும் பெற்றிருக்கும் அழகு நிறை ஊரே எம்மூரான அளவையூர் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழிக்கு இணங்கத் திரும்புமிடமெல்லாம் கோபுர தரிசனம் கிடைக்கப் பெறும் அழகிய கிராமமான எம் அளவெட்டியின் நடுவண் ஓங்காரரூபமாய் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார் கும்பழாவளைப் பிள்ளையார். ஆரம்ப காலம் முதல் இன்று வரை அளவையூரின் நான்கு திசைகளில் இருந்தும் அயற்கிராமங்களில் இருந்தும் கும்பழாவளையானின் பாதங்களைப் பணிந்து நினைத்தது கைகூடப் பெற்ற அடியவர்கள் பலர். அந்த வகையில் விநாயகப் பெருமானுக்கு சேவை செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொண்டர் சபையானது வைரவிழா ஆண்டில் அறுபது (60) வருடத் தொண்டர் சேவையை வழங்கி நிற்பதை எண்ணிப் பூரிப் படைவதோடு வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அக மகிழ்ச்சி யடைகின்றேன்.

எமது ஆலயமானது மிகச் சிறியதாக இருந்தபோது கோயிலை மெழுகிப் பெருக்கிப் பராமரிக்க வேண்டி இருந்தது. அந்த நேரத்தில் அயலில் உள்ள பெண்கள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் உள்வீதி, வெளி வீதியை மெழுகிப் பெருக்கிச் சுத்தம் செய்தனர். அவர்களுக்குப் பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியோர் எனப் பலரும் உதவிகளைச் செய்தனர். எம்மூரின் இளைஞர்கள் ஏனைய சேவைகளைச் செய்து கோயிலின் தூய்மையையும் மகிமையையும் பேணி வந்தனர். விநாயகருக்குச் செய்யும் சரியைத் தொண்டினை அனைவரும் பெரும் பாக்கியமாகக் கருதிச் செய்து வந்தனர். திருவிழாக் காலங்களில் ஊரே விழாக் கோலம் பூண்டிருக்கும். ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும். இதில் முதல் 9 நாட்களும் மின் ஒளி, ஒலி அமைப்புக்கள். மேளக் கச்சேரிகள், கலை நிகழ்வுகளோடு திருவிழா களைகட்டும். பத்தாம் திருவிழாவான தேர்த் திருவிழா எந்தவித அலங்கார ஆடம்பரமும் இன்றிச் சோபையிழந்து காணப்படும். இதை அவதானித்த அன்றைய இளைஞர்களான நாம் எல்லோருமாக அன்றைய தர்மகர்த்தா சபைக் காரியதரிசி திரு. மயில்வாகனம் அவர்களிடம் தேர்த் திருவிழா அன்று தேவார பாராயணம், பிரசங்கம், கலைநிகழ்வுகள் என்பன இருந்தால் திருவிழாச் சிறப்படையும் எனக் கோரிக்கையை முன் வைத்தோம். அதை முழுமனதுடன் ஏற்றுக்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியதரிசி அவர்கள். அதனைத் தனித்துச் செய்வது முறையல்ல என்றும் அதனை எல்லோரும் குறிப்பாக இளைஞர்கள் ஒன்றிணைந்து ஒழுங்கமைத்துச் செய்தால் சிறப்பாக இருக்குமென ஆலோசனை வழங்கினார். உடனடியாக இளைஞர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கூட்டம் கூடி ஆரம்பக் கட்ட வேலைகளை ஆரம்பித்தோம்.

இளைஞர்களின் ஒன்றிணைவையும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் கவனித்த அனைவரும் இதனை வரவேற்று கோயிலுக்குத் தொண்டர் சபை உருவாக்கப்பட வேண்டும் என ஆமோதித்தனர். இதற்கமைய 1956ம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற கூட்டத்தில் தொண்டர் சபைத் தெரிவு இடம்பெற்று தொண்டர் சபை உருவாக்கப்பட்டது.

சபைத் தலைவராக ஆசிரியர் திரு.மு.செல்லையா அவர்களும், செயலாளராக அப்போது கச்சேரியில் கடமை யாற்றிக் கொண்டிருந்த திரு.செ.கணபதிப்பிள்ளையும் (நானும்) பொருளாளராக எரிபொருள் நிலையத்தில் கடமையாற்றிய திரு. இ.இராமச்சந்திரனும் தெரிவு செய்யப்பட்டோம். இச் சபைக்கு "அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் தொண்டர் சபை" என நாமம் சூட்டப்பட்டது. ஆலயத்துக்கென தொண்டர் சபை உருவாக்கப்பட்ட பின்னர் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கூற்றுக்கிணங்க இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப் புடன் ஆலய வளர்ச்சிக்காகச் செயற்படத் தொடங்கினோம். இதனால் ஆலயத்தின் முக்கிய திருவிழாக்கள் அனைத்தும் இன்னும் சிறப்புறத் தொடங்கியது.

தொண்டர் சபை உருவாக்கப்பட்ட காலம் ஆலய வளர்ச்சியின் இன்னொரு மைல் கல் என்றே சொல்ல வேண்டும். தொடர்ந்து வந்த காலங்களில் ஆலயத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குத் தொண்டர் சபையினர் பெரிதும் உதவினர். இந்த இடத்தில் திருவிழாவின் போது நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். ஒருமுறை திருவிழா உபயகாரர் ஒருவர் தனது திருவிழாவைப் பெரிய அளவில் செய்ய வசதி இல்லை என்றும் ஆனால் திருவிழாவைச் செய்யாது விட்டால் தனது தோட்டத்தில் பயிர்கள் விளையாது. விநாயகர் தடுத்து விடுவார் என அஞ்சியும் தனது திருவிழாவின் இரவு நிகழ்வாக நாடகத்தை மேடையேற்றவிருப்பதாகக் கூறினார். இதனை முற்றாக நிராகரித்த தொண்டர் சபையினர் ஆலயத்தில் நாடகம் போடுவது நாகரீகம் அற்ற செயலென்றும் அவ்வாறு செய்வது ஆலயத்தின் புனிதத்தையும் மகத்துவத்தையும் களங்கப்படுத்தும் எனவும் எடுத்துக் கூறினர். ஆனால் உபயகாரர் விடாப்பிடியாகச் செய்ய முற்பட்டதால் சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு பதியப்பட்டது ஆயினும் பொலீஸார் இதில் தலையிட மறுத்து விட்டனர். இந்த விடயம் ஊரவர் மத்தியில் பூதாகாரமாகிப் பேசு பொருளானது. இந்த பிரச்சினையில் இருந்து சபையினர் ஒதுங்கி இருக்க முடிவு செய்தனர். அன்றைய திருவிழா நாளும் வந்தது. வழமையான வைகாசி மாத வெய்யில் பகற்பொழுதில் காணப்பட்டது. அந்த நாளின் இரவு 7 மணியளவில் சுவாமி உள்வீதி உலா வந்து கோபுர வாசலை அடைந்த போது வடமேற்கு மூலையில் சிறிய மின்னல் ஒளி தோன்றியது. அது படிப்படியாக அதிகரித்து சோனாவாரியாகப் பெருமழை கொட்டித் தீர்த்தது. ஆலயத்தின் மின் விளக்குகள் அணைந்தன. ஒலிபெருக்கிகள் செயலிழந்தன. நாடகம் பார்க்க வந்திருந்த ஊரவர்கள், அயற் கிராமத்தவர்கள் அனைவரும் திக்கு தெரியாது ஓடினர். நாடகமும் நிறுத்தப்பட்டது.

அடுத்த நாள் இந்நிகழ்வானது பிள்ளையாரின் 'அற்புதச் செயல்' எனப் பக்தர்களால் பெரிதாகப் பேசப்பட்டது. இதனைத் தொடர்ந்து தொண்டர் சபைக்கு மக்கள் ஆதரவு பெருகியது. மக்கள் தேவையான பொருள் உதவி, சரீர உதவிகளை வழங்கினர். இதனால் தொண்டர் சபையினர் புதிய உத்வேகத்தோடு செயற்படத் தொடங்கினர். அத்தோடு தேர்த் திருவிழா அன்று அன்னதானம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். மேலும் ஐப்பசி வெள்ளித் திருவிழாவிற்கான உபயகாரர்களை ஒழுங்கு செய்து திருவிழாவைச் சிறப்பாக ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து வந்த காலங்களிலும் புதிதாகப் பொறுப்பேற்ற தொண்டர் சபையினர் மேலும் புதிய திட்டங்களின் ஊடாக ஆலயத்தை மெருகேற்றி வந்துள்ளனர். இன்றுள்ள இளைஞர்களும் திறம்பட ஆலயத்தில் சகல விழாக்களையும் முன்னின்று நடாத்துவதையும் ஆலயப்பணி செய்வதையும் கண்ணுறும் போதெல்லாம் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க அளவையூர் கும்பழாவளைப் பிள்ளையாரின் பாதங்களில் சேவை செய்யப் பேறு பெற்றோரில் நானும் ஒருவன் என்ற வகையில் எல்லையில்லா ஆனந்தம் அடைவதோடு இன்றுள்ள தொண்டர் சபையினரின் சேவையானது எமது ஆலயத்திற்கும் எம்மூருக்கும் கிடைக்கவும், இனிவரும் காலங்களிலும் தொண்டர் சபையானது மேலும் விரிவாக்கப்பட்டு ஆலயப்பணி செய்யவும், வைர விழாச் சிறக்கவும் கும்பழாவளையானின் பாதாரவிந்தங்களைத் தொழுதெழுந்து வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர் சபை மலர்க்குழு



"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2016ஆம் ஆண்டு தொண்டர் சபை நிர்வாகக் கட்டமைப்பு

| | |
|---|---|
| **தலைவர்** | : திரு.அ.மயூரன் |
| **செயலாளர்** | : திரு.ஞா.திரோணன் |
| **பொருளாளர்** | : திரு.கெ.இந்திரமோகன் |
| **உபதலைவர்** | : திரு.ம.சுரேந்திரன் |
| **உபசெயலாளர்** | : திரு.S.சாறங்கன் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.ப.கஜேந்திரன்

திரு.அ.மதன்ராஜ்

திரு.க.சுகந்தன்

திரு.கு.வித்தியாகரன்

திரு.ச.சந்திரபவன்

திரு.க.கணராஜன்

திரு.இ.இரகிதன்

**போசகர்** : திரு. வ.மருதலிங்கம்

### மலர்க்குழு

திரு.செ.நம்பியாரூரன்

திரு.செ.செல்வநேசன்

திரு.க.நாகலிங்கம்

திரு.வ.மருதலிங்கம்

திரு.தி.செந்தூரன்

திரு.செ.சனந்தன்

திரு.ஞா.திரோணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பழாவளை தொண்டர்சபையின் நிர்வாகக் கட்டமைப்பு

## ஸ்தாபிதம் - 1956.04.01



அமரர் செ. மயில்வாகனம்
தலைவர், தர்மகர்த்தாக்கள் சபை.
போஷகர், தொண்டர்சபை



அமரர் இ.முருகேசு
செயலாளர், தர்மகர்த்தாக்கள் சபை.
ஸ்தாபகர் தொண்டர்சபை



அமரர் மு. செல்லையா
தலைவர்



அமரர் வை.க.சிற்றம்பலம்
தலைவர்



அமரர் செ.தம்பிஐயா
தலைவர்



அமரர்.இ.இராமச்சந்திரன்
தலைவர்



திரு.செ.நம்பியாரூரன்
தலைவர்



அமரர் க.வேலுப்பிள்ளை
தலைவர்




அமரர் வை.செல்லையா
தலைவர்

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பழாவளை தொண்டர்சபையின் நிர்வாகக் கட்டமைப்பு

## ஸ்தாபிதம் - 1956.04.01



அமரர் பொ.இராசரத்தினம்
தலைவர்



திரு.செ.செல்வநேசன்
தலைவர்



திரு.வி.விக்னராஜா
தலைவர்



திரு.செ.சனந்தன்
தலைவர்



திரு.அ.மயூரன்
தலைவர்

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பழாவளை தொண்டர் சபையின் வரலாறு

வ.மருதலிங்கம்
போசகர்,
கும்பழாவளை தொண்டர்சபை.



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாக்கள் சபையின் ஆரம்பகாலத் தலைவராகப் பணியாற்றிய சைவப் பெரியார் அமரர் செ.மயில்வாகனம் ஆசிரியர் அவர்களும் அன்றைய செயலாளராகிய அமரர் இ.முருகேசு ஆசிரியர் அவர்களும் இணைந்து எடுத்துக்கொண்ட அயராத முயற்சியின் பேறாக 1956ஆம் ஆண்டு மே மாதம் உருவாக்கப் பெற்ற மழலைதான் கும்பழாவளைத் தொண்டர் சபை என்ற அமைப்பாகும். ஈழ மண்ணில் தோற்றம் பெற்ற முதலாவது தொண்டர் சபை என்ற பெருமையையும் தன்வசமாக்கிக் கொண்டது இச்சபை. இச்சபையின் ஆரம்பகால தலைவர். செயலாளர். பொருளாளர் ஆகிய முக்கிய பதவிகளை ஏற்று இறைபணியாற்றியவர்கள் முறையே அமரர் மு.செல்லையா ஆசிரியர், செ.கணபதிப்பிள்ளை, அமரர் இ.இராமச்சந்திரன் ஆகியோராகும். அவர்களின் வழிகாட்டலில் இயங்கிய அன்றைய தொண்டர் சபையினர் ஆலய உற்சவ காலங்களிலும், ஏனைய விசேட தினங்களிலும் ஆற்றி வந்த வியத்தகு தொண்டுகள் அளப்பில. எடுத்துக்காட்டாக 1957ஆம் ஆண்டு நடந்த தேர் உற்சவத்தின்போது விசேட ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டு காலை தொடக்கம் மாலை வரை பாரிய நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டு பிரசித்தி பெற்ற சமயப் பெரியார்களை அழைப்பித்து தேவார திருமுறைகள் பாராயணத்துடன் பக்திப் பாடல்களும், சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் "கும்பழாவளைப் பிள்ளையார் கீர்த்தனைகள்" என்ற நூலின் 150க்கும் மேற்பட்ட பிரதிகளை விற்பனை செய்து நிதி திரட்டி தர்மகர்த்தாக்கள் சபையினரிடம் கையளித்துப் பாராட்டையும், ஆசியையும் பெற்றுக்கொண்டனர்.

அமரர் மு.செல்லையா ஆசிரியர் அவர்களின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்து அமரர்கள் வை.க.சிற்றம்பலம், பொ.இராசரத்தினம், க.வேலுப்பிள்ளை, வை.செல்லையா, இ.இராமச்சந்திரன் மற்றும் திருவாளர்கள் பொ.கணபதிப்பிள்ளை, செ.நம்பியாரூரன், செ.செல்வநேசன், வி.விக்னராஜ், செ.சனந்தன் ஆகியோர் தலைமையேற்றுப் பணிபுரிந்த இச்சபையானது 60 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவாகிய வைர விழாவைக் கொண்டாடும் இக்கால கட்டத்தில் திரு அ.மயூரன் அவர்களின் தலைமையில் தொண்டாற்றி வருகின்றது.

"எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரடிகளின் திருவாக்கைத் தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கி வருகின்ற இச்சபையின் பிரதான குறிக்கோள் இளைஞர்கள் மத்தியில் நாஸ்திகம் வளரவிடாது சமயப் பணிகளிலும், ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியைத் தொண்டிலும் ஈடுபடச் செய்து ஆன்ம ஈடேற்றம் பெறச் செய்வதாகும். 1982இல் வெளியிடப்பட்ட உப விதிகளுக்கு அமைய, தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கைக்கொண்டு தர்மகர்த்தாக்கள் சபையுடன் ஒத்து இயங்க வேண்டிய கடப்பாடு இந்தச் சபைக்கு இருக்கின்றது. வருடாவருடம் தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், நிர்வாகசபை உறுப்பினர்கள் பத்துப்பேர், காப்பாளர், கணக்குப் பரிசோதகர் ஆகியோர் உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுவர்.

தொண்டர் சபையினர் தர்மகர்த்தாக்கள் சபையினரின் நெறிப்படுத்தலுக்கு அமைய அவர்களுக்கு உறுதுணையாக இருந்து பல துறைகளிலும் தொண்டாற்றி வருகின்றார்கள். தர்மகர்த்தாக்கள் சபையினர் ஆலய முன்றலில் தென்கீழ் திசையில் இருந்த தனியாருக்குச் சொந்தமான சிறிய வீட்டுடன் கூடிய ஆதனத்தைப் பணம் கொடுத்து கொள்வனவு செய்திருந்தார்கள். அவ்விடத்தில் தர்மகர்த்தாக்களின் பணிமனை உருவாக்கப்பட்டது. தொண்டர்சபையினர் தாம் சிரமப்பட்டுச் சேகரித்த நிதியிலிருந்து ரூபா 14,000 அளவில் செலவிட்டும் சிரமதானப் பணியாலும் தமக்கென பணிமனை ஒன்றை நிறுவியிருந்தார்கள். தர்மகர்த்தாக்கள் சபை அலுவலகத்துடன் இணைந்தாற்போல் இப் பணிமனை அமைந்துள்ளது. கருத்தொருமித்து தர்மகர்த்தாக்கள் சபையுடன் இணைந்து பணியாற்றும் இச்சபையின் பணிமனையில் அதற்குரிய பதிவேடுகள், ஆவணங்கள் யாவும் பேணப்பட்டு வருகின்றது.

தொண்டர் சபையினர் ஆற்றி வருகின்ற பணிகளாவன ஆலய வீதிகள் சுற்றாடல்களை அலகிட்டுச் சுத்திகரித்தல், உள்வீதிகளைக் கழுவுதல், மகோற்சவ காலங்களிலும் மற்றும் விசேட தினங்களிலும் சுவாமி காவுதல், திருவீதி உலாவின்போது தீவர்த்தி, குடை, கொடி, ஆலவட்டம் தாங்குதல், சாமரை வீசுதல், மாதந்தோறும் நடைபெற்று வரும் சங்கிராந்தி தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு விநாயக புஷ்கரணி தீர்த்தக்கேணி இறைப்பும், குமாரத்தி தீர்த்த வளாகத் துப்புரவு செய்தலும், விஜயதசமி அன்று நடைபெறும் மானம்பு விழாவுக்காக மகாத்மா வீதியைத் துப்புரவு செய்து தவளக்கிரி முத்துமாரி அம்பாளை திருவீதி உலாவாக அழைத்து வரல், ஐப்பசி வெள்ளி, மகாசிவராத்திரி, நவராத்திரி ஆகிய விசேட தினங்களில் கதாப்பிரசங்கம், வில் இசை, பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளைத் தொண்டர் சபைக்குரிய நிதியைக் கொண்டு ஏற்பாடு செய்தல், வருடத்தில் இரு தடவைகள் கொன்றலடி வைரவருக்குப் பொங்கல் நிகழ்த்துதல், சுந்தரர் குருபூசையின்போது சைவ வாலிப சங்கச் செயற்பாடுகள் அனைத்துக்கும் ஒத்துழைப்பு வழங்குதல், ஐப்பசியில் சூரசங்காரம், மார்கழியில் கஜமுகன் போர் ஆகிய இரு நிகழ்வுகளையும் வெகு சிறப்பாக நடத்துதல், நவராத்திரி தினங்களில் பிரமாண்டமான கொலு அமைத்தல், திருவெம்பாவை தினங்களில் அதிகாலை வேளையில் வீதிகள் தோறும் திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி ஆகிய திருவாசகப் பாடல்களை ஓதி அடியார்களைத் துயில் எழச் செய்தல், ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் கும்பாபிஷேக தினம் ஆகிய இரு நிகழ்வுகளின்போது யாக அலங்காரப் பந்தல்களை முறைப்படி அமைத்து வழங்குதல், கும்பாபிஷேக தினங்கள் சிறப்பாக நிகழ அனைத்து வகையிலும் ஒத்துழைத்தல், புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெறும் காலப்பகுதியில் பகல், இரவு பார்க்காது துயில் நீத்துப் பாரிய சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல், வெளிநாடுகள் - வெளி மாவட்டங்களில் இருந்து ஆலய தரிசனத்துக்காக வருகை தரும் சமயம் சார்ந்த பிரமுகர்களை வரவேற்று உபசரித்தல் (அமெரிக்க நாட்டு ஹவாய் ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், டென்மார்க் அம்மன் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், ஆத்மஜோதி முத்தையா அவர்கள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்) மின் இயந்திரப் பராமரிப்பும், தொழிற்பாடும், ஒலி,ஒளி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்களால் ஆக்கப்பெற்ற கும்பழாவளை ஸ்ரீ விநாயகப் பெருமான் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை அளவையம்பதி பண்ணிசை வேந்தர்கள் பலரையும் அழைப்பித்து அணி செய் கலைஞர்களின் ஒத்துழைப்புடன் பக்திச்சுவை குன்றாத வகையில் பாடவைத்து ஒலிப்பதிவு செய்வித்தமையும் தினந்தோறும் அதிகாலையில் ஒலிபெருக்கியமையும், அதற்குரிய செலவினங்களையும் சபையே ஏற்றுக் கொண்டமை. (இதில் பங்கேற்ற பாடலாசிரியர் மற்றும் அனைத்துக் கலைஞர்களையும் என்றும் மறப்பதற்கில்லை.)

இது தவிர தேர்த் திருவிழாவின்போது இச் சபையினரின் செயற்பாடுகள் மிகவும் மேலோங்கி நிற்கின்றமை யாவரும் அறிந்ததே. திருவிழா ஆரம்பமாவதற்கு முன்பாக ஆலய வீதிகள், சுற்றாடல்கள் அனைத்தையும் இரவு, பகலாகக் சலிப்பின்றித் துப்புரவு செய்தல், மகோற்சவக் கடைகளை உரிய இடங்களில் அமைத்து வாடகை வசூலித்து தர்மகர்த்தாக்கள் சபையிடம் ஒப்படைத்தல் (இவ்வருவாயில் சிறுபகுதியை தர்மகர்த்தாக்கள் சபை நல்லெண்ண அடிப்படையில் தொண்டர் சபைக்கு வழங்கி வருகின்றது.) தேர் இருப்பு மண்டப இரும்புப் படல்களை எல்லாம் இறக்குதலும் திருவிழா முடிவுற்ற பிற்பாடு திரும்பவும் வழமைபோல் ஏற்றுதலும், அடியார்களின் நலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி திருவீதியில் உள்ள பருக்கைக் கற்களை அகற்றிப் புனிதமாக்குதல், பொதுமக்களின் அனுசரணையுடன் தாகசாந்தி நிலையத்தை நடாத்தி அடியார்களுக்குத் தாகசாந்தி அளித்தல், திருவிழாக் காலங்களில் விசேட ஒலி, ஒளி அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், வாகனங்களைப் பாதுகாத்துக் கொடுத்தல், சன நெரிசலைக் கட்டுப்படுத்தி அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாவகையில் தீவிர கண்காணிப்பு வழங்குதல், 6ஆம் திருவிழாவின்போது குருந்து சப்பை இரதம் அமைத்தல்.

இரவுத் திருவிழாக்களின்போது பாரிய மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவீசும் முக்கூட்டு சப்பை இரதத்தில் மூர்த்திகள் மூவரையும் வீற்றிருக்கச் செய்து பிரமாண்டமான அச் சப்பை இரதத்தை தோளில் சுமந்து கட்டியம் கூறிய பிற்பாடு சகடையில் ஏற்றுதல், திருவிழாக் காலங்களில் உபயகாரர்களால் நடாத்தப்படும் அன்னதான நிகழ்வுகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்குதல், தேர் அன்னதானத்தன்று தேர் அன்னதான சபையினருடன் இணைந்து முழு ஆதரவையும் வழங்கிச் சிறப்பாக நடத்தி முடித்தல், அதேவகையில் பூங்காவன உற்சவத்தன்று அமரர் மு.சின்னத்தம்பி அவர்களின் ஞாபகார்த்த அன்னதானப் பொறுப்பை அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க முற்றுமுழுதாக ஏற்று நடாத்துதல், தேர் உற்சவத்தின் போது வீதிகள் பூராவும் தண்ணீர் தெளித்து, மகர தோரணங்கள், வாழைகள், நந்திக் கொடிகள், மின் விளக்குகளால் விசேட அலங்காரம் செய்து இந்திரவிழா போன்று விளங்கச் செய்தல், மூர்த்திகள் மூவரையும் தனித்தனியாக சிம்மாசனங்களில் ஆரோகணிக்கப் பண்ணி ஆனந்த நடனமாக ஆடி ஆடி, தவில் நாதஸ்வர கானமழை பொழிய பக்தகோடிகளின் அரோகரா கோஷம் வானைப் பிளக்க மலர் மாரி பொழிய தேருக்கு எழுந்தருளப் பண்ணுதல், அன்றைய தினம் பண்ணிசை, நடன, சொற்பொழிவு நிகழ்ச்சிகளை சிறப்பான வகையில் ஒழுங்குசெய்து நடாத்துதல்.

நாடறிந்த பிரபல்யமான சமயப் பெரியார்கள், அறிஞர்கள் ஆகியவர்களை அழைத்து அருளாசி வழங்குவித்தல் (கடந்த காலங்களில் தொண்டர் சபையினரின் அழைப்பை ஏற்று பல வருட காலமாகத் தொடர்ந்து வருகை புரிந்து அருளாசிகள் வழங்கி ஊக்குவித்து இன்று அமரத்துவம் பெற்றுள்ள அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா, துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, விகடகவி மு.திருநாவுக்கரசு அவர்கள் ஆகிய மூவரையும் நினைவு கூர்ந்து, இன்றும் அவர்களது பணியைத் தொடருகின்ற கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஐயா அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.)

தேர்த் திருவிழாவன்று மாலை வேளையில் தேர் முட்டியில் மூர்த்திகள் மூவருக்கும் பச்சை சாத்தப்பெற்று, பஞ்சமுகார்ச்சனை இடம்பெற்று, உலகப் புகழ்பூத்த தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் கான மழையின் மத்தியில் பூமாரி பொழியவும், பக்தர்களின் அரோகரா ஒலி அதிரவும் சிம்மாசனங்களில் வீற்றிருக்கும் மூர்த்திகளைத் தமது தோளில் சுமந்து மெது மெதுவாக ஆடி ஆடி ஆலயத்துக்கு எடுத்துவரும் கண்கொள்ளாக்காட்சியை வர்ணிக்கவே முடியாது. (பன்னெடுங்காலமாக தெட்சணை மட்டும் பெற்றுக்கொண்டதேயன்றி மேலதிகமான எதுவித கொடுப்பனவுகளையும் எதிர்பாராது கான மழை பொழிந்து மகிழ்வித்த அளவெட்டி மண்ணின் மைந்தர்களாகிய அமரர் லயஞானகுபேரபூபதி தெட்சணாமூர்த்தி குழுவினர், கலாபூஷணம் என்.கே.பத்மநாதன் குழுவினர், குமரகுரு குழுவினர், சிதம்பரநாதன் கேதீஸ்வரன் குழுவினர், எம்.பி.பாலகிருஸ்ணன் குழுவினர், சுதந்திரன் குழுவினர் மற்றும் எண்ணிலடங்கா தவில் நாதஸ்வர சக்கரவர்த்திகள் அனைவரினதும் மாண்புமிகு பணியைத் தொண்டர் சபையினர் என்றும் நினைவில் கொண்டிருக்கின்றனர்.)

தீர்த்த உற்சவத்திலன்று சுவாமி தீர்த்தக் கேணிக்கு எழுந்தருளும்போது அனைத்துத் தொண்டர்சபை உறுப்பினர் களும் அணிவகுத்துக் கொடி - குடை - ஆலவட்டம் ஆகியவற்றைத் தாங்கிச் செல்லுதல், கடந்த காலங்களில் திருவிழாப் பூர்த்தியாகி மகோற்சவ குருவுக்குரிய கௌரவிப்பைத் தொடர்ந்து அவர்களைப் பல்லக்கில் அமர்த்திச்சென்று குருவின் இல்லத்தில் சேர்த்து மீண்டவர்களும் தொண்டர் சபையினரே. தேவையேற்படும்போது அயலில் உள்ள ஆலயங்களுக்கும் சென்று தொண்டாற்றி வருகின்றனர் இச் சபையினர்.

இது நிற்க, மேலே குறித்துரைக்கப்பட்ட சமயப் பணிகளுக்கு மேலதிகமாகச் சமூகப் பணிகளையும் ஆற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே. தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராகப் பணியாற்றிய அமரர் செ.சச்சிதானந்தம் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க முன்னாள் தொண்டர் சபைத் தலைவராக இருந்த திரு.செ.நம்பியா ரூரன் அவர்களுடைய பகீரதப் பிரயத்தனத்தால் 1997 இல் கும்பழாவளை பாலர் கல்விச் சோலை என்ற முன்பள்ளி ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தொண்டர் சபையின் பணிமனையில் இயங்கிவந்த மேற்படி முன்பள்ளி காலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமத்தில் பரிணாம வளர்ச்சி பெற்று இன்று ஆலயத்தின் மேற்குப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற கட்டடத்தில் இயங்குகின்றது.

இரு ஆசிரியைகளின் நெறிப்படுத்தலில் பயின்ற மாணவர்களிற் பலர் இன்று அயற் பாடசாலைகளில் முன்னணி மாணவர்களாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை சிறார்களின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. பரிசில்கள் வழங்குவதற்கு நிதி உதவி புரிந்த புலம்பெயர்ந்து வாழும் மூத்த தொண்டர் சபை உறுப்பினர்கள், அன்பர்கள், அனுதாபிகள் குறிப்பாக அபிஷா கட்டடப் பொருள் உற்பத்தி விற்பனவு நிலையம் மற்றும் வி.எஸ்.என். கட்டடப் பொருள் உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் உரிமையாளர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்களே. வசதி குறைந்த பெற்றோர்களின் மழலைச் செல்வங்களுக்கு இலவசக் கல்வி கிடைக்க அனுசரணை வழங்கி வரும் அமரர் மு.சின்னத்தம்பி குடும்பத்தினரும் என்றும் போற்றப்பட வேண்டியவர்கள்.

சிவராத்திரி மற்றும் இரதோற்சவம் ஆகிய விழாக்களின்போது மேற்படி சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சிறார்கள் மத்தியில் பண்ணிசைப் போட்டியை நடாத்தி, மகா சிவராத்திரி தினத்தன்று சைவ வாலிப சங்கத்தினரால் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி போட்டிகளின் நடுவர்களாகப் பணியாற்றி வரும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்கள் சங்கீதபூஷணம் திரு. வி.கே.நடராசா, திருமதி விமலாதேவி நாகேஸ்வரன் ஆகியோருக்கு தொண்டர் சபையினர் கடமைப்பட்டுள்ளார்கள். கும்பழாவளை முன்பள்ளிக்கு இச்சபையின் மூத்த உறுப்பினர்களாகிய புலம்பெயர்ந்து வாழும் திருவாளர்கள் த.தேவரஞ்சன், ந.கேதாரன் ஆகியோரின் நிதிப் பங்களிப்பால் விளையாட்டு முற்றம் ஒன்று கிடைக்கவிருக்கின்றது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து தொண்டர் சபையினர் பல தடவைகள் குருதிக்கொடை வழங்கியதுடன், மருத்துவ முகாம்களையும் ஒழுங்குசெய்து நடாத்தியுமுள்ளார்கள். மரம் நடுகை போன்ற பணிகளிலும் சிரமதான வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பாதுகாப்புப் படையினர் தமது பாதுகாப்புக்காக அமைத்திருந்த இராணுவப் பாதுகாப்பு அரண்கள், பதுங்குகுழிகளை முன்னாள் தலைவர் திரு. செ.நம்பியாரூரன், தொண்டர் சபை இளைஞர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உதவியுடன் அகற்றி வழிபாட்டுக்கு வசதி செய்திருந்தார். உயிரைப் பணயம் வைத்துச் செயற்பட்ட இப்பணியானது போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். கடந்த காலங்களில் நுண்கலை மன்றம் ஒன்றை உருவாக்கிப் பண்ணிசை, மிருதங்கம், வயலின், நடன வகுப்புக்களைத் துறைசார்ந்த கலைஞர்களின் நெறியாள்கையில் நடத்தி வந்துள்ளார்கள். இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒன்றும் உள்ளது.

திருவிழா உபயகாரர்களின் நிதிப் பங்களிப்புடன் பன்னிரண்டு நாள்களும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் கம்பராமாயணம் தொடர் சொற்பொழிவை ஏற்பாடு செய்திருந்தார்கள். பூர்த்தியிலன்று (இராம பட்டாபிஷேகம்) சிறிய சலசலப்பு ஏற்பட்டபொழுது அதைச் சாதுரியமாகச் சமாளித்து வெற்றிகரமாக நிறைவேற்றி வழிபடுவோருடைய பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஆரம்பகாலங்களில் அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையின் மூலம் நிகழ்ச்சிகளுக்குரிய நிதியைத் திரட்டிய சபையினர் சிலருடைய ஆட்சேபனைகளுக்கு மதிப்பளித்து சீட்டு விற்பனையை நிறுத்திவிட்டு மாபெரும் விற்பனையின் மூலம் நிதியைச் சேகரித்தனர். மேற்குறிப்பிட்ட வகையில் திரட்டிய நிதி அன்பர்கள் மனமுவந்து வழங்கிய அன்பளிப்பு நிதி ஆகியவற்றை ஒன்று சேர்த்து அவற்றை நிகழ்ச்சிக்குரிய நிதி மற்றும் தொண்டர்களின் நலன்புரி நிதி என்று வகைப்படுத்தி அவற்றைத் தர்மகர்த்தாக்கள் சபையிடம் கையளித்து ஒப்புதல் கடிதம் பெற்றுள்ளார்கள். மேற்படி நிதிகள் யாவும் தர்மகர்த்தாக்கள் சபையால் வைப்பகத்தில் நிலையான வைப்பிலிடப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருடாந்த வட்டியைப் பெற்று நிகழ்ச்சிகளைச் செவ்வனே நடத்தி வருகின்றார்கள்.

அமரர் இ.இராமச்சந்திரன் அவர்கள் இச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடத்திய காலம் தொண்டர் சபை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. பாரிய சிக்கலான முரண்பாடுகள், கருத்து வேற்றுமைகள் தலைதூக்கிய தருணங்களில் அவற்றைத் தமது மதிநுட்பத்தால் இலகுவாகத் தீர்த்து வைத்து வெற்றி கண்ட பெருமைக்குரியவர் இவர் என்றால் அது சளக்குரையன்று. தொண்டர் சபையின் வெள்ளி விழாவைத் தனது பயிற்சிப் பட்டறையில் வளர்ந்த மூத்த உறுப்பினர்களின் ஒத்துழைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடன் நடாத்தி வைத்த பெருமைக்குரியவரும் இவரே. அன்னாருடைய தன்னலமற்ற இறைபணியைத் தொண்டர் சபையினர் என்றுமே மறக்கமாட்டார்கள்.

தொண்டர் சபையினரின் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்றிறனை நோக்குமிடத்து அமரர் இ.இராமச்சந்திரன் அவர்களின் சமகாலத்தவரும், தர்மகர்த்தாக்கள் சபையில் பன்னெடுங்காலமாகக் கௌரவ செயலாளராகவும், பொருளாளராகவும் அப்பழுக்கற்ற பணியாற்றியவரும், பல பாரிய திருப்பணிகளை முன்னின்று நடாத்தி வைத்தவரும் சைவப் பெரியாருமாகிய மூதறிஞர் அமரர் அ.விஸ்வநாதன் அவர்கள் 01.10.1963 தொடக்கம் 31.09.1968 வரையான காலப்பகுதிக்கான ஐந்தாண்டு காலச் செயற்பாட்டு அறிக்கையில் தொண்டர் சபையினரின் மகத்தான பணியை வியந்து பின்வருமாறு பாராட்டு வழங்கியுள்ளமை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

"தொண்டர் சபையைச் சேர்ந்த இளைஞர்கள் அனைவரும் ஆலயத்தோடு சம்பந்தப்பட்ட எந்த வேலையைச் செய்வதற்கும் பின்நின்றதேயில்லை. சிரமதானமாக இவர்கள் ஆற்றிவரும் பணிகளோ பல. கூரை வேலைகளுக்காக அரியப்பட்ட பாரிய தீராந்திகளையும் பனை மரங்களையும் தூக்கியடுக்கியவர்கள் இவர்கள்தான். பழைய ஓடுகளைக் கழுவிப் புதியனபோல் செய்தவர்களும் இவர்கள்தான். ஓடுகளை இறக்கவோ பின்னர் போடவோ சகல வேலைகளையும் வெயில், காற்று, அடைமழையெனப் பின்னிற்காது மனமுவந்து செய்பவர்கள் தொண்டர்சபை இளைஞர்களே"

கும்பழாவளை தொண்டர் சபையின் சமய சமூகப் பணிகள் பற்றிய குறிப்புக்களைப் பின்வரும் ஆவணங்களில் பரக்கக் காணலாம்.

1. "வேரூன்றி விழுது பரப்பும் ஆலமரம்" என்ற அளவெட்டி வரலாற்று நூல் தொகுப்பு
2. கும்பழாவளை தல வரலாற்று நூல்
3. கும்பாபிஷேகச் சிறப்பு மலர் 2002
4. கும்பாபிஷேகச் சிறப்பு மலர் 2015

மேலும் அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவர் அவர்களினால் ஆக்கி வழங்கப்பட்ட "திருப்பள்ளியெழுச்சி" எட்டாம் திருப்பாடலில் "மன்னிய மயில்வாகனத்தொடு கருத்து மருவுபல் தொண்டரும் பணி செய நயந்து" என வரும் பாடல் வரிகளை உற்று நோக்கின் தொண்டர் சபையின் பெருமை உள்ளத்தை நிறைக்கும்.

தொண்டர் சபையினர் இதுவரை காலமும் ஆற்றி வந்துள்ள சமய, சமூகப் பணிகள் பலவற்றையும் இரத்தினச் சுருக்கமாகத் தொகுத்துப் பார்க்குமிடத்து

| | | |
|---|---|---|
| 1968 - 1973 | 1 | பழைய இராஜகோபால் மடம் தகர்க்கப்பட்டு இப்பொழுதிருக்கும் இடத்தில் புதிதாக நிறுவிய வேளையில் புரிந்த பாரிய சிரமதானம். |
| | 2 | பிரதி வெள்ளி (சுக்கிரவாரம்) தோறும் அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்களைக் கொண்டு சங்கீத கதாகாலட்சேபம் நடத்தியது. |
| 1976 - 1977 | | ஆவணிச் சதுர்த்தியிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு சதுர்த்தி தினத்திலும் சமயச் சொற்பொழிவுகளை ஒழுங்குசெய்து நடாத்தியது. |
| 1978 - 1979 | 1 | தொண்டர் சபைக்கெனப் பணிமனை நிறுவியது |
| 1980 - 1981 | 2 | செல்வி. வாசுகி இராமச்சந்திரன் அவர்களுடைய பரதநாட்டிய அரங்கேற்றம் வெகு விமரிசையாக நிகழ ஒத்துழைப்பு நல்கியமை |
| | 3 | தேர்முட்டி மற்றும் மூன்று தேர்களும் ஒரே கூரையின் கீழ் நிறுத்தக் கூடிய மிகப் பிரமாண்டமான தேர் இருப்பு மண்டபம் ஆகியவற்றின் நிர்மாணிப்புத் திருப்பணிகளுக்கு இரவு பகலாக சிரமதானம் செய்ததுடன் சபை நிதியிலிருந்து ரூபா 3000 அன்பளிப்பாக வழங்கியமை. |
| | 4 | தொண்டர் சபையின் வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது |
| 1982 | | சிற்சில திருத்தங்களை மேற்கொண்டும் புதிய பாடல்களை உட்புகுத்தியும் கும்பழாவளை தோத்திரத்திரட்டு நூல் வெளியிட்டது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1983 - 1984 | 1 | அமரர் செ.மயில்வாகனம் ஞாபகார்த்த வாசிகசாலை உருவாக்கத்துக்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்கியது. |
| | 2 | ஆலய முன் வீதியை ஊடறுத்து வாகனங்கள் செல்லா வகையில் வீதி மறிப்பு செய்த பணிக்குச் சீர உதவிகளை வழங்கியது. |
| 1987 | | திருவிழாக் காலங்களில் வசந்த - ஸ்தம்ப மண்டபங்களுக்கு வெள்ளை கட்டும் பணியை மேற்கொண்டது. |
| 1994 | | அமரர் சிவஸ்ரீ சோ.வெங்கடேஸ்வரக் குருக்கள் (முருகையர்) சேவைநலன் பாராட்டு விழாவுக்கு சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கியது. |
| 1996 | | இராணுவப் பாதுகாப்பு அரண்கள் அகற்றப்பட்டமை |
| 1997 | | கும்பழாவளை பாலர் கல்விச்சோலை என்ற முன்பள்ளி நிறுவியது. |
| 1998 | | கலாபூஷணம் வ.க.நடராசா அவர்களின் மணிவிழாவை அவர்களுடைய மாணவர்களுடன் இணைந்து சிறப்பான முறையில் நடாத்தியமை |
| 2001 - 2002 | | தேவஸ்தான பாரிய புனர்நிர்மாணத் திருப்பணியின்போது கட்டட ஒப்பந்தகாரர்களுடன் ஒத்துழைத்து சகல பணிகளையும் இரவு பகலாகத் தொடர்ந்து ஆற்றியமை. கட்டட இடிபாடு களை அகற்றும் பொறுப்பை ஏற்றுச் சிறப்பாக நிறைவேற்றியமை. குமாரத்தி தீர்த்த வளாகம் முழுவதும் மண் கொட்டி ஒப்புரவு செய்தமை. எண்ணற்ற உழவு இயந்திரங்களை அமர்த்தி குளக்கட்டிலிருந்து மண்ணை எடுப்பித்து முகப்பு வீதி மற்றும் தாழ்ந்த பகுதிகள் எங்கும் நிரவி வெள்ளம் தேங்கி நிற்காவண்ணம் செய்த சிரமதானப்பணி. புனராவர்த்தன மகா கும்பாபிஷே கத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற மண்டலாபிஷேகங்களையும் மிகவும் விமரிசையாக நடாத்த சகல வழிகளிலும் தொண்டாற்றியமை |
| 2008 | | புராண வித்தகர் மு.செல்லையா அவர்களின் ஆக்கமாகிய "விநாயகர் அகவல் உரையுடன்" என்ற நூல் வெளியீட்டு விழாவை ஆலய தர்மகர்த்தாக்கள் சபை, அளவெட்டி சைவ வாலிப சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தியமை |
| 2011 | | அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர், ஆசிரியர் மு.செல்லையா, கவிஞர் இளையதம்பி யோகேந்திரன் போன்றவர்கள் யாத்து தென்னிந்தியப் பிரபல பாடகர்களாகிய உன்னிகிருஸ்ணன், உன்னி மேனன், சீர்காழி சிவசிதம்பரம் ஆகியோரின் குரல்வழி மெருகேற்ற தொண்டர் சபையின் மூத்த உறுப்பினர் திரு.செல்லையா ஸ்ரீகாந்தன் அவர்களின் தயாரிப்பில் உருவாக்கம் பெற்ற "கும்பழாவளை ஐங்கரனின் இசைமாலை" என்ற இசைப்பேழை வெளியீட்டு விழா சிறப்பாக நிகழ வெளியீட்டுக் குழுவினருக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கியமை. |
| 2012 | | மூத்த உறுப்பினர் திரு.அமிர்தலிங்கம் கிருபன் அவர்களின் வரிகளில் இசைப்பிரியனின் இசையில் தொண்டர் சபையினர் ஏற்பாடு செய்த இசைப்பேழை விழா திரு.செ.சனந்தன் அவர்களின் தலைமையில் திறம்பட நிகழ்த்தியது. |
| 2015 | | 12 வருடங்கள் கழித்து நடைபெற்ற மகா கும்பாபிஷேக நிகழ்வுக்கு உறுதுணையாக இருந்து நடாத்தியது. |
| 2016 | | குருதிக் கொடை வழங்கியது. மருத்துவ முகாம் நடாத்தியமை |

அர்ப்பணிப்புடன் இறைபணியில் ஈடுபட்டு கும்பழாவளை சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் யாழ்.குடாநாட்டில் பலராலும் போற்றிப் புகழ உறுதுணையாய் இருந்து தொண்டாற்றிய தொண்டர் சபையின் மூத்த உறுப்பினர்கள் பலர் காலப்போக்கில் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவர்களாகவும் உறுப்பினர்களாவும் பணியாற்றியுள்ளமை யாவரும் அறிந்ததே. மற்றும் பலர் புலம்பெயர்ந்து வாழ்வாங்கு வளமான வாழ்க்கை நடாத்தி வருகின்றனர். வேறு பலர் ஈழ மண்ணில் அரச, தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகள் வகிப்பதையும் யாவரும் அறிவோம். இவர்களுடைய பங்களிப்பும், அன்பளிப்புக்களும் தொண்டர் சபைக்கு இன்றும் கிடைத்து வருகின்றது. நடைபெறப்போகும் 60ஆம் ஆண்டு பூர்த்தி விழாவுக்கும் நிதி உதவியை வழங்கி, சிறப்பாக நடாத்த இவர்கள் அனைவரும் காத்திருக்கின்றார்கள். தொண்டர் சபையின் முன்னோடிகளாகத் திகழ்ந்து அமரத்துவம் அடைந்த இறைபணியாளர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக. தொண்டர் சபையினரின் இறைபணியும், சமூகப் பணியும் முட்டின்றித் தொடரக் கும்பழாவளை சந்திரசேகர விநாயகர் அருள்பாலிப்பாராக.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"
"எம்கடன் பணி செய்து கிடப்பதே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவிழாக் கண்ட தொண்டர் சபையினர்



"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர்கள்





"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழா பண்ணிசை நிகழ்ச்சியும், ஆசியுரை வழங்கியோரும்


அருட்கவி சீ. வினாசித்தம்பி


செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி




திரு. மு. திருநாவுக்கரசு


செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு திருமுருகன்

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பைரதம்



பிள்ளையார், முருகன், சிவன், அம்மன் இணைந்த ரதங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர்சபை : சில நினைவுகள், மனவாழ்த்துக்கள்



**மகேன் சுப்பிரமணியம்**
*முன்னாள் செயலாளர்,*
*கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபை*
*(1970 இன் பிற்பகுதி 1980 இன் முற்பகுதி)*

அருள்மிகு கும்பழாவளைப் பிள்ளையார் திருப்பாதம் பணிந்து ஆலய தொண்டர் சபை ஆரம்பிக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் நிறைவு செய்து அறுபத்து ஓராவது வருடத்தில் தடம் பதிக்கின்ற இவ்வேளையில் இந்த நீண்ட நெடிய காலத்தின் ஒரு பகுதியில் சிறுவயதிலிருந்தே சபையில் இணைந்து பணி புரிந்து பின்னர் செயலாளராகப் பணி செய்யும் திருவாய்ப்பை அருளிய கும்பழாவளைக் கொம்பனுக்கு நன்றி கூறி, சில நினைவுகளைப் பக்தியுடன் பதிவு செய்கிறேன்.

1970 இன் பிற்பகுதியிலும் பின்னர் 1980 இன் முற்பகுதியிலும் தர்மகர்த்தாக்கள் சபை, தொண்டர் சபை, அலுவலகக் கட்டட வேலை, மூன்று தேர்களும் நிற்கக்கூடியதாக கம்பீரமாக காட்சியளிக்கும் தேர் கொட்டகை கட்டட வேலை, என்பவற்றிற்கு மேசன்மார்களுடன் சேர்ந்து ஆலய தொண்டர் சபை உறுப்பினர்களும் வேலை செய்து அத்திருப்பணிகளை நிறைவு செய்து தர்மகர்த்தாக்கள் சபையினரின் பொருளாதாரச் சுமையைக் குறைத்ததனை நினைவு கூருகின்றேன்.

இதே காலப்பகுதியில் தான் ஆலயத்தின் வடக்கு வீதியில் வீற்றிருக்கும் கொன்றலடி வைரவருக்கு சிறு ஆலயம் அமைத்து பொங்கல் விழா ஆரம்பிக்கப் பட்டது. வருடா வருடம் திருவிழாவின் போது தொண்டர்சபை நிதிக்காக நடந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முறையை மாற்றி மகோற்சவ ஞாபகார்த்த மாபெரும் விற்பனை என்ற நிதி சேகரிக்கும் முறையை அறிமுகப்படுத்தியதும் இதே காலப் பகுதியிலேயாகும். தேர்த் திருவிழாக்களின் போது அன்னதானம் அறிமுகப் படுத்தப்பட்டதும் இதே காலப்பகுதியிலேயாகும். தொண்டர்சபைக்கென சொந்தமாக ஒலிபெருக்கி உபகரணங்கள் வாங்கப்பட்டதும் ஆலயத்திற்கான திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்களால் இயற்றப்பட்டு அளவெட்டி வாழ் சங்கீதக் கலைஞர்கள் பாடி ஒலிப்பதிவு செய்யப்பட்டு அதிகாலையிலே திருப்பள்ளி எழுச்சி ஒலிபரப்பும் முறையும் இக்கால கட்டத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. தேர்த்திருவிழாவின் போது தேர்கள் திருவீதி உலா வரும் வேளையிலே பக்க வாத்தியங்கள் சகிதம் பண்ணிசை நிகழ்வுகள் அலுவலகத்திற்குள்ளேயே பாடப்பட்ட நிலையை மாற்றி ஆலயத் தேர்முட்டிக்கு முன்பாக மேடை அமைத்து அதிலே பண்ணிசை நிகழ்வுகளை நடத்தும் முறையும் இக்காலகட்டத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. அமரர்திரு.இ.இராமச்சந்திரன் அவர்களது தலைமையில் தொண்டர் சபையின் 25 ஆம் வருட வெள்ளி விழாவும் இதே காலப்பகுதியில் (1981ஆம் ஆண்டு) மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானறிந்த வரையில் இலங்கையிலேயே ஆலயத்திற்கென தொண்டர்சபை ஆரம்பிக்கப்பட்டது எமது கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் தான். அமரர்கள் திரு.செ.மயில்வாகனம் அவர்கள், திரு.செ.செல்லையா அவர்கள், திரு.முருகேசு மாஸ்டர் அவர்கள், திரு.இ.இராமச்சந்திரன் அவர்கள், ஆகியோரது முயற்சியாலும் இன்னும் பல பெரியவர்களது ஒத்துழைப்பாலும் உருவாகி விருட்சமாக 60 அகவை கடந்து 61ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையிலே தற்போது மிகச் சிறப்பாக தொண்டாற்றி வரும் தொண்டர் சபையினரை வாழ்த்துவதுடன், சபை மேன்மேலும் வளர்ந்து பவளவிழா, நூற்றாண்டு விழாவினையும் கண்டு தொடர எல்லாம் வல்ல கும்பழாவளைக் கொம்பன் திருவருள் பாலிப்பாராக.

"எம் கடன் பணி செய்து கிடப்பதே"

**வாசித்து – யோசித்து – நேசித்தவை** —தொகுப்பு : அளவை "வாசக பாரதி"—

"சமயத்தின் பெயரால் சண்டை பல செய்து , உயிர்களைக் கொன்று, தெய்வ சந்நிதானங்களை அழித்து, ஆயிரமாயிரம் அனர்தங்களை, அநியாயங்களை, இறைவனின் பெயரால் இழைப்பதை இன்றும் காண்கின்றோம். விண்ணில் விந்தைகள் புரியும் நிலையிலும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ மக்கள் கூட்டம் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. எமக்குள்ளே ஆயிரம் வித்தியாசங்கள் அன்பு, ஈகை,இரக்கம் இன்றிச் சமரசமற்ற போக்கினால் எத்தனை சண்டை! ஆயிரம் அழிவு! அநியாய இழப்புக்கள்!"

*- திரு.த.ந.பஞ்சாட்சரம் (ஆங்கில ஆசிரியர்) நீர்வேலி.*

ஒரு சமூகத்தின் அடையாளங்கள் அதன் கலை, கலாசாரம், மொழி, சமயம் ஆகியவையெனக் கூறலாம். இவற்றினைப் பேணுவதற்கும் அவற்றின் மூலம் சமூகக் கட்டுக்கோப்பைக் காப்பதற்கும், திருத்தலங்கள் பெருமளவில் உதவுகின்றன. இன்று போரினால் நலிந்திருக்கும் எமது சமுதாயம் பொருளாதார ரீதியில் மிகவும் கீழ் நிலையில் உள்ளது. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவு. இதனைத் தானும் முழுமையாகப் பெறமுடியாது எமது மக்களில் பலரும் தவிக்கின்றனர். இந்நிலையினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான பணத்தினைப் பெற்று அதன்மூலம் எமது மக்களை மதம் மாற்றுவதில் ஒரு சில அமைப்புக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. எனவே சைவ மன்றங்களும் ஆலயங்களும் மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும் அருள்நெறிக்கும் வழிகாட்டிகளாக இருந்தால் மட்டும் போதாது. இன்றைய காலகட்டத்தில் அவை நலிந்த எமது மக்களின் துயர்தீர்க்க முன்வரவேண்டும். நாட்டின் நீதி, நிர்வாக அமைப்பின் மையமாகக் கோயில்கள் அமைந்திருந்த வரலாற்றுப் பெருமைக்குரியவர்கள் தமிழர்கள்.

மக்கள் வழிபடவும், சமுதாய நோக்கில் கூடி வாழவும் திருக்கோயில்கள் பயன்படும். இசையும் கலையும் திருக்கோயில் வளாகத்தில் வளரும். நல்வாழ்க்கை வாழ்வதற்குச் சான்றோர் துணைசெய்வர். திருக்கோயில் தழுவிய சமுதாய அமைப்பே அறநெறி சார்ந்ததாக அமைந்து தேச மேன்மைக்கு உதவும்"

- திரு.அ.பஞ்சலிங்கம்
*(ஓய்வுபெற்ற அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி,யாழ்.இந்துக் கல்லூரி) உரும்பிராய்.*

*"தாவர லிங்கம் பறித்து ஒன்றில் தாபித்தால்*
*ஆதவன் முன்னே அரசு நிலை கெடும்*
*சாதவன் முன்னே பெரு நோய் அடுத்திடும்*
*காவலன் பேர் நந்தி கட்டு உரைத்தானே* (திருமந்திரம்)

ஒரு கோயிலில் வைக்கப்பட்டு இருந்த லிங்கத்தைப் பெயர்த்து எடுப்பதால் வரும் வினையை அந்நாட்டை ஆளும் தலைவனும் அனுபவிப்பதோடு இவற்றுக்குக் காரணமாக இருந்தவர்கள் இறப்பதற்கு முன் கொடிய நோய்களைச் சந்திப்பர் என நந்தியெம்பெருமான் தமக்கு உரைத்தாகச் சித்தர் பெருமானாகிய திருமூலர் விளக்குகிறார். பிறர் ஸ்தாபித்து வழிபாடு ஆற்றிய கோயில் இறை விக்கிரகத்தை எவர் பெயர்த்து எடுத்தாலும் அதனால் ஏற்படும் பாங்களை நாடே அனுபவிக்கும் என விளக்குகின்றார்"

- செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபை ஆரம்பமும், அதன் பின்னணியும்

**செ.சுப்பிரமணியம்**
*தொண்டர் சபையின் ஆரம்பகால அங்கத்தவர்.*



கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபை இப்பொழுது 60 வருடங்களைத் தாண்டி திருப்பணி வேலைகளில் மிகவும் விருத்தி அடைந் திருப்பதைப் பார்க்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கின்றது. இச்சபையின் கடந்தகால, நிகழ்கால சேவைகள் பற்றிய விபரங்களை இம்மலரில் உள்ள ஏனைய கட்டுரைகள், அறிக்கைகள் மூலம் யாவரும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆகையால் நான் ஒரு ஆரம்பகால அங்கத்தவர் என்ற முறையில் இச்சபையின் ஆரம்பத்தின் பின்னணி பற்றியும், அப்போதைய சேவைகள் பற்றியும் யாவருடனும் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

அந்த நாட்களில் தர்மகர்த்தா சபையினர், அந்தணக் குடும்பத்தினர் மற்றும் ஊர் மக்கள் யாவரும் ஒற்றுமையாகவும், விநாயகப் பெருமானில் அபரிமிதமான பக்தியுடன் கோவிலைப் பராமரித்து வந்தார்கள். அப்பொழுது சில சேவைகள் வாரம் தோறும் நடந்த வண்ணம் இருந்தன. இதில் வெவ்வேறு வயதுடைய ஆண்களும் பெண்களும் தங்களுக்கேற்பத் தொண்டுகளைச் செய்து வந்தார்கள். நானும் என்னைப்போல வாலிப வயதுடைய வேறு சிலரும் வழக்கமாகச் செய்யும் தொண்டுகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1950களில் அளவெட்டியில் மின்சாரம், குழாய்த்தண்ணீர் போன்ற வசதிகள் இருக்கவில்லை. ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையில் உள் நான்கு வீதிகளையும் தண்ணீர் ஊற்றிக் கழுவுவது தவறாமல் நடக்கும் நிகழ்வு. வீதிகளில் 7,8 பெண்கள் விளக்குமாறால் கழுவுவார்கள். எங்கள் வேலை ஒருவர் தண்ணீர் இறைத்து வாளிகளை நிரப்ப, மற்றவர்கள் கிணற்றடியில் இருந்து தண்ணீர் கொண்டுபோய் ஊற்றி உதவுவது. எங்களில் 8,10 பேர் ஓயாமல் வேலை செய்தால் ஒரு 2,3 மணித்தியாலத்தில் கழுவி முடியும்.

இதைவிட வெள்ளிக்கிழமைகளில் இரவு பூசைக்கு முன் வீதிகளில் தொங்க விட்டிருக்கும் மண் எண்ணெய், கண்ணாடி விளக்குகளை எல்லாம் சுத்தம் செய்து எண்ணெய் நிரப்பி, தேவைப்படின் திரிகள் மாற்றி கொழுத்தி பழையபடி தொங்கவிட வேண்டும். இவை வழக்கமாக நடைபெறும் பணிகளில் சில.

இதைவிடத் திருவிழாக் காலங்களில் வெளி வீதிகளில் உள்ள புல் பூண்டு களை அகற்றி, வீதிகளைக் கூட்டிச் சுத்தம் செய்வதெல்லாம் எங்கள் வேலை. திருவிழா நாட்களில் சிறு வியாபாரிகள் முன் வீதி ஓரங்களில் தற்காலிகக் கடை விரித்து வியாபாரம் செய்வார்கள். அவர்களுக்குத் தேவையான ஒழுங்குகள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதும் நாங்கள் தான். தேர்த் திருவிழாவிலன்று ஒலிபெருக்கி பிடித்து நாள் முழுவதும் பக்திப் பாடல்கள் பாட வைப்போம். காலையில் வெளி வீதி முழுவதும் தண்ணீர் அடித்து பிறதட்டை பண்ணும் பக்தர்கள் உட்பட அனை வருக்கும் வெய்யிலின் பாதிப்பு குறையும்படி செய்வோம். இவை யாவும் இப்பொழுதும் நடைபெறும் விஷயங்கள் தான். ஆனால் அப்பொழுது இன்று போல் வசதிகள் இருக்கவில்லை.

இப்படியான சூழ்நிலையில் தான் தொண்டர் சபை ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் முதலாம், இரண்டாம் பூசைகளுக்கிடையில் நாங்கள் சிலர் கூடிக் கதைத்து தான் பொழுது போக்குவோம். இப்படியான வேளையில் தான் ஒரு நாள் இராமச்சந்திரன், கணபதிப்பிள்ளை, சிவலிங்கம் (எனது அண்ணன்) மற்றும் நான் எல்லோரும் கூடிப் பேசிக் கொண்டிருக்கும் போது, நாங்கள் ஒரு நிரந்தரக் குழு அமைத்து, கோவில் திருப்பணி வேலைகளுக்கு தர்மகர்த்தா சபைக்கு எம்மால் செய்யக்கூடிய உதவிகளைச் செய்வதென முடிவு செய்தோம். இதற்கு வித்திட்டவர் இராமச்சந்திரன் தான். அப்பொழுது இப்படி ஒரு அமைப்பு மற்றைய கோவில்களில் இருந்ததாகக் கேள்விப்பட்டதில்லை. இந்த யோசனையை எங்களுக்குள் விவாதித்து பின் தர்மகர்த்தா தலைவர் திரு.மயில்வாகனம் உள்ளிட்ட மற்றைய அங்கத்தவர்களிடம் ஆலோசனை கேட்டோம். இதில் அவர்கள் காட்டிய அக்கறையும், ஆதரவும் எமக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தந்தன. பின் ஆரம்ப ஒழுங்குகள் எல்லாம் செய்து ஒரு நாள் தர்மகர்த்தா சபை அங்கத்தவர்கள் கோவிலில் வழமையாகத் தொண்டு செய்பவர்கள், அந்தணர்கள் மற்றும் எம்மைச் சார்ந்த வயதுடையவர்கள் யாவரையும் அழைத்துக் கோயில் பெரிய மடத்தில் ஒரு கூட்டம் வைத்தோம். இக்கூட்டத்தில் பலதரப்பட்ட ஆலோசனைகளையும் உள்வாங்கி, ஒரு நிரந்தரச் சபையை அமைப்பதென்றும் அதற்கு "தொண்டர் சபை" எனப் பெயர் இடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. முடிவில் அதற்கு திரு.மு.செல்லையா(ஆசிரியர்) தலைமையில் சில அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து தொண்டர் சபை முதலில் கூடிய பொழுது மேலும் சில அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டனர். முதலில் இச்சபையில் பங்குபற்றிய அங்கத்தவர்களில் சிலரின் பெயர்களை கீழே காணலாம்.

1. தலைவர் - மு.செல்லையா (ஆசிரியர்)
2. செயலாளர் - செ.கணபதிப்பிள்ளை
3. தனாதிகாரி - கோ.இராமச்சந்திரன்
4. உபசெயலாளர் - மு.குகதாசன்
5. உபதனாதிகாரி - செ.சுப்பிரமணியம்
6. அங்கத்தவர் - த.சிவஞானம்
7. அங்கத்தவர் - சண்முகம்

மிகுதி அங்கத்தவர்களின் பெயர்கள் ஞாபகத்தில் இல்லை.

இச்சபையின் நோக்கம் மிகவும் தெளிவாகத் தீர்மானிக்கப்பட்டது. அதாவது கோவில் நிர்வாக சபைக்குப் பல வகையிலும் உதவும் வகையிலும் மட்டும் தான் செயற்படுவதென்றும், கோயில் சார்ந்த சேவைகள் ஏதாவது நாங்களாக தொடங்குவதென்றால் அவர்களின் முழு சம்மதத்துடன் தான் செய்வதென்று நாமாகவே முடிவெடுத்தோம். எமது கூட்டங்கள் யாவும் "கோபாலர்" மடத்தில் தான் நடைபெறுவது வழக்கம்.

ஆரம்பத்தில் இச்சபை மேற்கொண்ட பணிகள் சில :

1. முதலில் குறிப்பிட்ட பணிகளைக் கூடிய ஒழுங்குடன் செயற்படுத்துவது
2. திருவிழா நாட்களில் பக்தர்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் வியாபாரிகளுக்குக் கொட்டகை போட்டு தனித்தனி இடங்கள் ஒதுக்கிக் கொடுப்பது.
3. தேர்த்திருவிழாவன்று தண்ணீர் இறைக்கும் மெசின்(Water pump) வாடகைக்கு எடுத்து தண்ணீர்த் தொட்டி பொருந்திய Tractor இல் நீர் நிறைத்துச் செழிப்பாக இடைவிடாது வீதிகளுக்குத் தண்ணீர் அடிப்பது.
4. அன்று நாள் முழுக்க ஒலிபெருக்கியில் பக்திப்பாடல்கள் பாட ஒழுங்கு செய்வது
5. இவற்றைவிட ஏனைய உற்சவ நாட்களில் பல விதங்களிலும் சேவை செய்வது.

மொத்தத்தில் நிர்வாக சபைக்கு வலது கரம் போல் இருந்து உதவி செய்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கெல்லாம் ஏற்படும் செலவிற்கு 3,4 குழுக்களாகப் பிரிந்து வீடு வீடாகச் சென்று உதவி கேட்போம். அவர்களும் மனநிறைவுடன் இயன்ற அளவு உதவி செய்தார்கள். கிராம மக்கள் எமக்குத் தந்த மதிப்பும், ஆதரவும் வியக்க வைத்ததுடன், முழு மனதுடன் சேவை செய்யவும் தூண்டியது. முக்கியமாக எமது பெற்றோர் கூட எங்கள் முயற்சி பற்றிப் பெருமைப்பட்டார்கள்.

இப்படி ஆரம்பித்த தொண்டர் சபையின் பணிகள் இப்பொழுது மிகவும் விஸ்தரிக்கப்பட்டு சேவை ஆற்றுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. தொண்டர் சபையை ஆரம்பித்ததில் எனது பங்கும் சிறிதளவேனும் இருந்ததென்பதை யிட்டுப் பெருமை அடைகின்றேன்.

தற்பொழுது அங்கம் வகிக்கும் தொண்டர்களுக்கு எனது பாராட்டுக்கள். 60 வருடச் சேவை பூர்த்தியடையும் இவ் வேளையில் நீங்கள் எடுத்திருக்கும் இவ்விழா மிகவும் சிறப்பாக நிறைவு பெற எனது வாழ்த்துக்கள்.

விநாயகப் பெருமானின் அருளோடு இச்சபை மேன்மேலும் தொடர்ந்து வளர்ச்சி அடைய பிரார்த்திக்கின்றேன்.

**வாசித்து – யோசித்து – நேசித்தவை (24ஆம் பக்கத் தொடர்ச்சி .....)**

“ஆலயங்களில் அருள் விளக்கமானது, அங்கே வந்து வழிபடுகின்ற அடியார்களின் பெருக்கத்தினாலும், அடியார்களின் தரச் சிறப்பினாலும் மேலோங்கி வளம்பெறும் என்பது நமது அனுபவ உண்மை. சான்றோர் கூற்றால் பெறும் உண்மை என்பதையும் விட விஞ்ஞான பூர்வமான நிரூபணமும் இதற்கு உண்டு. ஆனால் நமது ஆலயங்களுக்கு வழிபாட்டியற்ற வரும் அடியார்கள் தொகையைப் பெருக்குவதிலும், அவர்களின் தரச்சிறப்பை அதிகரிக்கச் செய்வதிலும் கவனம் செலுத்துவது அவசியமில்லையா? சைவாசாரமான நடைமுறைகள், சமய அனுஷ்டானங்கள் ஒழுங்காக நடைபெறுவதை நாம் கவனித்துக் கொள்ள வேண்டுமல்லவா?

இயல்பாகவே இன்று மேல்நட்டு நாகரிகம் பெருகி வருவதால், நமது பாரம்பரியப் பண்பாட்டு நடைமுறைகள், சைவ சமயாசாரமான அனுஷ்டானங்கள் அக்கறையின்றி அலட்சியப்படுத்தப்பட்டும், அறியாமல் கைவிடப்பட்டும் அருகி வருகின்றன. வளர்ந்து வரும் இயந்திரமயமான உலகில் மனிதனின் வாழ்க்கையும் இயந்திரப் பாங்கானதாக விரைவானதாயும், உணர்வுபூர்வமான செயற்பாடுகள் குறைவானதாகவும் மாறி வருவதனால் முன்பு கூறப்பட்ட பண்பாட்டு நடைமுறைகள் சில வேளைகளில் தெரிந்திருந்தும் கூட வாழ்க்கையின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தளர்த்தப்படுகின்றன. இயந்திரத்தன்மையுடைய சடங்குகள் போல் நமது சமய அனுஷ்டானங்களும் மாறிவிட்டன.”

– பிரமஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) இணுவில்.

“அரிதிலும் அரிது மானிடப் பிறவியைப் பெறுவது. அப்பிறவியினைப் பெற்றவர் அதனை உணராது விடுவது கொடிதிலும் கொடிது. உண்டு உடுத்து, உறைவிடம் அமைத்துக் ‘கண்டதே காட்சி, கொண்டதே கோலம்’ என மனித இனம் குறிப்பாக இந்துக்கள் வாழ்வது பறவைகள் மற்றும் விலங்கினம் முதலியவற்றின் வாழ்வினை ஒத்ததாகும்.

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற, கண்ணில்லா குழவிபோல கட்டுண்டு இருந்த எமக்கு, இந்த அருமையான சரீரத்தை, தூய மனத்தை, புத்தியை மட்டுமன்றி இந்த உலகத்தை,சூரிய சந்திரனை, நீரை, நெருப்பை, மற்றும் எத்தனையோ கருவி கரணங்களையும் படைத்து வாயையும் அதனுள் நாக்கையும் உடலின் பல்வேறு அங்கங்களையும் படைத்து அவனியில் போய்ப் பிறக்கவைத்த பெருங்கருணைப் பேராற்றலை எண்ணியெண்ணி மனம் நெக்கு நெக்குருகி இத்தனையும் தந்த கருணைக் கடலைப் பாடிப்பரவி பணிகள் பல செய்து ஏற்றியும் போற்றியும் நம் கடனைச் செலுத்த வேண்டாமா?

இந்தக் கடன்களை எல்லாம் தீர்க்க வல்ல மாபெரும் செயல், இறைவனை எண்ணியெண்ணி நெக்குருகி அவன் திருத்தொண்டை மேற்கொள்ளுவதே”

–விகடகவி மு.திருநாவுக்கரசு, அளவெட்டி
*(ஓய்வுபெற்ற மேலதிக மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் நித்தம் நித்தம் நினைவலைகள் மோதும்

அழியாத நினைவுகளுடன்
**இ.யோகேந்திரன்,**
நோர்வே.



அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலயத் தொண்டர் சபை நீண்டகால வரலாற்றினைக் கொண்டது. எங்களுக்கு முன்பு சபையில் தொண்டு புரிந்த மூத்த உறுப்பினர்கள் தங்களின் கால நினைவுகளை இங்கே பகிரும் வேளையில் எங்களின் காலப்பகுதியில் (1965-1985) நடைபெற்ற சம்பவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

அறுபதுகளின் தொடக்கத்தில் இருந்து தான் ஆலயத்தில் பல மாற்றங்களுடன் கூடிய திருப்பணி வேலைகள் நடைபெறத் தொடங்கிய காலம். ஆலய முன் மண்டபம், தேர்முட்டி, தேர்கள் நிறுத்தும் மண்டபம் இன்னும் பல. பழைய தேர் முட்டி சிதைவடைந்த நிலையில் தற்போதைய முன் மண்டபத்திற்கு சமீபமாக இருந்தது. அதனை முழுவதும் பெயர்த்து சில மீற்றர்கள் முன்பக்கமாக நீங்கள் தற்போது பார்க்கும் இடத்தில் நிறுவப்பட்டது. தேர்முட்டி முன் சென்றதனால் ஆலய வடகிழக்கு மூலையில் அமைந்திருக்கும் மடமும் (அமரர் திரு.இ.இராமச்சந்திர அண்ணருடைய மடம்) சில மீற்றர்கள் பின்னால் முற்றாக இடிக்கப்பட்டு அதே மாதிரித் திரும்பக் கட்டப்பட்டது. இவைகளை ஏன் சொன்னேன் என்றால் இந்த வேலைகளை மேசன், ஆசாரி ஆகியோரின் பணி தவிர்த்து அனைத்து வேலைகளும் அன்றைய தொண்டர் சபை அங்கத்தவர்களால் தான் செய்து முடிக்கப்பட்டன.

அன்று எமது நிதி நிலைமையை சீர் செய்ய ஆலய திருவிழாக்காலங்களில் அதிர்ஷ்டலாபச் சீட்டு நடாத்தி ஆலய முன்றலில் அமைக்கப்படும் கடைகள் வாடகை என எமது நிதியினை ஈட்டி வந்தோம். அப்படி சேகரிக்கும் பணத்தில் ஆலயத்தில் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவோம். தற்போது இருக்கும் தொண்டர் சபைக் கட்டடம் முன்பு ஒரு வீடு. அதனுடன் சேர்த்துப் பெரிதாகக் கட்டடம் ஒன்றினையும் அமைத்தனர். ஆலயத்திற்குத் தேவையான ஒலிபெருக்கிச் சாதனங்களை வாங்கிச் சேர்த்தனர் அன்றைய தொண்டர்கள்.

எங்களின் இந்த சாதனைகளுக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் அமரர்கள் மயில்வாகனம் ஐயா, ஆசான்கள், திரு.நாகநாதர், திரு. கந்தையா, திரு.செல்லையா இன்னும் பலர். ஆனால் எங்களுடன் எப்போதும் தோளோடு தோள் தந்து இரவு பகல் பாராமல் ஒரு கட்டளைத் தளபதி போல் நின்று தொண்டு செய்த அமரர் திரு.இராமச்சந்திர அண்ணரை யாருமே மறந்துவிட முடியாது.


காலங்கள் உருண்டோடும்; காட்சிகள் மாறும். ஆனால் அன்று இருந்த அதே தொண்டர் சபை இன்றும் அதே சிறப்புடன் இன்னும் பல தொண்டர்களுடன் தொண்டாற்றுவது எல்லாம் வல்ல கும்பழாவளையானின் அருட்கொடையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலய
ஆரம்ப கால முகப்புத்தோற்றம்



அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலய
தொண்டர் சபையின் தோற்றுவாய்க்கு அடித்தளமிட்ட
ஆரம்பகால மகோற்சவக் காட்சி



ஆரம்பகால தொண்டர்கள் ஆலய முன்றலில்
1956ஆம் ஆண்டு



ஆரம்பகால தொண்டர்களுக்கான தீட்சை வைபவம்
1982 மாசி மாதம் சமயதீட்சை மறைக்காடரினால்
தொடர்ந்து 1984 மாசி மாதம் வரை தொடர்ந்து நடாத்தப்பட்டது




நிரந்தர அலுவலக கட்டடம் ஒன்றின் கீழ்
தொண்டர் சபையின் செயற்பாடுகள்



மீள்குடியமர்வின் பின்னரான தொண்டர்கள்

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பகாலம் தொட்டு பண்ணிசை நிகழ்வு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "என் கடன் பணிசெய்து கிடப்பதே"

திருமதி கல்யாணி லோகநாதன்

*"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன்கடன் அடியேனையுந் தாங்குதல்*
*என் கடன் பணி செய்து கிடப்பதே"*

தொண்டுள்ளம் கொண்ட அப்பர் பெருமானின் திருவாக்கு எமக்கெல்லாம் அருள்வாக்காக எம் உள்ளங்களை எல்லாம் விழித்தெழச் செய்யும் பெருவாக்காக அமைகிறது. ஆம். அப்பர் பெருமானின் தொண்டுள்ளம் யாருக்கு வரும்?

ஆனால் எம் கும்பழாவளைப் பிள்ளையார் அடியார்களுக்கு, தொண்டர்களுக்கு அத்தகைய தொண்டுள்ளம் நிறையவே இருந்தது. - இருக்கின்றது. தொடர்ந்து இருக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குண்டு. அடியார்களின் கடன் தொண்டு செய்தல்; பெருமானின் கடன் அத்தொண்டர்களைத் தாங்கி வருதல் ஆகும். கும்பழாவளையானுக்குத் தொண்டு செய்தவர்கள் யாவரையும் பெருமான் தனது பெருங்கருணையாலும், பேரருளாலும் மிக மிகச் சிறப்பான நிலையில் வைத்திருக்கின்றார் என்றால் அது மிகையாகாது.

அளவை அடியார்களின் நிலையை நோக்கும் போது அதிசயிக்கக்கூடிய செயல்களை அவர்கள் ஆற்றுகின்றனர். பெருமான் ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு கருமமும் எவ்வித வேதனமும் இல்லாமல் கொம்பன் திருவருள் ஒன்றையே விரும்பி, முடுக்கிவிட்ட எந்திரம் போலப் பூஜைக்கு ஆலயமணி கேட்டதும் திருவிளக்கேற்றுதல், முதற்கொண்டு எல்லாச் செயல்களும் கிரமந் தவறாமல், நேரம் தவறாமல் சிறப்பாக நடைபெறுவது மிகவும் பெருமைப்படக் கூடியதே.

"நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு புலர்வதன்முன் அலகிட்டு பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி" வணங்கும் பேற்றைப் பெற்ற அடியார்கள் பலர் இங்குள்ளனர். இவர்கள் அதிகாலையில் வந்து ஆலயத்தை அலகிட்டுச் சுத்தம் செய்து, ஆலயத்திலேயே விளங்குகின்ற விக்கிரகங்கள் எல்லாவற்றுக்கும் தினமும் பூமாலைகள் கொணர்ந்து அணிவித்து வழிபாடாற்றுதல் சிறப்பம்சமாகும்.

*"வானந்துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும்*
*தானந்துளக்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்*
*மீனம்படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு*
*ஊனமொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்க்கே"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அப்பர் பெருமானின் மனவுறுதியையும், பக்தி வைராக்கியத்தையும் இவ்வடியார்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள். இத்தகைய தொண்டர்களின் அயராத தொண்டுகளினாலும் இவ்வாலயம் புனிதமும் பெருமையும் பெற்று விளங்குகிறது.

'தொண்டலால் துணையுமில்லை' என்றும், 'தோலலால் உடையுமில்லை' என்றும் 'பிச்சையதேற்றான் பிரியாதறஞ் செய்ய' என்றும் அப்பர் சுவாமிகள் பாடினார். சிவனடியார்கள் எல்லோரும் இத்தகைய தொண்டுகளைப் புரிந்தார்கள் என்று பெருமை பேசுவதில் பயனில்லை. தொண்டில் நமக்கு ஊக்கம் தருவதற்கே அந்த நினைவை நாம் எழுப்புகின்றோம். சமுதாயத் தொண்டு என்பது, ஆண்டவன் வழிபாட்டை ஒட்டி நிற்பதுதான். தெய்வ நம்பிக்கை யில்லாத உள்ளத்தில் மனச்சாட்சி வேலை செய்யாது. நீதி உயிரற்றுப் போகும். பண்பாடு புதைந்து விடும். எனவே வழிபாட்டிற் சிறந்தது சமுதாய நலனைச் சிந்தித்துச் செயலாற்றுதலே.

அந்த வகையிலே இவ்வாலயத்திற்கு தொண்டர் சபை ஒன்றின் அவசியத்தை உணர்ந்து 1956 ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முதலாகத் தொண்டர் சபையைக் கும்பழாவளை தர்மகர்த்தா சபையின் சார்பாக காலஞ்சென்ற திரு.இ.முருகேசு ஆசிரியர், உயர்திரு.செ.மயில்வாகனம் ஆசிரியர் ஆகியோர் நிறுவினார்கள். இச் சபையில் இவ்வூர் இளைஞர்கள் பலர் அங்கத்தவர்களாக இருந்து அன்று முதல் இன்று வரை பல அரிய பெரிய தொண்டுகளைச் செய்து வருகின்றமை மிகவும் பெருமைப்படக் கூடிய விடயமாகும்.

இன்றைய காலகட்டத்தில் நாத்திகம் பேசி நாத்தமும் பேறுகின்ற இளைஞர் சமூகத்தில் இவ்வூர் இளைஞர்கள் பல தொண்டுகளைச் செய்து வருகின்றார்கள் என்றால் தொண்டர்களின் மகிமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆலயத்தையும், ஆலயச் சுற்றுப் புறங்களையும் சுத்தம் செய்தல், ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலத்தில் வீதிகள் பெருக்கி, புதுமணல் பரப்பி, நீர் தெளித்துக் குளிர வைத்தல், பஜனைகள் செய்தல், வழிபாடு நிகழ்த்துவோர் சார்பில் களவுகள் நிகழாது பாதுகாத்தல், தேர் உற்சவ தினத்தன்று அன்னதானம் சிறப்பாக நடைபெற உதவுதல் போன்ற சீரிய தொண்டுகளை இத்தொண்டர்கள் செய்து வருகின்றனர்.

தீர்த்தக் கேணியில் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்தமை, ஆலய வளாகத்தின் முற்பகுதியின் தென்னந் தோப்பில் மண் நிரப்பி அந்நிலத்தைச் சீராக அமைத்துக் கொடுத்தமை, பாலர் பாடசாலை நடத்துகின்றமை போன்ற இன்னோரன்ன அற்புதமான பணிகளை இத்தொண்டர் சபை மிக உன்னதமாகச் செய்து வருவது போற்றத்தக்கதாகும்.

"இறைவனோ தொண்டருள்ளத்து ஒடுக்கம், தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற ஔவையார், கூற்றுக்கிணங்க இவ்வாலயத் தொண்டர்களின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? 1956ஆம் ஆண்டு ஆரம்பித்த தொண்டர்சபை இன்று அறுபதாவது ஆண்டு விழாவைக் கண்டு பெருமிதம் அடைகிறது. ஆல விருட்சமாக அடர்ந்து படர்ந்து பாரிய தொண்டுகளைச் செய்து பெருமை கொள்கின்றது. இன்னும் பற்பல ஆண்டுகள் செழிப்புற்று வளர வேண்டும். மேன்மேலும் பல தொண்டுகள் புரிய வேண்டும். தன்னலமறுப்பும், தியாக சிந்தனையுடைய பல தொண்டர்கள் இச்சபையில் பங்கேற்க வேண்டும். எல்லாம் வல்ல கும்பழாவளை விநாயகனுடைய பேரருளும் பேராற்றலும் தொண்டர்களின் உள்ளங்களிலே என்றும் நிலைத்து இருக்க வேண்டும். உரிய பணிகளைச் செய்ய வேண்டும். நூற்றாண்டு விழாவை மிக விமரிசையாகக் கொண்டாட வேண்டும் எனப் பெருமானைப் பிரார்த்தித்து அவரின் ஆசீர்வாதமும், அருட்பார்வையும் இத்தொண்டர் சபைக்கு என்றும் உண்டு என்பதைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

சிவதொண்டு செய்வோர்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வோர்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வோர்க்குச் சிந்தை தெளிவுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்

- சிவயோக சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவ காலங்களில் சுவாமி வெளி வீதி வலம் வரும் காட்சி









"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரசங்கார நிகழ்வின் போது தொண்டர் சபையின் பங்களிப்பு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமாரத்தி தீர்த்தக்கேணி












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்பெருமான் ஆலயத்திருப்பணி நிறைவுற்ற பின்னர் ஆலயச்சூழலில் காணப்பட்ட பெருமளவான
பழைய கட்டட இடிபாடுகள் தொண்டர்களினதும்
ஊர்ப்பொதுமக்களினதும் பங்களிப்புடன் அகற்றப்பட்டு திருப்பணியின் பின்னரான ஆலயச்சூழல்



தொண்டர்களின் சரீரத்தொண்டு பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டு கம்பீரமாகத் தோற்றமளிக்கும்
மூன்று தேர்களுக்கான தேர்க்கொட்டகை

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் -
*சில வரலாற்றுத் தகவல்கள்*

**சோபிதா முகுந்தன்**
வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி.
இறம்பைக்குளம், வவுனியா.

இந்துமா சமுத்திரத்தின் மத்தியிலுள்ள இலங்கை மணித் திருநாட்டின் வடபாலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சுயநிறைவுப் பொருளாதாரத்தில் வாழ்ந்து வரும் மக்கள் நிறைந்த கிராமமே அளவெட்டி ஆகும். இக்கிராமத்தில் அமைந்துள்ள கோயிலே கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலாகும்.

மாருதப்புரவீகவல்லி என்னும் பெயருடைய சோழ அரசிளங்குமாரி குதிரை முகமுடையவளாகவும் குஷ்டரோக நோய்வாய்ப்பட்டவளாகவும் இருந்த மையால் அக்குதிரை முகமும், குஷ்டரோகமும் நீங்குவதற்குப் பற்பல சிகிச்சைகள் மேற்கொண்டும் பல தெய்வ வழிபாடுகள் ஆற்றியும், நோய் நீங்காமையால் ஞானி ஒருவரின் அருள்வாக்கின்படி இலங்கையின் வடபகுதியை அடைந்தாள். யாழ். குடாநாட்டின் வடபால் அமைந்துள்ள கீரிமலை என்னும் புனித தீர்த் தத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி உபாசனையுடன் ஸ்நானஞ் செய்து ஒரே நிரையில் மாவிட்டபுரம் முதலாகத் தென்திசை நோக்கி ஐந்து கோவில்களில் கந்தசாமி விக்கிரகங்களை ஸ்தாபித்து வழிபட்டாள். அவளது நோயும் குதிரை முகமும் நீங்கியது. குறித்த குதிரை முகமானது பிறர் பார்வைக்கு நீங்கினாலும் அவளது சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப் பெறவில்லை. அதன் காரணம் யாது என ஆராய்ந்து பார்த்தபோது கந்தசாமி வழிபாட்டுக்கு முன் விக்கினேஸ்வர ஆராதனை செய்யாமையே எனத் தவப் பெரியோர் கூறக்கேட்ட அரசிளங்குமாரி தன் பிழையை நினைத்து மனம் வருந்தினாள். விக்கினங்கள் தீர்க்கும் விக்கினேஸ்வரரைத் தியானித்து, "மெய்ப்பொருள் பாலிக்கும் மெய்ப் பொருளாயுள்ள பெருமானே! அறியாமல் அடியேன் செய்த பிழையை மன்னித்து என்மேல் இரங்கி அருளுக. நான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக உமது பிரதிரூபத்தினை ஏழு ஸ்தானங்களில் பிரதிஷ்டை செய்து வழிபடுவேன்" என மனமிரங்கி வேண்டினாள்.

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் கோயில் முதலாகத் தென்திசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக்னேஸ்வரனைப் பிரதிஷ்டை செய்வித்தாள். கொல்லங்கலட்டி, வரத்தலம், அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவே அத்தலங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலங்களுள் மத்திய ஸ்தலமாக உள்ள கும்பழாவளையில் விக்கினேஸ்வர அர்ச்சனை முடிந்தபோது அவ்வரசிளங்குமாரியின் குதிரை முகச்சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாக நீங்கியது. இக் கும்பழா வளையின் முன்றில் சோலை மாவிழிதிட்டி (அதாவது மா - இழி - திட்டி) எனவும் இத்திருத்தலத்தின் தென்கிழக்கு மூலையில் இருக்கும் வயல் (இது முன்பு குளமாகக் காணப்பட்டது) குமாரத்திகுளம் என அழைக்கப்பட்டமை இவ்வாலயத்தின் வரலாற்றுச் சான்றாக அமைகின்றது. இவ்வாலயத்தின் திருவூஞ்சற்பாடல்களில் ஒன்பதாவது பாடலில் இவ்வரலாறு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கும்பலாக நின்று ஆவினங்கள் மேய்ந்தபடியால் கும்பல் - ஆவளை எனப் பெயர் உண்டானதாகவும் பல்வேறு ஐதிகங்கள் உண்டு.

யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கைப்பற்றி ஆண்டபோது எல்லாச் சைவ ஆலயங் களும் இடிக்கப்பட்டன. அப்போது இத்திருத்தலமும் இடிக்கப்பட்டது. அப்போது இக்கோயிலின் மூலஸ்தான விக்கிரகமானது கோயிலின் அருகில் வாழ்ந்த கணபதி ஆச்சாரியாரால் மரப்பொந்து ஒன்றில் பாதுகாக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டது என்றும் பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் மதச் சுதந்திரம் வழங்கப்பட்டமையால் 1811ஆம் ஆண்டளவில் கர்ப்பக்கிரகமும், மகா மண்டபமும் கட்டப்பட்டன. இதற்கு ஆதாரமாக ஒல்லாந்தர் காலத்தோம்பில் இவ்வாலயத்தைப் பற்றிய விவரங்கள் இருப்பதைக் குறிப்பிடலாம். 1847ஆம் ஆண்டு எழுதப்பட்ட தோம்பில் இவ்வாலயத்தின் மூலஸ்தானம் கற்களால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்டதெனவும், இதன் பரிபாலகர்களாக இராசதுரை முதலியார், பழனிப்பிள்ளை, இராமலிங்க ஐயர், சுப்பையர் ஆகியோர் விளங்கினர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வாலயத்தின் அர்த்த மண்டபம் 1903ஆம் ஆண்டளவில் வாழ்ந்த குமாரு நன்னியர் என்பவரால் பொதுமக்களிடம் நிதி திரட்டிக் கட்டப்பட்டது. இம் மண்டபத்தின் முகப்பு வைத்திய கலாநிதி சீனிக்குட்டி என்பவரால் கட்டப்பட்டது. மேலும் இக்கோவிலின் தூபி இன்றும் ஈடிணையற்று விளங்குகின்றது. மேலும் இத்தலத்தின் திருப்பள்ளியெழுச்சிப் பாடலிலும் "மாவையூர் முருகனின் வரம் பெறு வனிதையாம் மாருதவல்லியின் மாமுக நோய்தனை மாவிழிதிட்டி முன்வந்து நின்றகற்றி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாலயமானது மாருதப்புரவீகவல்லியின் வருகைக்கு முன்னரே இருந்தது என்பது ஐதிகமாகும். மாடு மேய்க்கும் ஒருவர் அவரது மாடுகள் மேயும் தருணத்தில் இக்கோயில் அமைந்துள்ள இடத்துக்கு அருகில் இருந்த ஒரு மரத்தின் கீழ் படுத்து உறங்கியதாகவும், உறக்கம் கலைந்து எழுந்தபோது எதிரே இருந்த மண்மேட்டில் ஒரு சோதி தெரிந்ததாகவும், சோதியைச் சுற்றி எருக்கலஞ் செடிகள் இருந்ததாகவும் அதன் மத்தியில் ஒரு கல் காணப் பட்டதாகவும் அதைக் கண்ட மாடு மேய்ப்பவர் ஊர் மக்களுக்குக் கூற அவர்களும் அதைப் பார்த்து அதிசயித்து அக்கல்லை ஒவ்வொருவரும் சிவன் என்றும் பார்வதி என்றும் வைரவர் என்றும் முருகன் என்றும் நினைத்து வழிபட்டு வந்தனர் என்றும், பின்னர் ஒருநாள் இறைபக்தி மிகுந்த ஒரு பெண்ணின் கனவில் விநாயகப் பெருமான் தோன்றி அந்த மண்மேட்டில் தான் இருப்பதாகவும் தன்னைப் பிள்ளையார், கணபதி, விநாயகர் என எண்ணி வழிபடுமாறு கூறியதாகவும் ஒரு கொம்பை ஏந்தியபடி காட்சியளித்தபடியால் கொம்பு - ஆவளை - கொம்பளாவளை எனவும் கொம்பளாவளை மருவி கும்பழாவளை என வந்ததாகவும் கூறுவர்.

யாழ்.குடாநாட்டிலே எங்கும் காண முடியாத அளவு சிற்பங்களுடன் இத்தூபியானது சிறப்புற விளங்குகின்றது. இக்கோயிலில் நித்திய நைமித்திய பூசைகளும், கந்தசஷ்டி, திருவெம்பாவை விழாக்களும், மஹோற்சவமும் சிறப்புற நிகழ்கின்றன. விழாக்காலங்களில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் அளவெட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், கந்தரோடை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, சிறுவிளான், பெரியவிளான் ஆகிய கிராமங்களில் இருந்து வருகை தருவார்கள். பல்வேறு அற்புதங்களையும் செய்து தன்னை நாடி வரும் பக்தர்களின் பாவங்களைப் போக்கி அருள்பாலிக்கும் கும்பழாவளை விநாயகரை நாமும் வணங்கி எமது பாவங்களைப் போக்குவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் கல்விச் சோலை










"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் கல்விச் சோலை










ஆலயதொண்டர்சபையின் சமயப்பணிக்கு மேலதிகமாக சமூகப்பணியாக அமரர் செ.சச்சிதானந்தம் அவர்களது வழிகாட்டலில் உருவான பாலர் கல்விச்சோலை தற்பொழுது ஓய்வு பெற்ற அதிபர் திரு.ம.பத்மநாதன் தலைமையின் கீழ் அளவையம்பதியில் முன்னணி முன்பள்ளியாக இருபதாம் ஆண்டில் தடம் பதித்து நிற்கின்றது.

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடும் பணியே பணி

கலாபூஷணம் எஸ். சிவானந்தராஜா
இந்துக்கல்லூரி வீதி, செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.



தமிழிற் சந்தப் பாக்களுக்குத் தலைவனாக விளங்குபவர் அருணகிரிநாதர் சுவாமிகளே. திருவண்ணாமலையில் இருந்த இவர், கி.பி 1450 காலப்பகுதியில் இருந்த பிரபுடதேவமகராஜா காலத்தவர்.

இவர் இளமையிலே தமிழ் நூல்கள் பலவற்றை கற்றும், காமசூத்திரங்களை ஆராய்ந்தும், கவிபாடும் திறனை உடையவராகவும் திகழ்ந்தார். மாதர் வசப் பட்டதால், தேடிய பொருட்களை இழந்தும், வறுமையுற்றும் உயிரை மாய்க்கக் கருதினார். தனது சீரழிந்த வாழ்வை எண்ணி கவலையடைந்தார்.

முன் செய்த புண்ணியத்தால் அவரது சிந்தனை மாறிற்று. இறைவனைப் பணியாது வீணே காலம் கழித்ததை எண்ணி கவலையுற்றார்.

*"கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே*
*சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ"*
(கந்தரனுபூதி - 24)

*"சிங்கார மடந்தையர் தீநெறி போய்*
*மங்காமல் எனக்கு வரம் தருவாய்"*
(கந்தரனுபூதி - 34)

இவ்வாறு திருவண்ணாமலைக் கோபுர வாசலில் தியானித்து பலநாள் தவங் கிடந்தார் அருணகிரிநாதர். இறைவனது பரிசுத்த நிலையை, தனது உள்ளத்துள் உணர முற்பட்டார்.

*"உயர் கருணை புரியுமின்பக் கடல் மூழ்கி*
*உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே"*
(திருப்புகழ் - இயலிசையில்)

திருவண்ணாமலைத் திருக்கோபுரத்தின் உச்சியில் ஏறி உயிரை மாய்க்க எண்ணிய அருணகிரிநாதரை, மண்ணில் விழாது பிடித்துத் தாங்கி, மண்மிசை நிறுத்தி முருகப்பெருமான் திருவடித் தீட்சையும் செய்தருளினார்.

*"அணுகி முன் அளித்த பாதம்"* – திருப்புகழ்
*"பதயுகமலர் தந்தபேரருள்"* – திருப்புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் தனது வேலினால், அருணகிரியின் நாவினில் ஆறெழுத்தைப் பொறித்தார். முத்தமிழை ஊட்டினார். ஜெபமாலை ஒன்றைத் தந்தார். மௌன உபதேசம் செய்தார். ஞான உபதேசம் செய்தார்.

| | |
|---|---|
| *"அண்டர்கள் அறியா முத்தமிழ் ஊட்டி"* | (திருப்புகழ் - 814) |
| *"ஜெபமாலை தந்த சற்குருநாதா"* | (திருப்புகழ் - அபகார நிந்தை) |
| *"சும்மா இரு சொல்லற"* | (கந்தரனுபூதி - 12) |
| *"யோகத்தாறுபதேசித் தேசிக"* | (திருப்புகழ் - 68) |
| *"ஈடேற ஞானமுரைத்தருள்வோனே"* | (திருப்புகழ் - 1285) |

திருமுருகனின் திருவாயால் "முத்தைத்தரு பத்தித்திருநகை" என்று அடியெடுத்துக் கொடுக்க அருணகிரியார் சந்தத் தமிழால் உவகையுடன் முதலாவது திருப்புகழைப் பாடினார். கண்பெற்ற குருடன் போல் பேரானந்தங் கொண்டு ஆடினார். பரவினார்.

பக்திக்கடலில் திளைத்த அருணகிரியார் தவ நிலையில் இருந்து, நிஷ்டை கலையும் தருணத்தில் சந்தம் நிறைந்த பாடல்களால், இறைவனின் திருநடனத்தைக் கூடி ஒலிக்கும் முரசங்களின் ஒலிகளுடன் பாடினார். இவர் அபரிமிதமான பேறுகளைப் பெற்றார்.

1. **ஆணவ-மயக்க - காமியம் அகற்றப் பெற்றார்**
   *"ஆணவ மயக்கமும் கலி காமியம் அகற்றி என்றனை ஆள்"* (திருப்புகழ் - 617)
   *"என் மாசு சேர் எழுபிறப்பையும் அறுத்த உமை"* (திருப்புகழ் - 439)

2. **ஞானக் கடலில் மூழ்கப் பெற்றார்**
   *"சுக ஞானக்கடல் மூழ்கத் தந்து அடியேனுக்கருள்* (திருப்புகழ்)
   *"அன்புற உபதேசப் பொருள் ஊட்டி மந்திர தவஞானக்*
   *கடல் ஆட்டி என்றனை"* (திருப்புகழ்)

3. **சிவப்பேறுக்குரியவரானார்**
   *"சிவப்பேறுக்குக் கடையேன் வந்துட்*
   *புகச்சீர் வைத்து"* (திருப்புகழ் - 587)

4. **கர்ணாமிதப் பதம் பெற்றார்**
   *"எனக்கு நல் கர்ணாமிர்தப் பதம் தந்த கோவே"* (திருப்புகழ்)

5. **தமது பாடல்களை மெச்சிய இறைவன்**
   *"எமது மலத்தைக் களைந்து பாடென அருள*
   *அதற்குப் புகழ்ந்து பாடிய இயல்கவி*
   *மெச்சிட்டுயர்ந்த பேரருள் முருகோனே"* (திருப்புகழ் - 792)

6. **முருகன் உலகறிய அருணகிரி நாதருக்கு காட்சி கொடுத்தது**
   *"உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில்*
   *ஒரு நொடிதனில் வருமயில் வீரா"* (திருப்புகழ்)

7. **திருவெண்ணெய் நல்லூரில் முருகனின் நடன தரிசனம்**
   *"திருவெண்ணெய் நற்பதி புகழ்பெற அற்புத*
   *மயிலின் மிசைக்கொடு திருநடன மிட்டுறைப் பெருமாளே"* (திருப்புகழ் - 70)

தமிழ் மொழியை சந்தப் பாடல்கள் உலகம் முழுவதும் பரவச் செய்யும் பொருட்டு,

| | |
|---|---|
| திருவண்ணாமலை முதல் சிதம்பரம் வரை | 09 தலங்கள் |
| சிதம்பரம் முதல் சீர்காழி வரை | 10 தலங்கள் |
| சீர்காழி முதல் திருவாரூர் வரை | 19 தலங்கள் |
| திருவாரூர் முதல் வேதாரணியம் வரை | 5 தலங்கள் |
| வேதாரணியம் முதல் கும்பகோணம் வரை | 14 தலங்கள் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கும்பகோணம் முதல் சுவாமிமலை வரை | 9 தலங்கள் |
| சுவாமிமலை முதல் திருச்செங்கோடு வரை | 19 தலங்கள் |
| திருச்செங்கோடு முதல் திருச்சிராப்பள்ளி வரை | 4 தலங்கள் |
| திருச்சிராப்பள்ளியில் சுற்றியுள்ள தலங்கள் | 12 தலங்கள் |
| கடம்பந்துறை முதல் பேரூர் வரை | 12 தலங்கள் |
| பேரூர் முதல் பழனி வரை | 8 தலங்கள் |
| பழனி முதல் மதுரை வரை | 4 தலங்கள் |
| மதுரை முதல் திருச்செந்தூர் வரை | 3 தலங்கள் |
| திருச்செந்தூர் முதல் ஈழநாடு வரை | 3 தலங்கள் |
| ஈழநாட்டுத் தலங்கள் | 3 தலங்கள் |
| பொதியமலை முதல் திருப்பெருந்துறை | 12 தலங்கள் |
| திருப்பெருந்துறை முதல் திருவண்ணாமலை வரை | 6 தலங்கள் |
| திருவண்ணாமலை முதல் காஞ்சிபுரம் வரை | 10 தலங்கள் |
| காஞ்சிபுரம் முதல் வள்ளி மலை வரை | 24 தலங்கள் |
| வள்ளி மலை முதல் திருத்தணிகை வரை | 2 தலங்கள் |
| வெள்ளிகர முதல் ஸ்ரீசைலம் வரை | 4 தலங்கள் |
| வட இந்தியாவில் | 6 தலங்கள் |

இவ்வாறு பல திருத்தலங்களையும், பொதுப் பாடல்களையும் பாடினார்.

திருவண்ணாமலையில், அண்ணாமலையானை ஆத்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு பூசை செய்து வந்த சோமநாதன் என்பவர், தனக்குச் சொந்தமான மடத்தில் முருகனை வழிபட்டு வந்தார். இவ்வாறு முருகனை வழிபட்ட முருகன் அடியானையும் அவனது பக்தியையும் பண்பையும் கண்டு வியந்து அருணகிரிநாதர் பாடினார்.

அரிவை ஒரு பாகமான அருணகிரிநாதர் பூசை
அடைவு தவறாது பேணும் அறிவானன்
அமணர் குல காலனாகும் அரிய தவராஜ ராஜன்
அவனி புகழ் சோமநாதன் மடமேவும் முருக
(திருப்புகழ் - ஒரு வழிபடாது)

இவ்வாறு சுமார் 1600 பாடல்களைப் பாடிய அருணகிரிநாதர் அருணைக்கோபுரத்தில் தனது உடம்பை வைத்துவிட்டு, இறந்து கிடந்த கிளியின் உடலில் புகுந்து விண்ணுலகெய்தினார்.

### அருணகிரியாரும் திருமுறை தந்த நால்வரும்

இறைவனையடையும் மார்க்கங்கள் நான்கு. பிள்ளை போல் அன்பு காட்டி (புத்ர மார்க்கமாய்) இறைவனை அடைந்தவர் திருஞானசம்பந்தர். இறைவனுக்கே திருத்தொண்டுகள் செய்து (தாசமார்க்கமாய்) இறைவனை அடைந்தவர் திருநாவுக்கரசர். தோழனாய் அன்பு செலுத்தி (சகமார்க்கமாய்) இறைவனை அடைந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். மாணாக்கனாய் இருந்து அன்பு செலுத்தி (சிஷ்யமார்க்கம்) இறைவனை அடைந்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். மேற்படி நால்வரின் நால் வகை மார்க்கத்தாலும் ஒருங்கே நின்றவர் அருணகிரியார்.

| | |
|---|---|
| "எமையாளும் தகப்பன்" | திருப்புகழ் - 239 |
| "அப்பனே போற்றி" | திருப்புகழ் - 827 |
| "எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ" | கந்தர் அனுபூதி - 46 |
| "குற்றேவல் அடிமைசெயும் வகை அருளாதோ" | திருப்புகழ் - 944 |
| "எமக்கமிர்த தோழா கடப்பமலர் அணிவோனே" | திருப்புகழ் - 646 |
| "அன்புற உபதேசப் பொருளருட்டி" | திருப்புகழ் - 814 |

இவ்வாறே சமய குரவர்கள் நால்வரும் நால் வகை வழிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் பின்பற்றி பேறுபெற்றனர். அருணகிரிநாதரும் அவ்வகையான நாலு வழிகளையும் பின்பற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயகுரவர்கள் நால்வர் காட்டிய அற்புதங்கள் போல் அருணகிரியார் வாழ்விலும் சில அற்புதங்கள் நிகழ்ந்தன. இறைவனிடம் தாளம் பெற்றார் சம்பந்தர்.

இறைவனிடம் ஜெபமாலை பெற்றார் அருணகிரியார். கல்லே தெப்பமாக மிதந்து அருள் பெற்றார் திருநாவுக்கரசர். கோபுரத்தின்று விழுந்தும் உய்ந்தார், அருணகிரியார். திருமறைக்காட்டினின்றும் திருவாரூருக்கு நாவுக்கரசரை அழைத்தார் இறைவன். வயலூரினின்றும் விராலி மலைக்கு வா என்று அருணகிரியாரை முருகன் அழைத்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், சோமாசிமாற நாயனாருக்காக சிவபிரானை அழைத்துக் காட்டினார்.

ராஜ சபையில் பிரபுடதேவராஜனுக்காக முருகனை வரவழைத்துக் காட்டினார் அருணகிரியார்.

மாணிக்கவாசகர் புத்தர்களை ஊமையாக்கி அடக்கியது போல் அருணகிரியாரும் சம்பந்தாண்டானையும் வில்லிபுத்தூராரையும் வாதில் வென்றார். மணிவாசகர் சிவபிரானிடம் உபதேசம் பெற்றது போல் அருணகிரியாரும் முருகனிடம் உபதேசம் பெற்றார்.

அருணகிரிநாதா தனது பாடல்களில் சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை கவனத்துக்குரியது.

**திருஞானசம்பந்தரின் ஏடு எதிர் சென்றது**

*"பாறைத் திருவாயாலோதிய*
*ஏடு நீர்க்கெதிர் போயே வாது செய் பாடல்"* ("காலன்வேல்" - திருப்புகழ்)

**சுந்தரருக்காக தூது சென்றமை**

*"சுந்தரர் பாடலுக்குகந் திருதாளைக்*
*கொண்டு நல் தூது நடந்தவராக"* (கொந்தளவோனல் - திருப்புகழ்)

**மாணிக்கவாசகருக்கு குருவாய் இருந்தமை**

*"வாதவூரனை மதித்தொரு குருக்களென*
*ஞானபாதம் வெளியிட்ட நரியிற் குழுவை*
*வாசியாம் என நடத்துவகை"* (சீதவாசனை – திருப்புகழ்)

திருஞானசம்பந்தரின் தேவாரங்கள் இசைத்தமிழாக இருப்பது போல் திருப்புகழும் சந்தபேதங்களுடன் அமைந்துள்ளது. திருவாசகமானது செந்தமிழ் சுவை சொட்டுவது போல கந்தரலங்காரமும் விளங்குகின்றது. அகப்பொருளை விளக்கும் திருக்கோவையார் போன்று கந்தரந்தாதியும் விளங்குகின்றது. இங்கு அருணகிரியார் ஒருவருக்கே முருகப்பெருமான் நால்வராகத் திகழ்ந்தார். எனவே நால்வரின் பாடல் உட்பொருட்கள் திருப்புகழ் பாடல்களில் மேலோங்கி காணப்படுகின்றன எனலாம். திருமுறை தந்த நால்வர் போல அருணகிரிநாதரும் புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்து திருப்புகழ்ப் பாடல்களை அருளியுள்ளார்.

**அருணகிரியாரின் பாடல்கள்**

அருணகிரிநாத சுவாமிகள் பாடிய பாடல்களில்

| | |
|---|---|
| திருப்புகழ் பாடல்கள் | 1600 |
| கந்தரந்தாதி பாடல்கள் | 100 |
| கந்தரலங்காரப் பாடல்கள் | 100 |
| கந்தரனுபூதி பாடல்கள் | 51 |
| திருவகுப்பு | 25 |
| வேல் விருத்தம் | 10 |
| மயில் விருத்தம் | 11 |
| சேவல் விருத்தம் | 11 |

என்பவை அடங்கியுள்ளன.

மன்னன் பிரபுடதேவராஜனின் கண் ஒளி குன்றிய காரணத்தால் அருணகிரிநாதரை பாரிஜாதமலர் கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டான். சுவாமிகள் அருணைக் கோபுரத்தில் ஏறி கிளி உருவம் கொண்டு சென்று பாரிஜாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்தான். அம்மலரை மணந்த பிரபுடதேவராஜன் கண் ஒளியைப் பெற்றான். அத்தருணமே கந்தரனுபூதியை சுவாமிகள் பாடினார்.

காளி உபாசகனான சம்பந்தாண்டான், அருணகிரிநாதருடன் ஒரு முறை வாதம் செய்தான். முருகனின் திருக்காட்சியைக் காட்டுமாறு சம்பந்தாண்டான் அருணகிரிநாதரை வேண்டினான். அத்தருணம் "அதலசேடனாராட" என்ற பாடலை அருணகிரியார் பாடினார். சிவகங்கையிலுள்ள 16 கால் மண்டபத்தின் ஈசானத் தூணில் முருகனின் திருக்காட்சியைக் காட்டி உலகம் அறியச் செய்தார்.

இதை

*"சயிலம் எறிந்த கைவேற் கொடு*
*மயில்மிசை வந்தெனை யாட்கொளல்*
*சகமறியும்படி காட்டிய குருநாதர்"* (திருப்புகழ் - 210)

*"அந்தத் திருநட மிடு சரணழகுற*
*சந்தச் சபை தனி லெனதுளமுருகவும் வருவாயே"* (திருப்புகழ் - எந்தத்திசையினு)

இவரது திருப்புகழ் பாடல்களில் "கதிர்காமம்" தலம் பற்றி "திருமகளுலாவும்" என்ற பாடலுடன் மற்றும் 12 பாடல்களும் "திருகோணமலை" தலம் பற்றி "விலைக்கு மேனி" என்ற பாடலும் யாழ்ப்பாணம் தலம் பற்றி "பூத்தார் சூடும்" என்ற பாடலும் உள்ளன.

மேலும் இவரது பாடல்களில் பல்வேறு சமய — சரித்திர விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

1. **சிவனுக்கு உபதேசம் செய்தமை**
   *"சிவனார் மனம் குளிர உபதேச மந்திரமிகு"* (பாடல் - சிவனார் மனம்)
   *"சிவனார் திருமணிச் செவிக்குள் மெய்ஞ்ஞானம் ஓதி"* (பாடல் - நிரைத்த நித்திலம்)
   *"குருவெனச் சிவனார்க்கருள் போதா"* (பாடல் - இருவினைப் பிறப்பு)

2. **பிரமனைச் சிறையிலடைத்தவர்**
   *"கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர் செய்து*
   *கன்றச் சிறையிடு மயில் வீரா"* (பாடல் - வஞ்சத்துடன்)

3. **மாங்கனியை விநாயகர் பெற்றமை**
   *"தந்தை வலத்தா லருள்கைக் கனியோனே"* (பாடல் - உம்பர் தரு)

4. **வள்ளி தேவயானையுடன் முருகன்**
   *"கோதை குறமாது குணதேவ மடமாதுமிரு*
   *பாலு முற வீறிவரு குமரேசா"* (பாடல் - ஆதவிதபார)

5. **ஆலகால விடமுண்ட அரன்**
   *"ஆல மமுதாக வுண்ட ஆறுசடை நாதர்"* (பாடல் - சாலநெடு)

6. **சூரனை இருகூறாக்கி சேவலும் மயிலுமாக்கிய முருகன்**
   *"சூரனை யுடற் பகுந்திரு கூறென வேயது*
   *கதித்தெழுந்தொரு சேவலுமாமயில் விடும் வேலா"* (பாடல் - மனதிரைந்தெழு)

**தினைப்புல வள்ளியை கிழவனாய் வந்து மணந்தவர்**
*"குறவர் கூட்டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று*
*குருவியோட்டித்திரிந்த தவமானை*
*குணமதாக்கிச் சிறந்த வடிவுகாட்டிப் புணர்ந்த"* (பாடல் - அறிவிலாப்பித்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. பாரதத்தை மேருமலையில் எழுதிய தந்திமுகன்**

"பாயுமாமத தந்திமு கம்பெறு
மாதி பாரத மென்ற பெருங்கதை
பார மேருவி லன்று வரைந்தவன்"

(பாடல் - மாயவாடை)

**8. இராம பிரானை கோசலை அழைத்தல்**

"எந்தை வருக, ரகுநாயக வருக
மைந்த வருக, மகனேயினி வருக
என் கண் வருக, எனதாருயிர் வருக - அபிராம
இங்கு வருக, அரசே வருக முலை
யுண்கவருக, மலர் சூடிட வருக
என்று பரிவினொடு கோசலை புகல"

(பாடல் - தொந்தி சரிய)

**9. அபிராமி**

குமரி காளிவ ராகிம கேஸ்வரி
கவுரி மோடிசு ராரி நிராபரி
கொடிய சூலிசுடாரணி யாமளி - மகமாயி
குறளரூபமு ராரிச கோதரி
யுலக தாரிஉ தாரி பராபரி
குருப ராரிவிகாரி நமோகரி -அபிராமி

(பாடல் - அமுதமூறு)

**10. இராவணனின் தலையைக் கொய்த ரகுராமன்**

"துடித்து தசமுகன் முடித் தலைகள் விழ
தொடுத்த சரம்விடு – ரகுராமன்"

(பாடல் - முடித்த குழல்)

**11. குழல் ஊதும் கண்ணன்**

"தொளைகள் விடுகழை விரன் முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி யுடையவ நெடியவன்"

(பாடல் - களபமொழுகிய)

**12. பறை முழக்கங்கள் பல பாடலில் வருகின்றன**

"அடல் வந்து முழங்கியிடும் பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
அதிர்கின்றிட"

(பாடல் - உனைத்தினம்)

**13. வேதியரின் பூசனை**

"வேத நான்மறை வழுவாமே தினம்
வேள்வியாம் எழில் புனை மூவாயிரம்
மேன்மை வேதியர் மிகவே பூசனை புரி"

(பாடல் - தாதுமாமலர்)


**உசாத்துணை நூல்கள்**

I. அருணகிரி வரலாறும் நூலாராய்ச்சியும் - டாக்டர். வ.சு. செங்கல்வராயபிள்ளை
II. ஸ்ரீ. அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த திருப்புகழ் (1323 பாடல்கள்) - வெளியீடு ஜெ.மு. குருநமசிவாயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மகர்த்தாசபை, தொண்டர்சபை இணைந்து நடாத்திய கௌரவிப்பு நிகழ்வுகள்



கும்பழாவளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள்




01.05.1984 தொடக்கம் 31.05.1994 வரை ஆலய செயலகப் பொறுப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.நா.க.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு 12.06.1994 இல் தர்மகர்த்தாக்கள் சபையும் தொண்டர் சபையும் இணைந்து நடாத்திய கௌரவிப்பு நிகழ்வு

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மகர்த்தாசபை, தொண்டர்சபை இணைந்து நடாத்திய கௌரவிப்பு நிகழ்வுகள்



மில்க்வைற் அதிபர் க.கனகராஜா அவர்களை கௌரவிக்கும் தொண்டர் சபைத்தலைவர் க.வேலுப்பிள்ளை



சங்கீதபூஷணம் வ.க.நடராசா அவர்களின் மணிவிழாக் கௌரவிப்பு

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டாங்க யோகம்

சைவப் புலவர் சு.செல்லத்துரை



அட்டாங்க யோகமானது சாதனையினாலே உணரத்தக்கது. அதனை அறிவு பூர்வமாக விளக்குவதோ, விளங்குவதோ சாத்தியமாகாது. எனினும் ஒரு அறிமுகச் சுருக்கமாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

நாம் முற்பிறப்புகளில் செய்த புண்ணியத்தின் பேறாகவே இந்த உயர்ந்த மனிதப் பிறப்பு எமக்குக் கிடைத்துள்ளது. இந்தப் பிறப்பினுடைய அருமையை மெய் கண்டசாத்திரமாய சிவஞான சித்தியார்,

*"வாழ்வெனும் மையல்விட்டு, வறுமையாம் சிறுமை தப்பித்*
*தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்*
*ஊழ்பெறல் அரிது"*

என்கின்றது. செல்வத்தில் மயங்காமல், வறுமையால் வாடாமல், பணிவும் இன்சொல்லும் உடைய சைவராகப் பிறத்தல் முன்செய்த புண்ணியப் பேறே யாகும்.

இவ்வித உயர்ந்த புண்ணியப் பிறப்பைப் பெற்ற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்,

*"இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை*
*வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்"*

என உணர்த்துகின்றார்.

நாம் எப்படி இறைவனை வழிபாடு செய்து முத்தியின்பம் பெறலாம் என்பதை எமது சைவசாத்திரங்கள் ஒன்றுக்கு ஒன்று உயர்வான நான்கு படிநிலைகளில் வைத்து உணர்த்துகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு படிநிலைகள் ஆகும்.

புறச்சரீரத்தினால் இறைவனுக்குத் தொண்டு செய்து வழிபடுவது சரியை என்றும், புறச்சரீரத்தினாலும், அகத்தினாலும் வழிபடுவது கிரியை என்றும், அகத்தினால் (மனத்தினால்) வழிபடுவது யோகம் என்றும் அறிவினால் வழிபடுவது ஞானம் என்றும் சொல்லப்படும்.

இவை ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்தவை என்பதை தாயுமான சுவாமிகள் தனது பராபரக்கண்ணியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
*அரும்பு, மலர், காய், கனி போல் அன்றோ பராபரமே"* என்கின்றார்.

**ஆசனம்**

யோகம் செய்வதற்கு முன் யோகியின் உடல் இருக்க வேண்டிய ஆசனமுறை இதுவாகும். இவை 126க்கு மேற்பட்டவையாகும். இவற்றில் எட்டு ஆசனங்கள் முக்கியமானவை ஆகும். அவை சுவத்திகம், பத்மாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காசனம், கோமுக ஆசனம், வீராசனம், சுகாசனம், சௌத்திராசனம் என்பனவாகும். இவற்றில் பத்மாசனமே மிகப் பொருத்தமானதாகும். விரிவஞ்சி இந்த ஒன்றைப் பற்றிய விளக்கம் மட்டுமே இங்கு தரப்படுகின்றது.

இரண்டு கால்களையும் முயற்சியால் தொடையின் மேல் சேர்த்து, இரண்டு தொடையின் மத்தியிலும், இரண்டு கைகளையும் மலர்ந்த பாவனையில் வைத்து மூக்கு நுனியில் கண் பார்வையை அசைவற நிறுத்தி உடல் நிமிர்ந்து உட்கார்ந்து மூலவாயுவை எழுப்பி இருத்தல் பத்மாசனம் எனப்படும். (பத்மம் - தாமரை) மலர்ந்த தாமரை போன்று இருத்தலால் பத்மாசனம் எனப்பட்டது. இவ்வாசனத்தில் இருந்து கொண்டு யோகத்தைச் செய்தல் வேண்டும்.

**பிராணாயாமம்**

பிராணனை (மூச்சைக்) கட்டுப்படுத்தல் ஆகும். ஆசனம் போன்று பிராணாயாமமும் பலவகையானது. சாதகனுக்குப் பொருத்தமான ஒரு ஆசனத்தில் இருந்து கொண்டு பிராணாயாமம் செய்தல் வேண்டும். இது மூச்சுப் பயிற்சி எனவும் சொல்லப்படும். தக்க குருவின் வழிகாட்டலுடன் தான் பிராணாயாமம் செய்யப்பட வேண்டும்.

இடப்பக்க மூக்குத்துவாரத்தால் பதினாறு மாத்திரைப் பொழுது காற்றை உள் இழுத்து (பூரகம் செய்து) அறுபத்து நான்கு மாத்திரைப் பொழுது காற்றை உள்ளே நிறுத்தி (கும்பகம் செய்து) முப்பத்திரண்டு மாத்திரைப் பொழுது வலது மூக்குத்துவாரத்தால் மெல்ல விடுதல் (ரேசகம் செய்தல்) வேண்டும். மாற்றிச் செய்தால் பாதகமாகும்.

*ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்*
*ஆறுதல் கும்பகம், அறுபத்து நாலதில்*
*ஊறுதல் முப்பத்திரண்டதில் ரேசகம்*
*மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகமாமே* (திருமந்திரம் -568)

சரியையை மொட்டாகவும், கிரியையை மலராகவும், யோகத்தைக் காயாகவும், ஞானத்தை கனியாகவும் காட்டுவதைக் கொண்டு இவ்வுண்மையை உணரலாம்.

அண்டம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனைப் பிண்டமாகிய இவ்வுடலுக்குள் கண்டு வழிபட்டு முத்தியின்பத்தைப் பெறுதலே யோக வழிபாடாகும். இதனைத் திருமூலர் சுவாமிகள்

*"உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்பினை இருந்து ஓம்புகின்றேனே"* என்கின்றார்.

அப்பர் சுவாமிகள்,

*"தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்*
*தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே*
*தேடிக் கண்டு கொண்டேன்"* என்கின்றார்.

எனவே எமது உடம்பினுக்குள்ளே இறைவனைக் கண்டு பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்குரிய வழியைத் திருமூலர் சுவாமிகள் அனுபவத்தில் கண்டு தனது திருமந்திரத்தில் காட்டுகின்றார். அதனை அட்டாங்க யோகம் என எட்டுப்படி நிலைகளில் வைத்து விளக்குகின்றார். அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவையாகும். இவை படிநிலையில் முன்னையது. சித்தித்தாலேயே முறையே பின்னையது கைகூடும் நிலை ஏற்படும். யோகத்திற்குரிய இந்த எட்டு உறுப்புக்களையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இயம, நியமமே, எண்ணிலா ஆதனம்,*
*நயமுறு பிராணாயாமம், பிரத்தியாகாரம்,*
*சயமிகு தாரணை, தியானம், சமாதி*
*அயமுறு அட்டாங்க யோகமாமே* எனத் திருமந்திரத்தில் (552) குறிப்பிடுகின்றார்.

**இயமம்**

இயமம் ஆவது தீயனவற்றைச் செய்யாது ஒழுகுதல். இதுவே ஏனைய யோக உறுப்புகளுக்கு அடித்தளமானது. உடலும் உள்ளமும் தூயதாதற்கு இயமம் இன்றியமையாதது. இதனை

*கொல்லான், பொய்கூறான், களவிலன், எண்குணன்,*
*நல்லான், அடக்கம் உடையான், நடுச்செய்ய*
*வல்லான், பகுத்துண்பான், மாசிலான், கட்காமம்*
*இல்லான், இயமத்திடை நின்றானே* *(திருமந்திரம் - 554)* என்கின்றார் திருமூலர்.

இயமநெறி நிற்போன் ஒரு உயிரையும் கொல்லாதவனாயும், பொய் சொல்லாதவனாயும், திருடாதவனாயும், ஆராய்ச்சி உள்ளவனாயும், நல்லவனாயும், பணிவுடையவனாயும், நீதி வழுவாதவனாயும், பகிர்ந்து கொடுத்து உண்பவனாயும், குற்றம் இல்லாதவனாயும், மதுவும், காமமும் இல்லாதவனாயும் இருத்தல் வேண்டும். இந்தப் பத்துக் குற்றங்களும் இல்லாத தூய்மையானவனே இயமநெறி நிற்போனாவான்.

**நியமம்**

நியமமாவது நல்லனவற்றைச் செய்து ஒழுகுதல், தூய்மை, கருணை, சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, வாய்மை, உறுதியுடைமை, காமம், களவு, கொலை ஆகியவற்றைத் தீமை எனக் காணல் ஆகிய பத்துக் குணங்களை உடையவனாயிருத்தலே நியமமாகும். இதனைத் திருமந்திரம் *(596)*

*தூய்மை, அருள், ஊன் சுருக்கம், பொறை, செவ்வை*
*வாய்மை, நிலைமை வளர்த்தலே மற்றவை*
*காமம், களவு, கொலையெனக் காண்பவை*
*நேமி ஈரைந்து நியமத்தன் ஆமே*

என்கின்றது. இத்துடன் மேலும் பத்துப் புண்ணியச் செயல்களைச் செய்பவனாயும் இருத்தல் வேண்டும்.

தவம், செபம், மகிழ்வு, தெய்வ நம்பிக்கை, கொடை, சிவவிரதம், முப்பொருள் உண்மை கேட்டல், வேள்வி சிவபூஜை, சோதிதரிசனம் என்பவையே அப்பத்துப் புண்ணியச் செயல்களுமாகும்.

*தவம், செபம், சந்தோசம், ஆத்திகம், தானம்*
*சிவன் தன்விரதமே, சித்தாந்தக் கேள்வி*
*மகம், சிவபூஜை, ஒண்மதி, சொல்ஈரஐந்து*
*நிவம்பல செய்யின் நியமத்தானமே* *(திருமந்திரம் - 557)*

ஆகவே நியமநெறி நிற்போர் மேற்சொன்ன பத்து நற்குணங்களும் பத்து நற்செயல்களும் உடையோராய் இருத்தல் வேண்டும். இந்த இயமமும் நியமமும் உடையோரே மூன்றாவது அங்கமாகிய யோக ஆசனம் செய்யத் தகுதியுடையோர் ஆவர். ஏனையோர் செய்வது வெற்று ஆரவாரமேயாகும். உண்மைப்பயன் சித்தியாது.

ஒரு மடங்கு நேரம் பூரகம் செய்து, நான்கு மடங்கு நேரம் கும்பகம் செய்து இரண்டு மடங்கு நேரம் ரேசகம் செய்தல் உத்தமம். குருவருளால் இவ்விதம் காற்றை அடக்கி இருந்தால் இளமையோடு உடல் மென்மையுடையவனாய், இயம பயம் இன்றி இருக்கலாம்.

**பிரத்தியாகாரம்**

புறத்தே செல்லும் மனத்தை உள்ளே நிறுத்திப் பழகுதலே பிரத்தியாகாரமாம். அட்டாங்க யோகத்தில் முதல் நான்கு அங்கங்களான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன பூர்வபட்சம் எனவும் பிரத்தியாகாரம், தாரணை தியானம் சமாதி என்பன உத்தரபட்சம் என்றும் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தை உள்முகமாகத் திருப்பி இருந்தால் பழம்பொருள் ஆகிய சிவனை அகத்தில் உணர்ந்திருக்கலாம். குருமுகமாக இதற்குரிய மந்திரமாய ஹம்ச மந்திரத்தால் மனத்தை உள்ளுக்கிழுத்துப் பழக வேண்டும். மூலாதாரத்திலுள்ள குண்டலினியில் மனத்தைச் செலுத்திப் பின் இதயத்தில் மனத்தை நிறுத்திப் பழக வேண்டும். பின் கண்டத்தானத்தில் நிறுத்திப் பழகிப்பின் சுழுமுனைத்தானமாகிய புருவ மத்தியில் நிறுத்த வேண்டும். இவ்விதம் பயின்றால் உச்சித்தானம் ஆகிய பிரமாந்திரத்தில் சிவனொளியைக் காணலாம். சிவனை நாடும் சிந்தனையைப் பற்றிக் கொண்டால் இறவாத்தன்மை பெறலாம்.

*கண்டு கண்டுள்ளே கருத்துற வாங்கிடில்*
*கொண்டு கொண்டுள்ளே குணம்பல காணலாம்*
*பண்டுகந் தென்றும் பழமறை தேடியை*
*இன்று கண்டிங்கே இருக்கலுமாமே (578)* என்பது திருமந்திரம்.

**தாரணை**

தாரணையாவது தரிக்கச் செய்தல். பிரத்தியாகாரப் பயிற்சியால் உள்ளுக்கிழுத்த மனத்தை நிலைபெறச் செய்தல். இவ்விதம் இருந்தால் பிரமாந்திரத்துக்கு மேல் சிரசில் விளங்கும் சிற்சபையில் ஒலியோடு கூடிய சோதியைத் தாரணையில் காணலாம். மூலாதாரத்தில் உள்ள சிவ ஒளியை எழுப்பிச் சக்தியோடு சேர்த்து சிரசின் உச்சியிற் கண்டு சாவாது இன்புற்றிருக்கலாம். தத்துவங்கள் எல்லாம் ஒடுங்கித் தற்போதத்தோடு தரித்து நிற்றலே தாரணையாம்.

*அரித்த உடலை ஐம்பூதத்தில் வைத்து*
*பொருத்த ஐம்பூதம் சத்தாதியில் போந்து*
*தெரித்த மனாதி சத்தாதியில் செல்லத்*
*தரித்தது தாரணை தற்பரத்தோடே* (திருமந்திரம் : 597)

**தியானம்**

தியானம் என்பது இடைவிடாது நினைந்திருத்தல். இடையீடு பட்டு எண்ணுவது தாரணை. இடையீடுபடாது எண்ணுவது தியானம். இரு கண்களையும் சேர்த்து மனத்தைப் பொருத்தி இருந்தால் சிதாகாசப் பெருவெளியில் சோதிப் பொருளாய சிவத்தைக் காணலாம். உயிருக்கு உயிராக விளங்கும் சிவனைச் சிந்தையுள் வைத்துத் தியானம் செய்ய வேண்டும். கண் பார்வையை மூக்கு நடுவில் கீழ்த்துவாரங்கள் உள்ள பக்கத்தில் செலுத்தியிருக்க வேண்டும்.

*நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்*
*வாட்டமும் இல்லை, மனைக்கு அழிவில்லை*
*ஓட்டமும் இல்லை, உணர்வில்லை, தானில்லை*
*தேட்டமும் இல்லை, சிவனவனாமே* (திருமந்திரம் : 604)

**சமாதி**

சமாதியாவது உயிரும் இறைவனும் ஒன்றி நிற்றல். இயமமாகிய தீச்செயல்களை விலக்கி, நியமமாகிய நல்ல செயல்களைச் செய்து, உடலை நிலைப்படுத்தி, யோகம் செய்வதற்குரிய ஆசனத்தில் இருந்து, மூச்சுப்பயிற்சி மூலம் பிராணனைக் கட்டுப்படுத்தி புறத்தே செல்லும் மனத்தை உள்ளே இழுத்து நிறுத்தித் தாரணை செய்து இடைவிடாது சிவனை நினைத்திருத்தல் ஆகிய தியானம் செய்தால் இவ்வுடலுள் உயிர் இறைவனுடன் ஒன்றி நிற்றலாகிய சமாதி நிலை கைகூடும்.

*கற்பனையற்றுக் கனல் வழியே சென்று*
*சிற்பனை யெல்லாம் சிருட்டித்த பேரொளிப்*
*பொற்பினை நாடிப் புணர்மதியோடுற்றுத்*
*தற்பரமாகத் தகும் தணசமாதியே* (திருமந்திரம் : 628)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பழாவளையே கூட்டுப் பிரார்த்தனையின் தோற்றுவாய்

கே.எஸ்.சிவஞானராஜா
ஓய்வுபெற்ற உப அதிபர்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

சோழப் பேரரசு இந்தியாவில் நிலைபெற்ற காலமே இலங்கையிலும் சைவ ஆலயங்கள் பல்கிப் பெருகிற்றெனலாம். சகல ஜீவராசிகளும் சிவமாகவே போற்றப்பட்ட காலம். நோயென்பதும், வறுமையென்பதும் யாரையுமே தீண்டாத காலம். "இலங்கை" சிவபெருமானின் திருவருட்பேறாகவும், ஒரு சஞ்சீவியாகவும் குருவருட் பிரசாதமாகவும் மிளிர்ந்த காலமது. இன்று வரை திருமுறைகளே சாட்சியாகிறது. சிவபக்தன் இராவணன் இலங்கையை ஆண்ட போது சிவபிரானிடம் வேண்டிக் கொண்ட பெருவரங்களிலொன்று தான் வெந்துயர் தீர்க்கவல்ல திருநீறு. மருந்தாக அணியும் போதும், சாப்பிடும் போதும் நோய் தீரவேண்டும் என்பதுதான் தூயவெண்ணீறு கொண்ட வரம். அதனாலே தான், "இராவணன்மேலது நீறு" என்று திருஞானசம்பந்தர் திருநீற்றுக்கு உயிர்கொடுத்துள்ளார். அளவெட்டி என்ற கிராமமானது, திருநீற்றுக்கும், திருநீறு ஆக்குவதற்கும், சிவசிவ என்று போற்றுவதற்கும், திருச்சிற்றம்பலம் என்று சொல்லிக் கூட்டுப் பிரார்த்தனை செய்வதற்கும் வழிகோலிற்று. இதற்காகவன்றி ஆலய கைங்கரியங்கள் சித்திப்ப தற்காகவும், வருத்தங்களைத் தணிப்பதற்காகவும், கூட்டுப் பிரார்த்தனை மூலம் மனப்பாரங்களைக் குறைப்பதற்காகவும் எல்லாமே நீதானப்பா என்றிருக்க கும்பழாவளையில் தூரநோக்கிலே அப்போதிருந்த தொண்டர்கள், தம்மை அர்ப்பணித்தனர். பிள்ளையாரை மகிழ்வித்தனர். வீட்டுக்கொரு பசு, வீட்டுக்கொரு தென்னை, வீட்டுக்கொரு தொண்டர், வீட்டுக்கொரு பிடி அரிசி என்று அளவெட்டியில் ஆன்மீகம் செழித்தோங்கியது.

**'கும்பல் + ஆ + வளை'**

மா + இழி + திட்டி = மாவிழிதிட்டி என்ற காரணமும் கும்பலாய்வளை என்ற காரணமும் கும்பழாவளை எனப் பெயர் கொள்ளக் காரணமாயிற்று. கும்பல் = கூட்டம் ஆ = பசுக்கள் வளை = பெருகுதல். எனவே பசுக்கூட்டங்கள் நிரம்பி மகிழ்ந்த இடம் என்பது ஒரு கருத்து. இதனருகே குமாரத்தி குளம் பசுக்களின் தாகத்தைத் தீர்த்தது மட்டுல்ல, மாருதப்புரவீகவல்லியானவள் இந்தக் குளத்திலேயே நீராடி விநாயகரை வணங்கிய படியால் மாவிழிதொட்டி = மாவிழிதிட்டியாயிற்று. மேலும் மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகச் சாயலும், குன்ம நோயும் கும்பழாவளைப் பதியிலே முற்றாக நீங்கிய காரணத்தினால் (மா - குதிரை, இழி-நீங்குதல், திட்டி - மேட்டிடம்) மாவிழிதிட்டியாயிற்று. சோழ சாம்ராஜ்யம், குமாரத்தியின் குதிரை முகம் நீங்கியதால் அளவெட்டியையும் மகிழ்வித்ததெனலாம்.

**வேதாரணியம்**

வேதாரணியத்திலிருந்து வேதம், ஆகமம், பண் தெரிந்த மறைக்காடர்கள் மாருதப்புரவீகவல்லியின் பெற்றோர்கள் மூலம் அளவெட்டிக்கு வரவழைக்கப் பட்டனர். மாருதப்புரவீகவல்லியால் நேர்த்தியாகத் தாபிக்கப்பட்ட, கொல்லன்கலட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்தலை, அளவோலை, கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை ஆகிய ஸப்த தலங்களில் வேதவல்லுநர்களான மறைக்காடர்களினால் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தப் பெற்றது. இதன் ஆரம்பத் தலமாகவும், மத்திய தலமாகவும் விளங்கிய கும்பழாவளையிலிருந்துதான் வேதபாராயணம் ஒலித்ததென இராமலிங்க ஐயரின் பரம்பரைச் சந்ததி வாயிலாக அறிய முடிகிறது. 1847ஆம் ஆண்டு எழுதப்பட்ட தோம்பொன்றில் இராசதுங்க முதலியார், பழனிப்பிள்ளை, சுப்பையர், கணபதியாச்சாரியார்கள் இவ்வாலய பாரம்பரிய வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்தும் பேணி வந்ததனைக் கோபுரச்சான்றுகள் கைகொடுத்துதவுகின்றன.

**கைலாசபதி**

கும்பழாவளை தொடர்பான சகல வரலாறுகளையும் துருவி ஆராய்ந்தவர்களுள் முதன்மையானவர் அளவெட்டிக்கு வரம் சேர்த்த மௌன தவமுனிவர் கைலாசபதியாவார். இவர் வாழ்ந்த அளவெட்டி வீட்டுக்கருகே ஒரு மடம், மண்ணால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பெற்று, சாணியால் மெழுகப்பெற்ற இந்த மடத்தில் தான் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட வேதாரணியக் குருக்கள்மாரும், ஓதுவார்களும் தங்கியிருந்து அளவெட்டியில் அருள்சுரக்கும் ஆலயங்களில் பணிபுரிந்திருக்கின்றார்கள். இவ்வாறு பணிபுரிந்த ஓதுவார்களுடன் சேர்ந்து மௌன தவமுனிவர் கைலாசபதி அவர்களும் கும்பழாவளையில் 1914,1915ஆம் ஆண்டுகளில் கூட்டுப் பிரார்த்தனை ஆற்றியுள்ளமை 'மடாதிபதிகளினால்' உறுதி செய்யப்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டு கும்பழாவளைத் தொண்டர் சபை உருவாகுவதற்கும் இந்தப் பின்னணியே ஆதார சுருதியாக அமைந்துள்ளது. இந்தக் கருத்தினை ஆசிரியர் பரநிருபசிங்கம், ஆசிரியர் சிதம்பரப்பிள்ளை, ஆசிரியர் விஸ்வநாதன், ஆசிரியர் சிற்றம்பலம், ஆசிரியர் செல்லையா, ஆசிரியர் நாகலிங்கம், ஆசிரியர் நாகநாதர், ஆசிரியர் மயில்வாகனம், ஆசிரியர் தம்பிப்பிள்ளை, ஆசிரியர் பொன்னம்பலம், ஆசிரியர் சிவசுப்பிரமணியம், ஆசிரியர் மாணிக்கம், ஆசிரியர் சிவசம்பு, ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, ஆசிரியர் வல்லிபுரம், ஆசிரியர் அருளம்பலம் போன்ற யாவருமே மறுப்பின்றி அங்கீகரித்திருக்கின்றனர். இக்கருத்துக்களே கூட்டுப்பிரார்த்தனைக்கான தோற்றுவாயை இலங்கையில் பதிவு செய்கிறது.

**நயினைச் சுவாமிகள்**

கும்பழாவளைக் கொம்பனின் ஈர்ப்புச் சக்தியினால் சித்தர்களும், ஞானிகளும், முனிவர்களும் அளவெட்டியில் நிறைந்தனர். நயினை முத்துக்குமாரசுவாமிகள் கைலாசபதியின் சமகாலத்தில் வாழ்ந்தவராகப் பலமுறை அளவெட்டிக்கு வருகை தந்து கும்பழாவளையானைப் போற்றி வழிபட்டதுண்டு. இவரும் கூட்டுப் பிரார்த்தனையில் அனைவரையும் சேர்த்து அளவெட்டியை வளப்படுத்தியதுண்டு. இவரது கூட்டுப் பிரார்த்தனையில், காசியப்பர், சின்னப்பர், நாகமுத்து, அருணர், கணபதிப்பிள்ளை, அம்பலம், சரவணமுத்து, தாமு அப்பா, சற்குணசிங்கம் எனப் பல அடியவர்கள் சேர்ந்து விநாயக மகிமையை மேம்படுத்தியதாக அறியக்கிடக்கிறது. இற்றைக்கு நூறு வருடங்களுக்கு மேலாக நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளினால் பாடியும் சேர்ந்தும் பாடப்பட்ட ஒரு அற்புதமான பாடல் அளவெட்டியில் பாடப்படுகின்றது. அதனைப் பாடுவோமாக.

அழகேச னிந்திரன் திருமார்ப னோடயன்
அவரவர்க ளரசிருப்பு உன்
அடிபேணுமடியவர்க் கடிபேணினார் பெறும்
ஆக்கத்தி னொன்றென்னவே
உளமீதி னொருபொழுது மறவாமலே நினைந்
துருகி யுள்ளே நினைந்தால்
ஓங்கார ரூபநீ யன்றி நல் லூர்வுயிர்க்
குண்டோ உரைப்பதற்கு
பழமோதகங் கடலை அவலெள் சருக்கரை
பருப்புக் கருப்பு மிளநீர்
பலகாரமும் பிரிய போதகக் கன்றே
பயம் தவிர்த்தாள வருவாய்
வளமேவு கும்பழா வளையிலுறை வாசனே
வல்ல வாம்பிகை நேசனே
வானாதி பூதசராசரம் தழைக்குமுயர்
மாரியே அருள் வாரியே.

இற்றை வரை கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, புராணபடனம் தொண்டர்களினால் பேணப்பட்டு வளர்க்கப்படுகின்றது. இது தனி ஆய்வுக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் பிரபந்தங்கள் : ஒரு விவரணக் குறிப்புரை

**பிரமஸ்ரீ க.சௌந்தரராஜசர்மா**
*இளைப்பாறிய நூலகர்*



*"சீருற்ற வண்டலைத் தண்டலையுமண்டு புனல்*
*செறியுமென்மலர் வாவியுஞ்*
*செந்நெல்விளை கழனியுமன்னி நிலை பெற்றிடுந்*
*திருஅளவைப் பதியென......"*

சிறப்புப் பெற்ற அளவெட்டிப் பதியிலே, "மஞ்சுதவழ் தெங்கு கமுகங்களு நெருங்கியயல் வளர்கின்ற கும்பழாவளை" என்னும் திவ்விய தலத்திலே எண்ணுதற் கரியானாய், இறைஞ்சினர்க் கெளியானாய் வீற்றிருந்து திருவருள் பாலிக்கின்றார் விநாயகப் பெருமான். அளவிடற்கரிய தெய்வீக சக்தியும், பழம் பெருமைகளும், வரலாற்றுப் பெருமைகளும் கொண்டு திகழும் இத்தலத்திலே உறையும் விநாயகப் பெருமான் செந்தமிழ் சிறக்கத் திருவருள் சொரியும் சுந்தரனென அடியார்களாற் போற்றி செய்யப்படுபவராவார்.

2002இல் வெளியிடப்பட்ட இவ்வாலயக் கும்பாபிஷேக மலரில் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் எழுதிய இத்தலத்தினுடைய வரலாறு பற்றிய கட்டுரையில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை யுடைய ஆலயமாகும். கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைச் சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லி கட்டினாள் என்பது ஐதிகம். "அவளது குதிரை முகமும், குன்மவலியும் தீர வேண்டி கீரிமலை கண்டகித் தீர்த்தத்தில் நீராடிச் சிவ வழிபாடு இயற்றினாள். கோயிற்கடவை வேற்கோயிலில் முருகனை வணங்கி வந்தாள்; முற்றிலுமாகத் தன் நோய்கள் தீர வேண்டி ஏழு விநாயகர் தலங்களில் விநாயகப் பிரதிஷ்டையைச் செய்தாள்"- என்று கூறுவர். அவ்வகையிலே, கும்பழாவளையிலும் விநாயகரைத் தன் நோய்கள் நீங்கும் படியாக வணங்கித் துதித்தாள் என்பதைப் பல்வேறு நூல்கள், பிரபந்தங்கள் வாயிலாக அறிகின்றோம்.

*"மாவையூர் முருகனின் வரம்பெறு வனிதையாம்*
*மாருத வல்லியின் மாமுக நோய்தனை*
*மாவிழி திட்டிமுன் வந்துநின் றகற்றி*
*மாலுமை சிவன் குகன் வைரவர் சூழ்தர*
*ஓவியக் கோயிலில் காவியக் கருவாய்*
*உறைந்திடுங் கும்பழா வளைக்கண பதியே"*

என அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்டகி மூழ்கி முற்றாய்க்
கழிந்திடாக் குதிரைச் சாயல்
கண்டு மாமுகத்தின் வல்லி
கடுகியே அளவை வந்து
பண்டுகும் பழா வளைசேர்
பதிகணபதியே யேந்துத்
தொண்டினைப் புரிந்து நல்ல
திருமுகம் பெற்றே யுய்ந்தாள்"

என முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஆசிரியர் அவர்களும் கூறுவன குறிப்பிடத்தக்கனவாகும். மேற்படி பாடல்களைப் போன்றே இத்தலத்திலுறையும் விநாயகப் பெருமான் மீது பாடப்பெற்ற பல்வேறு வகையான பிரபந்தங்களும், தனிப்பாடல்களும், பக்திப் பாடல்களும், இசைப்பாடல்களைக் கொண்ட இறுவட்டுக்களும் காலத்துக்குக் காலம் வெளிவந்துள்ளன. இவ் இலக்கிய வடிவங்களும் இசை வடிவங்களும் இத்தலத்தின் வரலாற்றையும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் சிறப்புக்களையும், விநாயக அவதாரம் சார்ந்த புராணக் கதைகளையும், கிராம வளம் சார்ந்த செய்திகளையும் எடுத்துரைப்பனவாகவுள்ளன. இவை பாராயணம் செய்வதற்கேற்ற வகையில் அமைந்து, விநாயகப் பெருமானின் அருட்சிறப்பையும், அற்புதச் செய்திகளையும் கூடப் பதிவு செய்துள்ளவையாகவுள்ளன. இவற்றின் முதற் பிரதிகள், முதற் பதிவுகள் என்பவற்றுடன் அவை வெளிவந்த காலம், வெளியிட்டோர் போன்ற தகவல்கள் ஆலயத்தில் பேணப்படுவது அவசியமாகும். ஆலயத் தொண்டர் சபை நூலகம் அவசியம் சீரமைக்கப்பட்டு இவற்றின் பேணுகையில் கவனம் செலுத்துவது வேண்டற்பாலது. அவ்வகையில் ஆலயத் தொண்டர் சபை இப்பிரபந்தங்களின் ஒரு பகுதியை 1982 ஆம் ஆண்டு மகோற்சவ காலத்தில் தோத்திரத் திரட்டாகத் தொகுத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் தற்போது இதன் பிரதிகள் கிடைப்பது அரிதாகவுள்ளது என்பதுடன் வேறும் பல பிரபந்தங்கள், தனிப் பாடல்கள் வெளியாகியுள்ள நிலையில் மீளத் தொகுக்கப்பட வேண்டியுள்ளது.

இக்கட்டுரை இத்தோத்திரத் திரட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள போதிலும், மேற்கொண்ட தேடலின் வழியில் கிடைத்த வேறும் பிரபந்த வெளியீடுகள், கீர்த்தனைகள், தோத்திரப் பாடல்கள் பற்றியும் பதிவு செய்கின்றது. ஆயினும் பிரபந்தங்களின் இலக்கியச் சிறப்பு, பொருட் சிறப்பு, கவியாற்றல், பக்திரஸம் பொங்கும் இசையமைதி போன்றவை பற்றிய நுட்பமான தகவல் பகிர்வினை முழுமையாக மேற்கொள்ளுதல் கட்டுரையை விரிவுபடுத்திவிடும் என்பதால் சுருக்கமான கருத்துரைப்பே மேற்கொள்ளப்படுகின்றது.

**அறிமுகம்**

தமிழிலே சிற்றிலக்கிய வகைப்பாட்டுக்குள் அடங்கும் தொண்ணூற்றாறு வகையான பிரபந்தங்கள் யாப்பு முறைகளுக்கமைய பாடப்படுவனவாகும். பிரபந்தம் என்ற வட சொல்லுக்கு "நன்கு ஆக்கப்பட்டது" எனவும் "தொடர்ந்த பொருள் பற்றிய இலக்கியம்" எனவும் பொருள் கூறுவர். இறைவனிடத்தில் வேண்டுதல் செய்தல், இறைவனிடம் முறையிடுதல், இறைபக்தி காரணமாக உறவு பாராட்டுதல் போன்ற பல்வேறு பொருட் சிறப்பைப் பின்பற்றி இவை பாடப்படுவனவாக அமைகின்றன. மாலை, தூது, பஞ்சகம், அந்தாதி, தாண்டகம், திருப்பள்ளியெழுச்சி, நூற்றந்தாதி, மடல், விருத்தம், உந்தியார், கோத்தும்பி, பிள்ளைத்தமிழ், திருப்பாவை எனப் பல்வேறு இலக்கிய வகைகளில் இப் பிரபந்தங்கள் காணப்படுகின்றன.

ஈழத்திலே, இலக்கிய வரலாற்றுக்கால அடிப்படையில் அந்நியர் ஆட்சிக் காலத்தில் எழுச்சி பெற்ற சமய இலக்கியங் களாக இவை காணப்படுகின்றன. ஸ்சைவாலயங்கள் இடித்தழிக்கப்பட்டு சமயத்தைப் பின்பற்றுபவர்களுக்குப் பல்வேறு நெருக்கடிகள் மிகுந்து அடைந்த துன்பங்கள் நீங்கி ஆலயங்கள் மீள உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் சமய உணர்வை ஊட்டுவதற்கும், தலங்களின், இறைவனின் சிறப்புகளை எடுத்துரைக்கவும் புலவர்களாலும், பண்டிதர்களாலும், கவிஞர்களாலும், இசைவல்லுநர்களாலும் படைக்கப்பட்ட இவ் இலக்கியங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களினது உள்ளத்தை நெகிழ்வித்து பக்தியை வளர்க்கும் ஆற்றலுடையனவாக இருந்தன. பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணி மாலை, சதகம், பதிகம், அம்மானை, ஊஞ்சல், புராணங்கள் போன்ற ஒரு சில பிரபந்தங்களே அதிகமாகப் பாடப்படுவனவாக அமைந்தன. சமய உணர்வால் ஏற்பட்ட இறைநம்பிக்கையை வலுப்படுத்துவதற்கு உதவவல்ல இப்பிரபந்தங்கள் மனமுருகிப் பாராயணஞ் செய்வதற்கு ஏற்றன. அவ்வகையில் அளவெட்டி கும்பழாவளைப் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சந்திரசேகரப் பிள்ளையார் பேரில் எழுந்த பிரபந்தங்களைப் பற்றிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. அளவெட்டி ஸ்ரீ விநாயகப் பெருமான் திருப்பள்ளியெழுச்சி

திருக்கோயில்களில் தினசரி அர்த்தஜாமப் பூஜையின் பின் பள்ளியறைப் பூசையும், விடியற்காலை உதயபூசைக்கு முன் திருப்பள்ளி எழுச்சிப் பூசையும் நடைபெறுவது வழக்கம். அதன்போது பாடப்படும் பதிக வடிவமாக திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள் அமைகின்றன. அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரால் பாடப்பெற்ற கும்பழாவளை விநாயகர் பேரிலான திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் தோத்திரத்திரட்டுத் தொகுப்பிலும், திருமதி கல்யாணி லோகநாதன் ஆக்கிய தலவரலாறு (2002) நூலிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சூரிய உதயத்துடன் உலகத்தவர் பள்ளி எழுவதற்கான உணர்வை அடைவர். அவ்வாறே ஞானோதய நிலையில், ஆத்மாவின் பள்ளியெழுச்சிக்கான உணர்வு உயர்வு பெறும். உயிரின் உயிராக உறைந்துள்ள இறைவனை இரவில் பள்ளியறையில் பள்ளி கொள்ள வைப்பதும், அதிகாலையில் பள்ளியெழ வைப்பதும் உலகியல் அனுபவ நிலையை, குறியீடாக உணர்த்தினாலும் ஆலயத்திலோ அல்லது எமது உயிரிலோ இறைவன் பள்ளியெழுந் தாலன்றி ஆன்மாக்களுக்குப் பள்ளியெழுச்சி இல்லையென சமய ஆன்றோர் அறுதியிட்டு உரைத்துள்ளார்கள். ஞான வழியில் நின்ற மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருப்பள்ளியெழுச்சியின் வழி நின்று, பிற்காலத்தில் தாம் வழிபடும் கடவுளர்களுக்குத் திருப்பள்ளியெழுச்சிப் பதிகம் பாடும் மரபு உருவாகி யுள்ளது. அவ்வகையிலே கும்பழாவளைப் பிள்ளையாரை அடியார்களின் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டாக "பள்ளி எழுந்தருள் செய்குவையே" என்று அருட்கவி இப்பாடல்கள் மூலம் வேண்டி சமய தத்துவத்தை வெளிப் படுத்துகின்றார். இதற்கமைவாக சில வருடங்கள் முன்பு வரை அதிகாலை 4 மணிக்கு அடிக்கப்படும் அசையா மணியின் நாத ஒலி ஊரெங்கும் பரவி, அடியவர்களின் செவிகளில் பட்டு, அவர்கள் உணர்வில் ஊறி, "பிள்ளையாரப்பா" என்று கைதொழுதபடி எழ வைக்கும். அடுத்து ஆலய ஒலிபெருக்கியில் இப்பாடல்கள் ஓங்கி ஒலித்து ஊரை நிறைத்தன. இப்பாடல்களை அளவையூர் இ.சோமசுந்தரேஸ்வரக் குருக்கள், இசை வித்தகர்களான வி.கே.நடராசா, வி.சிவஞானசேகரம், கா.கோபிகா ஆகியோர் தமது இனிய குரல்களால் பக்திரஸம் பொங்கப் பாடி ஒலிநாடாவில் பதிவு செய்துள்ளார்கள்.

"போற்றியெம் மாதவம் பூத்தமெய்ப் பொருளே..." எனத் தொடங்கி, ".... ஆற்றிடு நின்னரு ணிதியுல குவப்ப..." எனத் தொடர்கின்ற அருட்கவி "எம்மாதவத்தால் இப்பதியிலே எழுந்தருளியுள்ள ஐங்கரனே, உன் அருள்நிதி பெற்று உலகத்தோர் மகிழ்ச்சியுறும் விதமாக எழுந்தருளாயே" என வேண்டுகின்றார். இது,

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு

பலர் புகழ் ஞாயிறு கடற் கண் டாங்கு..." எனத் திருமுருகாற்றுப்படையிலே நக்கீரதேவர் பாடியதை ஒத்திருப்பது இன்புறத்தக்கதாகும். "கீழ்த்திசையில் அலைகடலின் மேல் சிறிது சிறிதாக மேலெழுந்து இருளில் மூடிக் கிடக்கும் உலகத்தைத் தன் செங்கதிர்க் கரங்களால் ஒப்பனை செய்யும் சூரியன் எழுந்து விட்டான்; விண்ணில் பரந்து ஒளி வீசிய நட்சத்திரங்கள் ஒளி குன்றி மங்கிவிட்டன; உன் குளிர்மை பொருந்திய திருவடியை என்றும் தம் சிந்தையிற் கொண்டுள்ள அடியார்கள் உன் ஆலயத்தை வந்து சேர்ந்து வணங்கக் காத்திருக்கிறார்கள் கும்பழாவளை உறையுங் கணபதியே, ஐங்கரப் பெருமானே, உலகம் உவப்ப உன் திருவருளையுணர்ந்து உய்திபெறப் பள்ளி எழுந்தருளாயே"என்று முதற்பாட்டிலேயே பள்ளியெழுச்சிக்கான தத்துவப் பொருளை அருட்கவி பொதிந்து வழங்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. பதினொரு பாடல்களைக் கொண்ட இப்பதிகம் உள்ளம் குழைந்து உருகுவித்துப் பேருவகை தரவல்ல சிறப்புடையதாகும். சொல் நயம், பொருள் நயம் மிக்க இப்பாடல்கள் இன்னோசை நயமும் மிக்கதாக இருப்பதால் இசைவல்லுநர்களால் பாடப்பெற்று ஆலயத்தில் ஒலித்துக் கொண்டிருப்பது சிறப்பாகவுள்ளது.

அத்துடன் ஊரின் சிறப்பு, ஆலயத்தின் தோற்ற வரலாறு, பிள்ளையாரின் திரு உருவச் சிறப்பு, விநாயகரின் புராணக் கூறுகள், அருளாட்சியின் மாண்பு, அற்புதங்களின் அரிய பதிவுகள், அடியார்களின் பக்தியின் சிறப்பு, தொண்டுள்ளங்களின் தூய பணிகள் என இலக்கண வரம்புக்குள் நின்று அணி நலமிக்க அருந்தமிழால் பாடியுள்ளார். இறுதிப் பாடலில், ஐந்தெழுத்தின் சிறப்பும், சிவ சின்னங்களின் மேன்மையும் கூறி, உயர்வுடைய சைவ சமய நெறியினின்று அடியார் வேத, சிவாகமங்கள், திருமுறைகள் காட்டும் நெறியில் ஒழுகுபவர்களாக விளங்கவும், எந்நேரமும் மாரி வளம் பெருகிடவும், அத்தோடு செந்தமிழ் சிறந்தோங்கவும் கும்பழாவளை விநாயகரின் திருவருளை மிகவேண்டிப் பக்திச் சுவை நனி சொட்டப் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. கும்பழாவளை விநாயகர் தோத்திரமாலை

1933ஆம் ஆண்டில் அளவெட்டி ஆயுர்வேத வைத்தியர் திரு.க.வே.கந்தையாபிள்ளை அவர்களால் வெளியிடப்பெற்ற இத்தோத்திரமாலை அளவெட்டி வடக்கில் வாழ்ந்த இ.வேதாரணியர் என்பவரின் மூதாதையர் ஒருவரால் இயற்றப்பட்டதாகும். கும்பழாவளை விநாயகரின் மீதான பேரன்பு மேவ, கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆன இச் சதகத்தை யாத்துள்ளார் என்பதை உணர முடிகின்றது. 1933இல் அச்சில் வெளியாகு முன்னரே இதன் ஒன்பது செய்யுள்களும் சில இடங்களில் பதங்களும் சேதமாகி அழிந்த நிலையில் பிரசித்த நொத்தாரிஸ் திரு.த.சபாபதிப்பிள்ளை அவர்களால் அவை திருத்தம் செய்யப்பட்டே அச்சிடப்பட்டன. இச் சதகம் 1982இல் கும்பழாவளைத் தொண்டர்சபை வெளியிட்ட தோத்திரத்திரட்டு நூலில் முழுமையாக இடம்பெற்றுள்ளது. இந்நூலில் காப்புச் செய்யுள் ஒன்றும், தோத்திரமாலைச் செய்யுள்கள் நூறும், நூற் பயன் கூறும் செய்யுள்கள் மூன்றும் கொண்டு அமைந்துள்ளது.

*"பாவவினை காரணமாகப் பிறப்படைந்தேனாகிலும் உன் பேரருளாலே, படுந்துயர் யாவற்றையும் மாற்றியமைத்து, காலன் வரும் போதினில் என்னைக் காத்தருள்வாய்"*

என்னும் கருத்தமைந்த வேண்டுதல்களை ஒவ்வொரு பாடலிலும் பொருத்தமுறப் பொருத்திப் பிள்ளையாரை வேண்டுகின்றார் நூலாசிரியர்.

செய்யுளின் ஈற்றடியிலே, கும்பழாவளை நாயகமே, நிர்மலனே, ஐங்கரனே, தற்பரனே, வாரணமே, வாரிதியே, கற்பகமே, வானவனே, அற்புதனே, தயாபரனே, தேசிகனே, பூரணனே, குஞ்சரமே, மாமணியே, மதகளிறே, புங்கவனே, கைக்குன்றமே, வான்பொருளே, பாக்கியமே, தூமணியே, கண்ணுதலே, காரணனே, பேரின்பமே, ஏரம்பனே, சிற்பரனே, தெள்ளமுதே, பராபரனே, உத்தமனே, ஊர்பரனே, அங்குசனே என்று பிள்ளையாரைப் பலபட விளித்து தன் துயர்களை, ஆன்மீக நாட்டத்தை, திருவருள் நாட்டத்தை செந்தமிழ் நயம் மிக்கதாகப் பாடல்களில் பொதிந்து பாடிப் பரவுகிறார்.

இப்பாடல்கள் அவரது குடும்ப வெளியீடாகவும், வெளியிடப்பட்டுள்ளன. கும்பழாவளை ஆலய பிரதம குருவாக விளங்கிய சிவஸ்ரீ இ.சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் பொருளுக்கேற்ற வகையில் இசைநயமும் பக்தி நயமும் மேவப் பாடி இறுவட்டுப் பதிவாகவும் இப்பாடல்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் தினமும் ஐந்து மணியளவில் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களையும், இத் தோத்திரப் பாடல்களையும் ஆலயச் சூழலில் உள்ள அன்பர் மங்களேஸ்வரன் தனது வணிக நிலையத்தில் ஒலிக்கச் செய்யும் கைங்கரியத்தை தவறாமல் மேற்கொண்டு வருகின்றார். போற்றப்பட வேண்டிய அருந்தொண்டாகும்.

## 03. அளவைக் கும்பழாவளைப் பதிகம்

இப்பதிகம் திரு.அ.பரநிருபசிங்கம் அவர்களாற் பாடப்பெற்றதாகும். பதிகம் என்ற சொல் பத்து என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததாகும். பொதுவாகப் பதினொரு செய்யுள்களைக் கொண்டதான பதிகத்திலே முதலில் உள்ள பத்துச் செய்யுள்களிலே இறைவனுடனான பக்தி அனுபவத்தைப் பெரிதும் பாடுவர். காரைக்கால் அம்மையாரால் தொடக்கி வைக்கப்பட்ட பதிக வடிவத்தைப் பின்தொடர்ந்து அப்பர் சுவாமிகளும், சம்பந்தப் பெருமானும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பதிகம் பாடி வணங்கினர். இவர்களுடைய பதிகங்களிலேயே மேற்சொன்னபடி அமைந்த பத்துப் பாடல்களும் திருக்கடைக்காப்பு என்றும் முத்திரைக்கவி என்றும் சிலாகிக்கப்படும் பதினொராவது பாடலிலே இப்பதிகத்தினுடைய பாடற் பயன் கூறப்படும். இவ்வகையிலே, கும்பழாவளைப் பதிகத்திலே காப்புப் பாடல் ஒன்றும், பதிகப் பாடல் பத்தும், வாழிப்பாடல் ஒன்றுமாக பன்னிரண்டு பாடல்கள் அமைந்துள்ளன.

*"செந்தமிழ்க் கவிஞர் புகல்கவிவகைகள் கலைவகைகள்*
*தெளிவுறுந்துறையின் முறைகள்*
*செப்பிடுமிலக்கண விலக்கிய விதங்களின்*
*நிறமறிகிலாத சிறியேன்..."*

என முதற் பாடலில் மட்டுமல்லாது ஒவ்வொரு பாடலிலும் முதற்பகுதியிலே தன்னை வெகுவாகத் தாழ்த்திப் பாடும் ஆசிரியர், கும்பழாவளை மேவிய மாவிக்கினேஸ்வரனே என்று விளித்து விநாயகப் பெருமானிடம் ஆன்மீக நலமோங்கும் வேண்டுதல்களைச் சமர்ப்பிக்கின்றார். இவ் வேண்டுதல்களினூடே விநாயகப் பெருமானின் அருட் சிறப்பை, புராணங்கள் கூறும் கருத்துக்களை, ஊர் பெருமைகளை நுண்ணியதாகப் பதிவு செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கடி முதல் எட்டடி வரையிலான ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் ஆகிய பத்து அல்லது இருபது செய்யுள்களாற் பதிகம் என்னும் இலக்கணத்துக்கமையப் பன்னிரு சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்களால் (இரட்டை ஆசிரிய விருத்தம்) இப்பதிகத்தைச் செம்மையுறப் பாடியுள்ள ஆசிரியர், மிகச் சிறப்பாக வாழிப் பாடலைப் பாடியுள்ளார்.

*"பார்வாழியளவை நன்னகர் வாழி பகர்கும்*
*பழாவளைப் பதி வாழி நூல்*
*பயிலுமார் பந்திகழுமந்தணர் குலம்வாழி*
*பன்னுமெழி லாலயத் தின்*
*சீர் வாழிவே தாகமங்கலைகள் சாஸ்திரஞ்*
*செப்பமு டன் வாழி நாளுந்*
*சிந்தைகொடு வந்தனைபுரிந்திடு மெய்யடியார்க*
*டிரமொடு சிறந்து வாழி..."*

எனச் சிறப்புடன் இப்பாடல் தொடர்கின்றது.

## 04. கும்பழாவளை இரட்டை மணி மாலை

இப்பிரபந்தம் அழகொல்லைப் பிள்ளையார் ஆலய அந்தணர் பரம்பரையைச் சேர்ந்த சிவஸ்ரீ ச.பரமசாமி ஐயர் அவர்களால் பாடப்பெற்றதாகும். இரட்டைமணி மாலை என்பது வெண்பாவும், கலித்துறையுமாக அல்லது வெண்பாவும், விருத்தமுமாக இருபது பாக்கள் அந்தாதி தொடையில் அமையும் படியாகப் பாடுவதாகும். அந்தம், ஆதி ஆகிய இரு சொற்களால் ஆகியது அந்தாதி ஆகும். ஒரு செய்யுளின் இறுதி பின்வரும் செய்யுளுக்கு முதலாக வரத் தொடுக்கப்படும் தொடையாகும். இங்கு செய்யுளின் இறுதி என்பது செய்யுளின் முடிவில் உள்ள சீர், அசை, எழுத்து இவற்றுள் யாதேனும் ஒன்றினைக் கொண்டதாக அடுத்துவரும் பாடலின் முதற்சீர், அசை, எழுத்து ஒத்ததாக அமையும். மேலும் பிரபந்தங்களின் இறுதி திரும்பவும் முதற் செய்யுளின் தொடக்கத்துடன் தொடையாகத் தொடுக்கப்படும். இதுவே அந்தாதித் தொடையின் அமைப்பாகும்.

இங்கே கும்பழாவளை இரட்டை மணி மாலை பவளமும், முத்தும் என இரு வேறு மணிகளைக் கொண்டு கோர்த்த மாலை போல் வெண்பாவும், கலித்துறையும் என மாறி மாறி அமைந்து சிறப்பைப் பெறுகின்றது. காப்பு வெண்பா ஒன்றும், நூலில் வெண்பாவும், கலித்துறையுமாக மொத்தம் இருபது செய்யுள்களும் இலக்கண முறை தவறாமல் அந்தாதித் தொடை அழகுடன் அமைந்துள்ளன. பொருட் சிறப்பும், செந்தமிழ்ச் சிறப்பும் கூட இச் செய்யுள்களில் விரவியமையப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

*"தெள்ளுமு ணர்வுடையோர் செப்புதிருப் பாடலைப்போல்*
*கள்ளனேன் பாட்டுங் கனியுமோ - கொள்ளுமெழில்*
*வாய்க்குமதிற் கும்பழாவளை வாழ்ந் தன்பரிடர்*
*தேய்க்குங் களிற்றின் செவிக்கு."*

"கும்பழாவளைக் களிறு ஆகிய பிள்ளையாரின் செவிக்கு கள்ளனான தனது பாட்டு கனிவாக இருக்குமோ" என்ற கவலையுடன் தொடங்கும் புலவர், அடுத்த பாட்டிலேயே "பிள்ளையாரே, உனது திருவருளால் செவிக்கு இன்பம் செய்யும் உனது புகழ்ப் பாடிக் கலங்கி மனம் தவிக்கும் இந்தக் கவிக்கு அருள் செய்வாயே"- என்று பணிகின்றார். பிள்ளையாரின் அருளை வேண்டும் எளியவனாகத் தன்னைத் தாழ்த்தி அவரது திருவருளினாலேயே "புன்பிறவி வேதனைகள் போதுமென அலறும் அன்பர் இடரகற்ற" வேண்டுமென இறைஞ்சுகின்றார். புலவரின் கவியாற்றலை இரட்டை மணி மாலை நன்கு வெளிப்படுத்தி அமைந்துள்ளது.

## 05. அளவை நகர் கும்பழாவளை விநாயகர் பேரில் பாடிய கலிவெண்பா

கடினமான பதச் சேர்க்கையும், சந்தப் பொலிவும் கொண்டமைந்து இலகுவில் பொருள் விளங்கிக்கொள்ள முடியாத வகையில் அமைவன கலிவெண்பா செய்யுள்களாகும். வெண்டளை தழுவி ஈற்றடி முச்சீராய் முடியும் படியான கலிவெண்பா அடிவரையறை கூறப்படாத செய்யுள் வகையாகும். இவ் இலக்கண விதிகளுக்கு அமைய இக் கும்பழாவளை பாமேவு சொற் கலிவெண்பாவும் எழுபத்தியேழு கண்ணிகளால் ஆக்கப்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......................... உண்மைமிகு
தெள்ளுமுணர்வுடையோர் சேர்ந்துதம - துள்ளத்தே
யன்பு வைத்துக் கைகூப்பி யானந்தநீர் சொரிந்து
முன்பு நின்று தன்னை முறை வணங்கி - யின்பசுக
வாழ்வையெமக் களிப்பாய் வானவனே போற்றியென்று
தாழ்விலாதேத்தத் தகுபலனை - வாழ்வுபெறு
வாரியமுதமென மற்றவர்க்குத் தந்தருளிக்....."

எனச் சந்தச் சிறப்பும் யாப்பமைதியும் பெறக் கலிவெண்பாவை நன்கு புனைந்துள்ளார் வைத்தியர் அ. கதிரித்தம்பி அவர்கள்

குறிப்பு - எதிர்காலத்தில் தோத்திரப்பாமாலை அல்லது இக் கலிவெண்பா மீள்பதிப்புக் காணும்போதில் கண்ணிகள், சீர்கள் பிரித்து அச்சிடுவது சிறப்புடையது. (கட்டுரை ஆசிரியர்)

### 06. கும்பழாவளை விநாயகர் பதிகம்

இதனை யாத்தவர் அளவெட்டியைச் சேர்ந்த பிரபல நொத்தாரிசாக விளங்கிய திரு. த. சபாபதிப்பிள்ளை அவர்களாவார். இவரே கும்பழாவளைப் பிள்ளையார் திருவூஞ்சல், ஸ்ரீசுப்பிரமணியர் திருவூஞ்சல் என்பற்றினைப் பாடியவராவார். அத்துடன் 1933ஆம் ஆண்டில் கும்பழாவளை பிரபந்தத் திரட்டு என்ற பெயரில் வெளியிடப்பட்ட நூலில் இத் தலத்தின் மகிமையும், நூல் வரலாறும் என்னும் கட்டுரை மூலம் பல தகவல்களை ஆவணப்படுத்தியவராவார்.

காப்புச் செய்யுள் ஒன்றும் ஆசிரிய விருத்தம் பத்துமாக அமைந்த இப்பதிகம் "அருள் பழுக்குந் நங்கற்பகமே" என விநாயகரை விழித்துப் போற்றுகின்றது. நித்தம் தொழும் அடியார்களுக்கு கும்பழாவளை விநாயகர், திருவருளால் யாவற்றையும் நேர்விக்கும் இயல்புடையவராதலால் "உன்னைப் போல் வேறு தெய்வங்கள் இல்லையே" என வியந்து நிற்கின்றார்.

"கும்பழாவளை ஐங்கரனே எல்லாம் தரும் வள்ளலாகிய நீரே மழையற்று அழியும் பயிர் போன்ற என்னைக் காக்காதுவிடின் வேறு யார்தான் காப்பாரோ" என்று கவலையுறுகின்றார். "பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு உதவும் தெப்பம் நீரேயன்றோ" என்று உகை மாயைகளிலிருந்து விடுபடுவதற்கு விநாயகப் பெருமானின் பெருங் கருணையே துணையென்பதை இப் பதிகத்தில் மிகச் சிறப்பாகவே பதிவு செய்கின்றார்.

கும்பழாவளைத் தலம் பற்றிப் பலபடச் சிறப்பித்துக் கூறுவதை பாடல்கள் தோறும் அவதானிக்க முடிகின்றது.

"மருநாண் மலர்பொழில் சூழ் கும்பழாவளை"
"பூந்தண் பொழிற் கும்பழாவளை"
"நாகங் கிழிக்கும் பொழிற் கும்பழாவளை"
"உறிதிரை நீர்ப்படிநாறு சீர்க் கும்பழாவளை"
"வரிவளி பாடும் பொழிற் கும்பழாவளை"
"மடியாப் புகழ் கும்பழாவளை"

என கும்பழாவளைப் பதியையும் இங்கு வீற்றிருக்கும் கற்பக விநாயகரைத் துதி செய்வதாகவும் இப் பாடல்கள் பக்தி உணர்வை வெளிக்காட்டும் தன்மையுடன் அமைந்துள்ளன.

### 07. அளவைக் கும்பழாவளை விநாயகரூஞ்சல்

ஈழத்துப் புலவர்களால் பெரிதும் சிறப்பாகக் கையாளப்பட்ட பிரபந்தங்களுள் இதுவுமொன்றெனக் கலாசிதி ஆ. சதாசிவம் குறிப்பிடுகின்றார். ஊசல் என்று அக்கால வழக்கில் பயிலப்பட்டு தற்போது ஊஞ்சல் என வழங்கப்படுகின்றது. ஆடீரூஞ்சல், ஆடாவோவூசல் எனவும் ஆடிரூசல், ஆடாமோவூஞ்சல் எனவும் பல செய்யுள்களில் வழங்கி வருகின்றது. குழந்தைகள், சிறுவர்கள், மணமக்கள், அரசர்கள் போன்றோரை ஊஞ்சலில் வைத்து ஊஞ்சலாட்டி இன்புறுதல் பொதுவாகக் காணப்படும் வழமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹோற்சவக் கிரியைகளின்போது விழா முடிவிலே, திருக்கல்யாண விழாவிலே இறைவனையும் ஊஞ்சலில் வைத்து ஆட்டி ஊஞ்சலிசை பாடுவது வழமையாகும். கும்பாபிசேக நிறைவு நாளிலும் கந்தசஷ்டி, விநாயக சஷ்டி, திருவெம்பாவை நிறைவு நாளிலும் ஊஞ்சல் இடம்பெறுவதுண்டு. பக்திநலம் மிக்கதாக, அத் தலத்தின் சிறப்புகளையும், இறைவனின் திருவருட் பெருமைகளையும் பேசுபனவாகவும் சித்தாந்த விளக்கம் நிறைந்தனவாகவும் இப்பாடல்கள் அமைந்திருக்கும். பண்டிதர்களும், புலவர்களும், இசைக் கவியாற்றல் உடையயோரும் இவ்வகைப் பாடல்களை யாத்துள்ளனர். ஒருவரே பல தலங்களுக்கும் ஊஞ்சலிசை பாடுவதுண்டு.

ஞானத்தையும், கல்வியையும் வழங்குபவர் விநாயகர். "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று விநாயகரிடம் ஔவையார் வேண்டுகிறார். விநாயகரை வணங்கினால் கலைஞானம் கற்கின்ற விடயமேயில்லை என்று உமாபதிசிவம் கூறுகின்றார். அவ்வகையில் நீண்டகால மகோற்சவப் பாரம்பரியமுடைய கும்பழாவளைப் பிள்ளை யாருக்கு உரிய ஊஞ்சற் பாடல்களை திரு.த.சபாபதிப்பிள்ளை அவர்கள் பாடியுள்ளார். அவ்வகையில் இப் பிரபந்தம் நீண்ட காலப் பயன்பாட்டிலுள்ள ஒன்றாகும்.

### 08. கும்பழாவளை ஸ்ரீ சுப்பிரமணியர் திருவூஞ்சல்

இவ்வூஞ்சற் பாக்களையும் த.சபாபதிப்பிள்ளை அவர்களே பாடியளித்துள்ளார். கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்தில் எழுந்தருளி விக்கிரமாகவுள்ள ஆறுமுக சுவாமி பேரில் பாடப் பெற்ற காப்புப் பாடல் ஒன்றும் ஊஞ்சற் பாடல்கள் ஆறும் வாழிப்பாடல் ஒன்றுமாக எட்டுப் பாடல்களை இவ்வூஞ்சலிசை கொண்டுள்ளது. முருகப் பெருமானது வரலாறு, அவரது திருவருட் பொலிவு, அண்ணன் விநாயகருடன் கும்பழாவளையில் இணைந்து அடியார்க்கு அருளும்பாங்கு, இரு மங்கையரை மணம் புரிந்தமை எனக் கந்தபுராணச் செய்திகளைப் பொதிந்து பாடப் பெற்றுள்ளது. பக்திநலமும் இசைப் பாங்கும் நிறைந்த இவ்வூஞ்சலிருந்து ஒரு பாடல்

*"இந்திரனுக் கரசளித்தீர் ஆடீரூஞ்சல்*
*இமயவர்தம் பதமளித்தீர் ஆடீரூஞ்சல்*
*பந்தமயல் சூரறுத்தீர் ஆடீரூஞ்சல்*
*புகுமடியார் பவமறுத்தீர் ஆடீரூஞ்சல்*
*தந்திமுகர்க் குறுதுணையாய் வினைகள் தீர்த்து*
*தகுகும்பிழாவளையில் அமர்ந்தெஞ்ஞான்றும்*
*அந்திவண்ணன் தரும்புதல்வா ஆடீரூஞ்சல்*
*ஆயிழையார் இருவரொடும் ஆடீரூஞ்சல்"*

### 09. கும்பழாவளை விநாயகர் போற்றித் திருப்பதிகம்

இப்பதிகம் அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவரால் ஆக்கப்பட்டதாகும். செய்யுளின் இறுதி அடியில் கும்பழாவளை திகழ் கணேசனே போற்றி போற்றி எனச் சீர்கள் அமைந்துள்ளன. விருத்தப் பாக்கள் பத்து கொண்ட இப்பதிகம் எளிய பதங்களால் ஆக்கப்பெற்று எல்லோருக்கும் எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் சீர் பிரித்த வண்ணம் இலகு நடையில் அமைந்துள்ளமை விரும்பத்தக்கதாகும். அதேசமயம் செய்யுள் ஒவ்வொன்றிலும் பதியப்பட்டிருக்கும் புராண, இதிகாசக் குறிப்புக்கள் விநாயகப் பெருமானின் பரத்துவத்தைப் பதிவு செய்வனவாக மிளிர்கின்றன.

கூட்டுப் பிரார்த்தனைகளில் இப் பதிகத்தைப் பாடுவது பக்தி இலக்கியங்களைப் பாடியவர்களின் நோக்கங்களை நிறைவேற்றி மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றின் வியாபகத்தை மேம்படுத்தும். வழிபடு தெய்வத்தை வாயாரப் போற்றிப் பாடுவது "வாயே வாழ்த்து கண்டாய்" என அப்பர் சுவாமிகள் அருளியவாறு சிறப்புடைய வழிபாடாகும். போற்றித் திருவகவல் பாடிய மாணிக்க வாசகர் அகவலின் ஈற்றுச் சொல், "போற்றி" என அமைந்த பண்புடையது. கந்த புராணத்திலும், "பன்னிரு கரத்தாய் போற்றி" என்ற போற்றிச் செய்யுள் உண்டு. அந்த வகையில் சீ.வி.புலவரின் இப் போற்றித் திருப்பதிகம்,

*"பேர் பொலியும் வேதமுட னாகம வளந் தரும்*
*பிரணவா போற்றி அடியார்*
*சீர் பொலியும் நெஞ்சிலுறை சீலனே போற்றி நம்*
*செல்வனே போற்றி...."*

என விநாயகரைப் போற்றி செய்து வணங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10. அளவெட்டி கும்பழாவளை விநாயகர் திருவிரட்டை மணிமாலை

இந்நூல் தெல்லிப்பழை வித்தகபுரம் விழிசிட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் செ.சிவசுப்பிரமணியம் (விழிசைச் சிவம்) அவர்களால் இயற்றப்பட்டது. இதனை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தார் 15.05.1992இல் கும்பழாவளை பிள்ளையார் மகோற்சவத்தின்போது வெளியீடு செய்துள்ளார்கள். சைவா சாரசீலமுடைய விழிசை சிவம் அவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும், சமய சாஸ்திரங்களிலும் கற்று ணர்ந்த பெரியவராவார். திருமுறைப் பண்ணிசையாளராகவும், புராண படனத்திலும் ஈடுபாடுடையவராகவும் விளங்கும் இவர் செய்யுள் இயற்றும் ஆற்றலுடையவர். நகுலகிரிப் புராணத்திற்கு இவர் உரை செய்து சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவராவார்.

யுத்தகால இடப்பெயர்வு காரணமாக 1990இல் அளவெட்டிக்கு வந்தகாலை, கும்பிளாவளைப் பிள்ளையாரை வழிபட்டுப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு இப் பிரபந்தத்தைப் பாடியுள்ளதுடன், கும்பழாவளைப் பிள்ளையாரின் சப்பறத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழாக்கள் பற்றிச் சிறார்களுக்கு ஏற்ற பாடல்களையும் பாடியுள்ளார். இலக்கண விதிகளுக்கமைய திருவிரட்டை மணி மாலை, இரட்டை மணிமாலை என்பன ஒரே வகைப் பிரபந்தங் களாகும். பிரம்மஸ்ரீ ச.பரமசாமி ஐயரால் பாடப்பெற்ற கும்பழாவளை இரட்டை மணி மாலையில் வெண்பாவும், கலித் துறையும் அடுத்தடுத்து அமைந்திருந்தன. ஆனால் கும்பழாவளை விநாயகர் இரட்டை மணி மாலையில் வெண் பாவும், கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களும் அடுத்தடுத்ததாக இருபது வரை அமைந்துள்ளன. இந் நூலுள்ள கட்டளைக் கலித்துறை அடிதொறும் ஐந்து சீர்களையுடையதாய், ஒவ்வோரடியும் தனித் தனியே வெண்டளை யமைய ஈற்றுச் சீர் மட்டும் ஏகாரத்தில் முடியும் விதமாக அமைத்துள்ளார். நிரை முதலாகிய அடியில் பதினேழு எழுத்துக் கணக்கைத் தவறாது கடைப்பிடித்து நூலாசிரியர் சிறப்பாகப் பிரபந்தத்தை யாத்துள்ளார். 10 ஆவது செய்யுளில்

*"வாயா லுனையென்றும் வாழ்த்திட வெண்ணார்தம் வன்றலையால்*
*சேயா முனையே வணங்கிட வெண்ணார் தினமுமிங்கே*
*நாயா யலைந்து திரிவார் எவர்க்குமே நன்மையிலார்*
*தீயாரைச் சேருவார் தீர்த்திட மாட்டார்தம் விக்கினமே"*

என மாய வலைப்படும் மாந்தர் நிலை பற்றிக் கூறியவர், அதனை நீக்கும் வழியாக பதினெட்டாம் செய்யுளில் பதில் கூறுகின்றார்.

*"சேரா விடந்தனைச் சேர்வது தீதென வேபெரியோர்*
*ஆராய் வுடனே அறிவுரை கூறிவைத் திட்டனரே*
*சீராக வாழ்ந்திட வேண்டுமெ னிற்கும்ப ழாவளைவாழ்*
*பேரார் கணபதி நாமந் தினந்தினம் பேசுவமே"*

### 11. அளவெட்டி கும்பழாவளை விநாயகர் பாமாலை

இந்நூலை அளவெட்டி பண்டிதர், செந்தமிழ் வித்தகர் த.சிவலிங்கம் அவர்கள் ஆக்கியுள்ளார். நீண்டகாலமாக கும்பழாவளைப் பிள்ளையார் அடியாராக விளங்கிய பண்டிதர் இறைவன் மீது கொண்ட பேரன்பினால் பாடிய பாடல்களைத் தொகுத்து பாமாலையாக்கி 1981இல் வெளியீடு செய்தார். 1930ஆம் ஆண்டு தொடக்கம் 1958 ஆம் ஆண்டு வரை வெளியான ஈழகேசரி பத்திரிகையில் 1933ஆம் ஆண்டில் தான் முதன்முதலாக சிறுகதை இலக்கியம் வெளியாகத் தொடங்கியது. அவ்வாறு வெளியான முதல் சிறுகதையை எழுதியவராகச் சிறப்பிக்கப்படும் த.சிவலிங்கம் அவர்கள் 1940ஆம் ஆண்டளவில் கும்பிளாவளை ஆயை மடத்திலும், சூழலிலும் வசிக்க வேண்டியேற்பட்ட காலம் முதல் இவ் விநாயகரின் திருவருட் சிறப்பையும், அடியார்களின் பக்தியுணர்வையும் நன்கு அனுபவித்து உணர்ந்த வராவார். மேலும் தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவர் பதவியில் இருந்து தனது வாழ்வின் பெரும் பகுதிக் காலத்தை இவ் ஆலயத்தின் திருப்பணிகளுக்கு அர்ப்பணித்த பேராசான் திரு.செ.மயில்வாகனம் ஆசிரியரின் சேவைச் சிறப்புகளை அருகிலிருந்து பார்த்து மகிழ்ந்த வகையில் இந் நூலை அவருக்குச் சமர்ப்பித்து வெளியிட்டுள்ளார்.

*"தாடி யடர்தோற்றம் தந்துமயில் வானகப்பேர்*
*சூடி யருள் கும்ப ழாவளையை - நாடி நின்று*
*எல்லோரும் போற்ற எழில்செய் சேவை செயும்*
*நல்லார்க்கிந் நூல்தந்தேன் நான்"* என்பது அவரது சமர்ப்பண வெண்பா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகனே*
*கும்பழா வளையிலருட் கோலம் கண்டு*
*சொக்கியுளம் பறிகொடுத்தே யுனதுபதம்*
*அனுதினமும் போற்றி யேத்தி*
*நெக்குருகி நின்றுதொழு மடியார்போல்*
*நித்தலும்வந் துனதுபதம் பூசிக்காத*
*மக்களெனை யாட்படுத்தி நாயேனும்*
*கடைத்தேறும் வழிகள் செய்வாய்"* என வேண்டுதல் செய்யும் பண்டிதர்,

*"குண திசையில் தினகரன்தன் கதிர்பரப்பிக்*
*குவலயத்தின் இருள்கடியப் புலருமுனர்*
*அனுதினமும் வந்துனது கோலக்காட்சி*
*அந்தணர்கள் தீபஒளி யோடுகாணும்*
*புனிதமிகு பக்தருடன் சேர்ந்து நானும்...."* என அக்காலப் பூசைச் சிறப்பைக் குறிப்பிடுகின்றார்.

அக்காலத்தில் மின்சார வசதி இல்லாத நிலையில் அதிகாலைப் பூசைக்கு மக்கள் வந்த விதம் பற்றிப் பாடும் பண்டிதர்,

*"காற்றுமழை குளிர்நடுக்கம் இடிமுழக்கம்*
*கனத்தஇருள் வெள்ளம் பாயும்*
*கீற்றுமினல் வழிதெரியத் துணைபுரியக்*
*கிழமேனும் அதிகாலை கோயிலுக்கு*
*போற்றிசெய்து உனைவணங்கி பூர்வவினைப்*
*பந்தமெலாம் போக்கு தற்கு*
*நாற்றிசையும் நின்றுவர....."* எனக் குறிப்பிடுகின்றார்.

எளிமையான சொற்கள் கொண்டு ஆக்கப்பெற்ற வெண்பா, கலிப்பா, ஆசிரியவிருத்தம் மற்றும் பாவினங்களால் ஆன நாற்பத்தியொரு பாடல்களில் கும்பழாவளை ஊரின் இயற்கை அழகுகளும், கிராமத்தின் வளச் சிறப்புகளும் பொருத்தமாக அமைந்து கவித்துவமிக்க வரிகளைக் கொண்டு சுவையூட்டுகின்றன.

**12. அளவையம்பதி கும்பழாவளை விநாயகர் நான்மணி மாலை**

இந் நான்மணிமாலையை இணுவிலில் பிறந்து, அளவெட்டியில் திருமணஞ் செய்து வாழ்ந்தவரான முதுபெரும் புலவர், புகழ்பெற்ற ஆசிரியமணி வை.க. சிற்றம்பலம் புலவர் அவர்கள் இயற்றியுள்ளார். 1986ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் அளவெட்டி சைவவாலிபர் சங்கத்தின் வெளியீடாக இப் பிரபந்த நூல் சிறப்பாக வெளியிடப்பட்டது. அச் சங்கத்தின் தலைவராக விளங்கிய சிற்றம்பலம் ஆசிரியர், தமது ஆசானாகிய பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பாணைக்கு இணங்க நல்லூர் முருகன் மீது பிரபந்தம் பாட முன்னர், தனது இஷ்ட தெய்வமாகிய கும்பழாவளைப் பிள்ளையார் மீதான இந் நான்மணி மாலை எனும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார்.

நான்மணி மாலை என்பது வெண்பா, கட்டளைக் கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம் எனும் நால்வகைப் பாடல்களும் விரவி வருகின்ற நாற்பது செய்யுள்களிலான அந்தாதியாகப் பாடப்பெறுவதாகும். அவ் வகையில் கும்பழாவளைப் பிள்ளையார் மீது நான்கு வகை மணிகளால் முறையாகக் கோர்க்கப்பட்ட மாலையாக சொற்குற்றம், பொருட்குற்றம் விரவாமல் இந் நான்மணி மாலையைப் பாடியுள்ளார்.

*"எண்ணெழுத் தறியா இயல்பின னாயினும்*
*கண்ணென அவற்றைக் கருதா நிலையிலும்*
*கற்றறி வுடைய கவிஞன் போல*
*முற்றறி வில்லா முனைப்பா லடியேன்..."*

என்று தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் புலவர், எனை நடத்துந் தெய்வத்தை, கோனவனைப் போற்றித் தமிழால் புனை நான்மணி மாலையைச் சாற்றுவேன் எனப் பக்தி நாரில் நான்மணிமாலையைக் கோர்த்துத் தந்துள்ளார். உயர்ந்த தலத்தின் பெருமையை உணர்த்துமுகமாக அறுசீர், எழுசீர், ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, நேரிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப்பா, நேரிசை வெண்பா எனப் பலவகைச் செய்யுள்களால் சொற்சுவை, பொருட்சுவை பொருந்தப் பாடி, கும்பழாவளைக் கொம்பனை நாடிப்பவங்கள் மறைந்திடப் பக்தி சிரத்தையாக உரைத்துள்ளார்.

*"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை..."*

என்னும் திருவிசைப்பா பாடலுக்கு ஒத்த ஓசை நயமுள்ளமுடையதாகப் புலவர் பின்வருமாறு பாடுகின்றார்.

*"கற்றவர் சுவைக்கும் கற்பகக் கனியினன்*
*மற்றவர் க்கும்மருள் மாண்புடை யாளன்*
*பெற்றவர் போன்ற பெரும்பொறை யாளன்*
*எத்தலங் களிலும் எழுந்தருள் செய்யினும்*
*நித்தலு மளவையில் நர்த்தன மாடுவன்......"*

எனத் தோத்திரம் பாடி வான்கழல் பெற்றே உய்மின் என்று வழிகாட்டுகின்றார்.

*"மின்னுறு மரச கன்னி மேவிய மாமு கத்தாள்*
*தன்னுறு முகத்தின் குற்றந் தாங்கிடா தைங்க ரற்கு"*

கொல்லன்கலட்டி, வரத்தலம், அளவோலை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்னும் இடங்களிலும் நடுவாய் இருக்கும் "அளவைக் கும்பழாவளை மாவிடுதிட்டியில் பொன்னுறு புதிய கோயில் பூர்த்திசெய் தருளும் பெற்றா" ளென்ற செய்தியை 4ஆவது, 15ஆவது பாடல்களில் பதிவு செய்து அடியார் இயைந்த தொண்டாற்றித் தொல்லைகள் தீர்த்துக்கொள்ளும் தன்மையை சுவைபடப் பாடுகின்றார். அவ்வாறே 19 ஆவது பாடலில் பைக்குலை செங்குலையாகிய அற்புதச் செயலை அழகுத் தமிழில் எளிமை பொங்கப் பாடுகின்றார்.

"இவரது செய்யுள்கள் இயல் போட்டமுடையன, செய்யுளோசையுடையன, பரிவுருக்கப் பண்புடையன" என்று விதந்து கூறும் ஏழாலைப் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் பக்தி இலக்கியம் படைக்கும் ஆற்றலுடையவரெனப் பாராட்டு கின்றார். அவ்வழியிலே சுமார் நாற்பது பிரபந்தங்கள் வரை இயற்றியுள்ள இந்நூலாசிரியருக்கு கும்பழாவளை வித்தக விநாயகக் கடவுளின் திருவருட்காப்பே துணையாக இருந்துள்ளது என்பது தெளிவு.

### 13. அளவை விநாயகர் திருவந்தாதி

அளவெட்டியில் பிறந்து இலண்டன் மாநகரில் முதுகலைமாணிப் பட்டம் பெற்று வசித்த கி.ஞானசூரியன் அவர்கள் எழுதியதே இத் திருவந்தாதி ஆகும். இல்லற வாழ்வைத் துறந்து துறவற வாழ்க்கையை மேற்கொண்ட இவர் சிவநந்தி அடிகள் என்னும் துறவு நாமம் பூண்டவர். தமிழ், தமிழர்நாடு, சைவசமயம், கலாசாரம் என்பன பற்றி நன்கு சிந்தித்த இவர் நிறுவிய ஆதீனம் மெய்கண்டார் ஆதீனமாகும். உலகளாவிய பல கிளைகளுடன் செயற்பட்ட இவ் ஆதீனத்தின் பணிகளுடன், உலகத் தமிழர் மறுமலர்ச்சி நிலையம் என்னும் அமைப்பின் ஊடாகச் சமூகப் பணிகளும் ஆற்றினார். கும்பழாவளை விநாயகர் மீது மாறாத அன்பு பூண்ட இவர், தாம் இயற்றிய இத் திருவந்தாதியை லண்டனில் இருந்து வெளிவரும் லண்டன் முரசு என்னும் தமிழ் மாத இதழில் அவ்வப்போது எழுதி வெளியிட்டார். இவ் ஆக்கங்களின் தொகுப்பாக இந்நூல் 1976ஆம் ஆண்டு உலகத் தமிழர் மறுமலர்ச்சி நிலையத்தின் வெளியீடாக, நீர்கொழும்பு சாந்தி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

திருவந்தாதியின் பாயிரம் பகுதியில் விநாயகர், சிவபெருமான் - உமாதேவியார், முருகன், கலைமகள் மீது நான்கு காப்புப் பாடல்களும், அவையடக்கப் பாடல்கள் இரண்டும், நூற்பயன் பாடல்கள் இரண்டும் வெண்பா வகையாக அமைந்துள்ளன. எச் செயலுக்கும் அடிப்படையான இறைநம்பிக்கையை, தும்பிக்கை விநாயகனின் திருவடி மீதான பெரும்பற்றை முன்னிறுத்திப் பாடியுள்ளார்.

*"உள்ளத் தெழுகின்ற உணர்வே ஊற்றாகிப்*
*பள்ளத்தே பாயும் நதிபோலத் - தெள்ளுதமிழ்"* பாடும் கவிஞர்

*"துணைக்குப் பெயர் தொந்தி வயிறன் தொண்டர் குழாம்*
*பிணைக்குப் பெயர் கும்பழாவளைப் பெருமான் கோயில்*
*அணைக்குப் பெயர் அளவையூர் அம்பலவன் மைந்தன்*
*புணைக்குப் பெயர் பிறவிக் கடல் கடத்தும் பிள்ளையாரே"* எனப் போற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனைமுக ஆரமுதே, அளவையூர் அப்பனே ஆருயிரே" என விளித்துத் தொடங்கும் திருவந்தாதியின் முதற்பாடல். எட்டாவது பாட்டிலே, "தினையளவிலாவது திருத் தொண்டு செய்க" என அழைக்கும் கவிஞர் ஆனைமுகன் அருள் வெள்ளத்தில் திளைத்தால் வாழ்வு சிறக்கும் என்று பாடுகின்றார். அடியவர்களின் அன்புத் தொண்டுகளைப் போற்றி, பண்ணோடு பாடும் ஒலியிலும், பெண் அடியார்களின் பெருக்கத்திலும் பிள்ளையாரின் திருவருட் சிறப்பை உணர்வதாகப் பாடியுள்ளார்.

ஈழநாட்டுச் சிறப்பு என்ற பகுதியில் திரு நாட்டின் செழுமைமிகு வரலாற்றைப் பத்து பாடல்களில் பதிவு செய்கின்றார். தமிழ்மொழி வரலாற்றுச் சிறப்பு, இந்து சமயத்தின் சிறப்பு, சைவ சமயத்தின் மாண்பு, சைவ சித்தாந்தத்தின் சிறப்பு சச்சிதானந்த நிலை விளக்கம், பகவத்கீதை தரும் போதனைகள், உபநிடத உண்மைகள் எனத் தன்னுணர்வு சார்ந்த உளக் கருத்துக்களை அந்தாதி முறைக்கமையப் பாடியுள்ளார்.

அளவை விநாயகர் மங்கள அஞ்சலி, அந்தாதி வாழ்த்து என நூற்றியெட்டுப் பாடல்களை பக்தி சுவை மிக்கதாகப் பாடியுள்ளார். மேலும் அளவை விநாயகர் பதிகம் என்னும் ஆனைமுகன் அருள் வளம் உரைக்கும் பத்து விருத்தப் பாக்கள் கொண்ட பதிகத்தையும் இவர் இயற்றியுள்ளார். இவரது 'அஞ்சாநெஞ்சம்' நூலில் பக்கம் 133-135 வரை இப்பதிகம் இடம்பெற்றுள்ளது.

### 14. ஒரு பக்தனின் பிரலாபம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தல வரலாறு என்னும் நூலை திருமதி கல்யாணி லோகநாதன் 2002ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இதுவரை பார்த்த சில பிரபந்தங்கள் அந்த நூலில் மீள்பிரசுரம் செய்யப் பெற்றுள்ளன. அத்துடன் ஒரு பக்தனின் பிரலாபம் என்னும் தலைப்பில் 30 பாடல்களைக் கொண்ட பிரபந்தம் ஒன்று எழுதியவர் பெயர், குறிப்பு, தகவல் எதுவுமில்லாத நிலையில் பிரசுரமாகி இருக்கின்றது.

ஆனால் விநாயகரின் திருவருளை வேண்டி நிற்கும் ஒரு ஆத்மார்த்தமான பக்தனின் வேண்டுகோளாக செம்மையான கவிநயத்துடன் பொருள், அணி முதலாம் சிறப்புகளுடன் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

### 15. கீர்த்தனங்கள்

சமய, தத்துவக் கருத்துக்களை மக்களின் மனதைக் கவரும் வகையில் ஓசை நயம், இலக்கிய நயம், இசை நயம், பக்தி நயம் என்பவற்றை அடிநாதமாகக் கொண்டதாக அமைத்துக் கூறுவன கீர்த்தனங்களாகும். இறைவனிடத்தில் ஒருவன் கொள்ளும் தொடர்புகள் பலவித பக்தி நிலைகளாகக் கருதப்படுகின்றன. அவ்வகையில் இறைவனுடைய பெருமைகளைக் கேட்டல், இறைவன் புகழைப் பாடுதல், இறைவனைத் தியானித்தல் என்னும் சில பக்தி நிலைகளைக் கீர்த்தனங்கள் வெளிக்காட்டுகின்றன. இறைவனின் பெருமைகளைப் புகழ்ந்து கூறும் இசைப் பாடல்கள் என வரையறுக்கப்படும் நிலையில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று பகுதிகளைக் கீர்த்தனைகள் கொண்டிருக்கும்.

இவ்வகையில் 1915ஆம் ஆண்டளவில் வெளிவந்த கணபதிப்பிள்ளை நன்னித்தம்பி வைரமுத்து அவர்களின் வேண்டுகோளின்படி சொல்லப்பட்ட கீர்த்தனங்கள் 1948, 1975, 2005ஆம் ஆண்டுகளில் மறுபதிப்பாகவும் வந்துள்ளன. காலத்தால் முற்பட்ட கீர்த்தனங்கள் இவையாகும். காப்பு வெண்பா, சிவபெருமான் துதிவிருத்தம், அம்பாள், சுப்பிரமணியர், சரஸ்வதி, வைரவர் பேரிலும் காப்புப் பாடல்களுடன் பாடப்பட்டுள்ளன. இவர்களைக் கும்பழாவளைப் பதியிலுறைவோராகப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளன. மேலும் தவளகிரி அம்மன், சீரணி அம்மன், கதிர்காமக் கந்தன் பேரில் வெண்பா, கீர்த்தனங்கள் இடம்பெற்றுள்ளன. கும்பழாவளை கொம்பன் பேரில் மூன்று கீர்த்தனைகள் ராகக் குறிப்புடன் தரப்பட்டுள்ளன.

அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் வெளியிட்டுள்ள அருட்கவிக் களஞ்சியம் நூல் 1,2,3 எனத் தொடராக வெளிவந்துள்ளன. 3ஆவது தொகுப்பு நூலில் பல்வேறு தெய்வங்களில் கீர்த்தனைகள் பாடப் பெற்று தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. இதில் விநாயகர் பாடல் பகுதியில் கும்பழாவளைப் பிள்ளையார் மீது பாடப் பெற்ற காம்போதி இராகக் கீர்த்தனை 4ஆவது பாடலாகவும், 5 ஆவது பாடலாகவும் மோகனராகக் கீர்த்தனை 6ஆவதாகவும் இடம்பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றும் இறைவனின் திரு நாமங்களைக் கொண்டு இலகு தமிழில் இனிய இசைக் கோவைகளாகப் பாடப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரப் பாடல்களாகவும் பல பாடல்கள் கும்பாபிஷேக மலரில் காணப்படுகின்றன. அவ் வகையில் விகடகவி மு.திருநாவுக்கரசு அவர்களின் தனிப்பாடல்கள் தேவர்கள் தொழுத்தும் தெய்வம் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளன. இம்மலரில் கே.எஸ்.சிவானந்தராசா அவர்களின் மூன்று விருத்தப்பாக்கள் கும்பழாவளைக்கு வந்து பாருங்கள் என்ற தலைப்பில் வெளியாகியுள்ளன. இவருடைய கீர்த்தனை ஒன்றும் மலரில் இடம்பெற்றுள்ளது. மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் எழுதிய இரு கவி மலர்கள் 'குடமுழுக்குக் கண்டு தேசம் விடிகின்றது' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளன. தனிப்பாடல்கள் வகைக்குள் 'குடமுழுக்குப் பெருவிழா' என்ற தலைப்பில் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்கள் கும்பாபிஷேகச் சிறப்புப் பற்றி எழுதிய திருவிருத்தங்கள் பன்னிரண்டு கும்பாபிஷே மலர் 2002 இல் இடம்பெற்றுள்ளன.

தோத்திரப் பாடல் வகைக்குள் அமையும் ஐந்து விருத்தச் செய்யுள்களை யாத்து அளவை கும்பழாவளை விநாயகர் தோத்திரம் என்னும் தலைப்பிட்டு அத்தோடு வேறு தெய்வங்களின் தோத்திரங்களையும் விநாயகர் பரத்துவ மாலை எனும் பிரபந்தத்தையும் இணைத்து வெளியிட்டுள்ளார். அளவையூர் வித்துவான் சி.நா.கணேச பண்டிதர் இப்பாமாலையும் விநாயகர் மீதான பக்தியின் வெளிப்பாடாக 1988ஆம் ஆண்டில் அச்சிட்டு தனி நூலாக வெளிவந்துள்ளது.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகக் கால தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவராக விளங்கிய விநாயகரடியார் சோ.சிவப்பிரகாசம் அவர்கள் இயற்றிய கட்டளைக்கலித்துறையிலான அந்தாதி அமைப்புடைய பதினொரு செய்யுள்கள் 2002ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரில் வெளியாகியுள்ளன. நல்ல தமிழ் நடையில் விநாயகரின் கீர்த்தியை எடுத்துக்கூறும் இப்பிரபந்தம் பாராயணம் செய்வதற்கு ஏற்றதாகும். விநாயகப் பெருமானும் சிவபெருமானும் ஒருவரே என்ற தத்துவத்தைப் பொதிந்தவையாகப் பாடல்கள் அமைந்துள்ளன. விநாயகரை வணங்குவதால் ஏற்படும் பயனை இறுதிப் பாடலில் நன்கு பதிவு செய்துள்ளார்.

**16. கும்பழாவளைப் பிள்ளையார் தோத்திர வெண்பாமாலை**

சென்றவருடம் அமரத்துவமடைந்த அளவெட்டி வே.ஆறுப்பிள்ளை ஆசிரியர் தனது வழிபடு செய்வமாகத் தொழுதுவந்த கும்பழாவளைப் பிள்ளையார் மேல் பாடிய தோத்திர வெண்பாமாலை அவரது குடும்பத்தினரால் நூலுருவில் அண்மையில் வெளியிடப்பெற்றுள்ளது. இதில் விநாயகப் பெருமானின் பல்வேறு திருநாமங்களை தெய்வீகத் திருவருளை, அற்புதங்கள் நிறைந்த அருளாட்சியை பக்தி நலம் மேவ, வெண்பா யாப்பிலமைந்த ஐம்பது பாடல்களிலும், விருத்தயாப்பிலமைந்த பத்துப் பாடல்களிலும் ஆசிரியர் பாடியுள்ளார்.

**முடிவுரை**

பத்திரிகைகளில் வெளிவந்த தனிப்பாடல்கள், இறுவட்டு இசைப்பாடல்கள் குறித்து விரிவஞ்சி இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன. அச்சில் வெளிவந்து கிடைக்கப்பெற்ற பக்தி இலங்கியங்களான இப்பிரபந்தங்களைப் பேணுவதும் பயன்படுத்துவதும் சமய உணர்வு, சமூகத்தில் நிலவிய நிலைக்க உதவவல்லன என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய அன்னதான மண்டபம்



தொண்டர்சபையின் முதலாவது கூட்டம் இடம்பெற்ற மடம்




கொன்றை மரத்தை அழிப்பதற்காக சிலர் பாரிய கல்லொன்றை வைத்து மூடினர் ஆனால் அம்மரம் அழியாமல் துளிர் விட்டு எழுந்து வளர்ந்தது இதைக் கண்டு அம்மரத்தின் மகிமையை உணர்ந்து வைரவரை பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றனர் இவ் வைரவர் ஆலயத்தில் தைப்பொங்கல் விழா ஆலயத் தொண்டர்களால் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக் காலத் தாக சாந்தி நிலையம்







ஆலயத்தொண்டர்சபையினரால் திரு.செ.நம்பியாளூரனின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட தாகசாந்தி நிலையம் நிரந்தரக் கட்டடம் ஒன்றின் கீழ் வருடாந்த மஹோற்சவ காலங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது.

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட மருத்துவ முகாமும் இரத்ததானமும்
## 03.04.2016









"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைரவிழாக்கால ஞாபகார்த்தச் சால்வை**







"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியும் ஏழு விநாயகர் ஆலயங்களும்

சண்முகலிங்கம் சஜீலன்.
பன்னாலை, தெல்லிப்பளை.



விநாயகக் கடவுளையும் அவர்தம் தம்பி முருகக் கடவுளையும் வழிபட்டு அருட்பேறடைந்த மகளிருள் இருவர் முக்கியமானவர்கள். அவர்களுள் ஒருவர் தமிழ் மூதாட்டி என அழைக்கப்பட்ட விநாயகர் அகவல் பாடிய ஔவைப் பிராட்டியாராகும். மற்றையவர் ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தில் கீரிமலையை அண்டிய பிரதேசத்தில் கோயிற்கடவை கதிரையாண்டவர் கோயிலை மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலாகப் பெருங்கோயிலாகக் கட்டுவித்து அதன் பக்கங்களில் ஏழு விநாயகர் ஆலயங்களையும் ஸ்தாபித்த பலரும் அறியாத சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியாவாள்.

உலகெங்கும் வியாபித்துள்ள இறைவன் தனது பேரருட் சக்தியினை ஆன்மாக்களுக்கு வழங்கும் பொருட்டு விரும்பி உறையும் இடமே ஆலயங்களாகும். அவ்வாறான ஆலயங்களை அமைப்பதற்கு இறைவன் ஒவ்வொருவரைப் பிரேரித்து விடுகிறான். இவ்வாறாக இறைவனது பிரேரகம் பெற்ற ஒரு பேரருட்செல்வியே மாருதப்புரவீகவல்லி என்னும் அரசகுலத்தில் பிறந்த இளவரசியாவாள். மாருதப்புரவீகவல்லியை விட்டுவிட்டு மாவிட்டபுரம் என்பதை விளங்கிக் கொள்வது முடியாத காரியமாகும். அதேபோன்று கீரிமலையை அண்டிய பிரதேசங்களிலிருக்கும் இவ் ஏழு விநாயகர் ஆலயங்களின் வரலாற்றிலும் மாருதப்புரவீகவல்லிக்கு முக்கியமான நெருங்கிய தொடர்பு உண்டு.

பத்தாம் நூற்றாண்டில் திசையுக்கிர சோழன் மகளாக அவதரித்துத் தனக்கிருந்த குன்ம வியாதியால் மெலிந்தவளாய் வியாதியை வைத்தியர் ஒருவராலும் குணமாக்க முடியாததனால் தீர்த்த யாத்திரை செய்து பார்த்தால் சுகம்வரக்கூடும் என்று எண்ணி காவிரிப்பூம் பட்டிணத்திலிருந்து புறப்பட்டு அங்கும் இங்கும் போய்த் தீர்த்தமாடி வருகையில் சாந்தலிங்கன் என்னும் சந்நியாசி கண்டு "உன் வியாதி பண்டிதர் ஒருவராலும் குணமாக்கத்தக்கதன்று. நீ இப்போது எடுத்த முயற்சியே உனக்கு சுகந்தரத்தக்கது. ஈழத்திலே வடமுனையிலே கீரிமலை என்றொரு மலையுண்டு. அது சமுத்திரத் தீர்த்தத்தில் உள்ளது. அங்கே உவர் நீரும், நன்னீரும் மலையருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தமொன்றுண்டு. அது உலகிலுள்ள எத்தீர்த்தங்களிலும் முக்கிய தீர்த்தமாய் இருக்கின்றது. அதிலே போய் நீராடிச் சிலகாலம் தங்கியிருந்தால் சுகம் பெறுவாய்" என்ற அத்தவசிரேஸ்டர் வாக்குப்படி யாழ்ப்பாணத்தில் உள்ள கீரிமலை எனும் புண்ணியபதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தாள். அங்கு நகுல முனிவரைச் சந்தித்து வணங்கி அவரின் சொற்படி கீரிமலை புண்ணிய தீர்த்தத்தில் தீர்த்தமாடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டு வந்தாள். நகுல முனிவரின் கட்டளைப்படி கோயிற்கடவை முருகனையும் சென்று வழிபட்டு வந்தாள். அங்கே அவளது குதிரை முகம் நீங்கியது. குதிரை முகம் அகன்ற இடமாதலால் அப்பதி மாவிட்டபுரம் என அழைக்கபடலாயிற்று.

மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் மாறியபோதும் அவள் மனதில் குதிரை முகம் இருப்பதான உணர் விருந்தது. எக்காரியத்தைச் செய்ய முற்படு முன்னரெல்லாம் விநாயகரை வணங்கியே செயற்பட வேண்டும். விநாயகரை வணங்காது முருகன் கோவில் கட்டியமையால் தான் இக் குறைபாடு இருக்கின்றதென ஒரு பெரியவர் கூறினார். தன் தவறை உணர்ந்த இளவரசி கணபதியைப் பலமுறை வணங்கி தென்திசை நோக்கி ஏழு விநாயகர் ஆலயங்களைக் கட்டுவித்து அங்கு விநாயகர் விக்கிரங்களையும் பிரதிஷ்டை செய்தாள். அத்தலங்கள் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம், பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம், அழகொல்லை முத்து விநாயகர் ஆலயம், கும்பழாவளை சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம், பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலயம், ஆலங்குழாய் விநாயகர் ஆலயம் (தற்போது முருகமூர்த்தி ஆலயம்), கல்வளை பரமானந்த விநாயகர் ஆலயம் என்பனவே அவையாகும்.

### 01. கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம்

மாருதப்புரவீகவல்லி ஸ்தாபித்த முதலாவது விநாயகர் ஆலயம் இதுவாகும். ஆதியில் தற்போது இருக்கும் ஆலயத்தின் மேற்குக் கரைக் கேணியின் வாசலில் நின்ற ஓர் ஆலமர நிழலிலேயே மாருதப்புரவீகவல்லி விநாயகரைப் பிரதிஷ்டை செய்தாள் என்று கூறப்படுகின்றது. பின்னர் இருநூறு வருடங்களுக்கு முன்னர் ஓர் அன்பர் தற்போது ஆலயம் இருக்கும் கர்ப்பக்கிரகத்தில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தார். தற்போது இவ்வாலயம் பெருங்கோயிலாகக் காட்சியளிக்கின்றது. இங்கு மூலமூர்த்தி விநாயகப் பெருமானுடன் சிவனுக்கும் தனிச் சந்நிதி அமைக்கப்பெற்று அது தனிக் கோயிலாக விளங்குகின்றது.

### 02. பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம்

சோழ இளவரசி ஸ்தாபித்த இரண்டாவது விநாயகர் ஆலயம் இதுவாகும். ஆரம்பத்தில் தற்போது ஆலயம் இருக்கும் இடத்துக்கு அருகாமையில் இருந்த வன்னிமர நிழலிலேயே விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பெற்றதாக வரலாறு கூறுகின்றது. அவ்வூரிலுள்ள கற்பகநாயகி என்ற அம்மையாரால் மிகவும் பக்திபூர்வமாக வழிபடப்பட்டு வந்தமையால் கற்பக விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டதாகவும், ஏலவே இவ்வம்மையாரால் அமைக்கப்பட்ட பிள்ளையாரையே மாருதப்புரவீகவல்லி வந்து வழிபட்டுச் சென்றதாகவும் இன்னொரு வரலாறு உண்டு.

### 03. அழகொல்லை முத்து விநாயகர் ஆலயம்

மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட மூன்றாவது விநாயகர் ஆலயம் இதுவாகும். மாருதப்புரவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. எனினும் இன்னொரு வரலாற்றுத் தகவலின்படி அமைப்புப் பிரமாணப்படி பிழையாக அமைக்கப்பட்ட ஆலயத்தை விநாயகர் இடிந்துவிழச் செய்ததாகவும், அளவுஓலை ஒன்று ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாகவும் அதன்பிரகாரம் ஆலயத்தை அமைக்குமாறு விநாயகர் கூறியதாகவும் அதன்படி கட்டியபோது எவ்வித விக்கினங்களும் இன்றி கட்டடம் பூர்த்தியடைந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனாலேயே அளவுஓலை என்பது மருவி அழவோலை எனப் பெயராயிற்று காலப்போக்கில் அதுவும் மருவி அழகொல்லையாயிற்று அழகிய சோலைகள் சூழ்ந்த இடமாதலால் அழகொல்லை என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறப்படுகின்றது.

### 04. கும்பழாவளை சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம்

மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட நான்காவது விநாயகர் ஆலயம் இதுவாகும். இவ் ஏழு விநாயகர் ஆலயங்களிலும் நடுநாயகமாய் விளங்குவது இவ்வாலயமாகும். மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் அவளது கண்ணுக்குத் தெரியாது மறைந்த இடம் இவ்வாலயம் என வரலாறு கூறுகின்றது. குதிரைமுகம் முற்றாக நீங்கப் பெற்றதால் அவ்விடத்துக்கு மாவிழிதிட்டி எனும் பெயர் இன்றும் வழங்கப்பெறுகின்றது. இப்பெயர் முதலில் மாவிழிதிட்டி என இருந்ததெனவும் அது மருவி மாவிடுதிட்டி என ஆயிற்று எனக் கூறப்படுகின்றது. மா + இழி + திட்டி குதிரை முகம் இழிந்த திட்டி எனப் பொருள்படும். இழிதல் நீங்குதல் என்ற பொருளில் வரும். இவ்வாலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கு மூலையில் குமாரத்தி திருக்குளமும், வயல் நிலமும் இருந்ததாகவும் அறிந்தோர் கூறுகின்றனர். இத்தலம் அரச குமாரத்தியின் வருகைக்கு முன்னரே இருந்ததெனவும் அவள் ஸ்தாபிக்கவில்லை, புதுப்பித்தாளே எனவும் கூறப்படுகின்றது.

மண்மேடாக இருந்த இவ்வாலயப் பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனுக்கு கொம்பை ஏந்திய விநாயகர் சோதிவடிவான பிழம்பாகக் காட்சி கொடுத்தார் எனவும், கொம்பு ஆவளை திரிபடைந்து கொம்பழாவளையாக மாறி கும்பழாவளையாயிற்று. பசுக்கள் கும்பலாக நின்று மேய்ந்த இடம் கும்பல் ஆவளை மருவி கும்பழாவளை என வந்தது என்றும் கூறப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலய அன்பர்கள் மூலவிக்கிரகத்தை எடுத்துச்சென்று ஒரு மரப்பொந்தில் வைத்து வழிபட்டனர் எனவும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அது மீளவும் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் பழைய கதையொன்று உண்டு. 1811 ஆம் ஆண்டு இவ்வாலயம் கர்ப்பக்கிரகமும், மகா மண்டபமும் கட்டப்பெற்றன என்று ஆங்கிலேயர் கால வரலாறு கூறுகின்றது.

**05. பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலயம்**

அரசகுமாரத்தி மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட ஐந்தாவது விநாயகர் ஆலயம் இதுவாகும். பெருமாகடவை என்பது பெரிய குதிரை முகம் முற்றாக நீங்கியது என்று பொருள்படும். ஆலய வரலாற்றின் இன்னொரு கர்ண பரம்பரைக் கதையில் முன்னொருகாலம் பெருமாலியன் எனும் அசுரன் இந்த ஆலயம் அமைந்துள்ள பாணாக்கை பரவை ஆகிய நீர்நிலைகளைத் தொடுக்கும் வழுக்கையாற்றுப் பகுதியில் வயல் வெளிகளில் பயிர்களை நாசம் செய்து உழவர்களை வருத்தினான். அவற்றின் குறுக்கே படுத்துக்கிடந்தான் எனவும் அதனால் ஆற்றின் போக்குத் தடைப்பட்டு வயல்களின் ஒருபகுதி வரட்சியாலும் மறுபகுதி வெள்ளத்தாலும் அழிந்ததாகவும், அதனால் வேதனையடைந்த மக்கள் விநாயக் கடவுளை வேண்ட விநாயகப்பெருமான் தானே நேரில் வந்து அவ்வசுரனை கொன்றொழித்தார் எனவும் நிம்மதி பெற்ற மக்கள் விநாயகரை நினைவில் வைத்து சிற்றாலயம் அமைத்து வழிபட்டதாகவும், பெருமாலியன் ஆவி கடந்த இடம்மென்பதால் பெருமாக்கடவை எனும் பெயர் ஏற்பட்டது என்றும் கூறப்படுகின்றது. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயத்தை ஸ்தாபித்த பெரும் நில உடைமைச் சொந்தக்காரரான மணியகாரர் பரம்பரையினரே இன்றும் ஆலயத்தைத் தொடர்ச்சியாகப் பராமரித்து வருகின்றனர். ஆலயத்துக்குத் தாமரைத் தடாகம் அம்பலவாண முதலியாரால் அமைக்கப்பட்டது.

**06. ஆலங்குழாய் விநாயகர் ஆலயம்**

சோழ இளவரசியால் ஸ்தாபிக்கப்பட்ட ஆறாவது ஆலயம் இதுவாகும். மூலவராக பிள்ளையாரே நெடுங்காலமாகக் காட்சியளித்தார். தற்போது சுப்பிரமணியர் விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்று ஆலங்குழாய் முருகமூர்த்தி ஆலயம் என வழங்கப்பெறுகின்றது. நூறு வருடத்திற்குள்ளாகவே இம்மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் இவ்வாலயத்தில் தற்போதும் விநாயகர் வழிபாடு முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது.

**07. கல்வளை பரமானந்த விநாயகர் ஆலயம்**

மாருதப்புரவீகவல்லியினால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழாவதும் இறுதியுமான விநாயகர் ஆலயம் இதுவாகும். பின்னர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகள் ஆலயப் பராமரிப்பிற்கு ஏழு கிராமங்களை தாமிரசாசனம் செய்து கொடுத்தனர் என ஆலய வரலாறு கூறுகின்றது. பின்னர் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தை வெற்றிவேலாயுத முதலி குடும்பத்தினர் மீண்டும் நிறுவி தங்கள் குலதெய்வமாக வழிபட்டனர். அப்பரம்பரையினரே இன்றும் ஆலயத்தைப் பராமரித்து வருகின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டில் நல்லூரில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பெற்ற கல்வளையந்தாதி இவ்வாலயத்தின் பேரிற் பாடப்பெற்றதாகும்.

**08. ஆனைவிழுந்தான் ஸ்ரீவிக்ன விநாயகர் ஆலயம்**

மாருதப்புரவீகவல்லிக்கும் ஆனைவிழுந்தான் ஸ்ரீவிக்ன விநாயகர் ஆலயத்துக்குமிடையிலும் சிறிய வரலாற்றுத் தொடர்பு ஒன்று உண்டு. மாருதப்புரவீகவல்லி தான் அமைத்த ஏழு விநாயகர் ஆலயங்களைத் தரிசிப்பதற்காக யானையில் ஏறிச் செல்லும்போது அவளது யானை ஓரிடத்தில் முன்னங்கால் நீட்டி வீழ்ந்து வணங்கியது. யானை வீழ்ந்து வணங்கிய திசையை ஆராய்ந்தபோது புதர்களுக்கு இடையே விநாயகர் விக்கிரகம் இருக்கக் கண்டு அதனை வழிபாடு செய்து சென்றாள். பின்னர் அவ் விடத்தில் கோயில் ஒன்றினையும் கட்டுவித்தாள். அவளது யானை விழுந்து வணங்கியதால் அவ்விடத்திற்கு ஆனைவிழுந்தான் என அன்றிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் நூற்றாண்டில் மிகப் பரந்துபட்ட தென்னாசியா, தென்கிழக்காசியா முழுவதையும் தமது ஆளுகைக்குட் படுத்தி ஆட்சி செலுத்திய சோழப் பேரரசு காலத்தில் வாழ்ந்த அரச குலத்தில் பிறந்த இளவரசியான மாருதப்புரவீக வல்லியை ஐதீக இளவரசியாகவே சில வரலாற்று நூல்கள் கூறுகின்றன. எனினும் யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, கைலாயப்பாடல் என்பற்றில் மாருதப்புரவீகவல்லி குதிரை முகத்தினளாக விளங்கி தீர்த்த யாத்திரை மேற்கொண்டு கீரிமலையில் தீர்த்தமாடி நகுலேஸ்வரரையும், கோயிற்கடவை முருகனையும் வழிபட்டு குதிரைமுகம் நீங்கப்பெற்று பேரழகியாகத் திகழ்ந்தாள் என்று கூறப்பட்டுள்ளது. பின்னர் குதிரைமுகம் மற்றவர் பார்வைக்கு நீங்கியும், தனது பார்வைக்கு நீங்காததால் இதுபற்றி அவள் பிரஸ்தாபிக்க ஓர் பெரியவர் விநாயகர் வழிபாடு மேற்கொள்ளாததால் ஏற்பட்டதெனக் கூற இளவரசியும் தன் தவறை உணர்ந்து ஏழு விநாயகர் ஆலயங்களை ஸ்தாபித்து வணங்குவேன் எனக்கூறி ஏழு விநாயகர் ஆலயங்களை ஸ்தாபித்தாள் எனக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணம் வைபவமாலை, கைலாயமாலை போன்றவற்றில் இதுபற்றிக் கூறப்படவில்லை. கர்ணபரம்பரைக் கதையாகவே வழங்கப்பெற்று வருகின்றது.

கர்ண பரம்பரைக் கதை என்பது ஏட்டில் எழுதப்படாது நீண்டகாலம் வாய்வழி வந்த பரம்பரைக் கதைகள் செவிவழி கேட்டு வழங்கப்பெற்று வருவதாகும். ஆயினும் மாருதப்புரவீகவல்லி பற்றியும் ஏழு விநாயகர் ஆலயங்களை அவள் ஸ்தாபித்தாள் என்பதையும் வெறும் செவிவழிக் கதை என்றோ, வெறும் கட்டுக்கதை என்றோ புறந்தள்ள முடியாது. ஏனெனில் இது வரலாற்றுடன் தொடர்புடைய ஒரு கதை. அக்கதைகளின் அசையா நம்பிக்கையிலேயே மக்களும் வாழ்கின்றார்கள். அருள்மிக்க ஆலயமாகப் போற்றி வணங்குகின்றார்கள். மேலும் இந்து மதத்தில் எழுந்த இவ்வாறான புராண இதிகாசங்கள் கர்ண பரம்பரைக் கதைகளே. இந்து மதத்தின் உயிர் நாடியாக விளங்கி உலகின் பெரிய மதங்களுள் ஒன்றாக அதனை நிலைநிறுத்தியிருக்கின்றது.

சோழ சாம்ராஜ்யத்தின் பின்னர் மாருதப்புரவீகவல்லிக்குப் பின்னர் வந்த தமிழரசர் பரம்பரையும் அவளாலேயே நிலைநிறுத்தப் பெறுகிறது. எட்டாம் நூற்றாண்டில் இருந்து போர்த்துக்கேயர் வரும் வரை நிலைபெற்றிருந்த தமிழரசர் பரம்பரையின் முதல்வி மாருதப்புரவீகவல்லியாவாள். அவளை அந்நாள் கதிரைமலையில் அரசாட்சி புரிந்த உக்கிரசிங்கன் என்பவன் மணந்தான். அவர்களின் புத்திரனாய் தோன்றிய பாலசிங்கன் என்பவன் தந்தைக்குப் பின் அரசாட்சி செய்தான். காலகதியில் அப்பரம்பரை சந்ததியற்றுப் போகவே மீளவும் திசையுக்கிர சோழன் மரபில் தோன்றிய சிங்கையாரியன் இங்கு அழைக்கப்பட்டு ஆட்சி புரிந்தான். இதனால் ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரை இங்கு உருவாயிற்று. இப்பரம்பரையில் வந்த பரராஜசேகரன், செகராஜசேகரன் போன்றவர்களும் அவர்களது பரம்பரையினரும் பிற்காலத்தில் பல விநாயகர் ஆலயங்களை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்தார்கள். எனவே இவற்றுக் கெல்லாம் முன்னோடியாக விளங்குவது மாருதப்புரவீகவல்லியும் அவள் அமைத்த ஏழு விநாயகர் ஆலயங்களும் என்றால் மிகையில்லை.

பின் வந்த ஆரியச் சக்கரவர்த்திகள் இவ்விநாயகர் ஆலயங்களுக்கும் வேண்டிய உதவிகள், வசதிகளை வழங்கி பேணிப் பாதுகாத்தனர் என்பதே உண்மையாகும். ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக் காலத்தில் மிகுந்த முக்கியத்துவத்துடன் சிறப்புற்றுக் காணப்பட்டிருந்த மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உட்பட ஏழு விநாயகர் ஆலயங்களும் போர்த்துக்கேயர் ஆட்சியில் முற்றாக அழிவைச் சந்தித்ததனால் இவ்வாலயங்கள் பற்றிய அத்தனை தகவல்களும் மறைந்து போய்விட்டன. பின்னர் 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவ்வூர் மக்களின் அயராத முயற்சியினாலேயே இவ்வாலயங்கள் மீளப் புதிதாகக் கட்டப்பெற்று அல்லது புனருத்தாரணம் செய்யப்பெற்று படிப்படியான வளர்ச்சி நிலைகளினூடாக இன்றுள்ள ஆலயங்களாக மிளிர்கின்றன.

இவ்விநாயகர் ஆலயங்கள் மாருதப்புரவீகவல்லி ஈழத்திற்குத் தீர்த்த யாத்திரை மேற்கொள்வதற்கு முன்பே இருந்ததாகவும், அவள் இவ்வாலயங்களை ஸ்தாபிக்கவில்லை என்றும் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வித்தாள் என்றும் ஓர் வரலாறு கூறுகின்றது. இது பற்றிய உண்மைத் தன்மையை நோக்கும்போது மாருதப்புர வீகவல்லி தீர்த்த யாத்திரை மேற்கொண்டு ஈழத்தின் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி குமாரத்தி பள்ளம் என்னும் இடத்தில் பாளையம் போட்டிருந்தாள் என்றும் நகுலேஸ்வரரைத் தரிசிப்பதற்கு உக்கிரசிங்க மன்னன் வந்திறங்கி வளவர்கோன் பள்ளம் எனுமிடத்தில் தங்கியிருந்தான் என்றும், இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்து காதல் கொண்டு திருமணம் பற்றி பிரஸ்தாபிக்க அரசகுமாரத்தி தான் எடுத்திருக்கும் காரியம் பற்றிக்கூறி அதாவது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்வித்தல். அதன்பின்பே திருமணம் பற்றிச் சிந்திக்க முடியும் என்று கூறினாள். அதற்கு உடன்பட்ட உக்கிரசிங்கன் தானும் அக்காரியத்தில் பங்கு கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்தான் என்றும் யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. எனவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருதப்புரவீகவல்லி புதிதாக ஏழு விநாயகர் ஆலயங்களை அமைக்காது அவ்விடத்திலுள்ள பெரியார்களின் வேண்டுகோளின்படி ஏற்கனவே இருந்த விநாயகர் ஆலயங்களை மீள் புனருத்தாரணம் செய்து பெருங் கோயிலாகக் கட்டுவித்தாள் என்பதே பொருத்தமுடையதாகின்றது.

இவ்விநாயகர் ஆலயங்கள் ஏழும் மாருதப்புரவீகவல்லியால் அல்லது அவளது வருகைக்கு முன்பே ஸ்தாபிக்கப் பட்டிருந்தற்கான ஆதாரங்களில் சில-

**01. ஆதிமூலவரான லிங்கப் பிள்ளையார்**

இவ்விநாயகர் ஆலயங்களில் ஆதியில் மூலவராக லிங்க வடிவிலேயே விநாயகர் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கிறார். சிவ வழிபாட்டுக்கு முக்கிய இடம் வழங்கிய சோழர்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் பல சிவாலயங்களை நிறுவி சிவலிங்கத்தையே பிரதிஷ்டை செய்திருந்தனர். லிங்க வழிபாடு எத்தெய்வத்துக்கும் பொருத்தமுடையது என்பதால் ஆதியில் லிங்க வடிவிலேயே பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றார்.

**02. இவ்வாலயங்கள் அமைந்திருக்கும் அயற்சூழலில் இன்றும் ஆய்வுக்குரியதாகக் காணப்படும் தூர்ந்த மிகப் பழமையான கட்டட இடிபாடுகளும், மண் மேடுகளும்.**

இவ்விநாயகர் ஆலயங்கள் காணப்படும் அயற்சூழலில் தூர்ந்த நிலையில் மிகப் பழைய கட்டடங்கள், கேணிகள் என்பன காணப்படுகின்றன. மண் மேடுகளினுள் புதையுண்ட நிலையில் பல கட்டட இடிபாடுகளும், பொருள்களும் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் இவ்விடங்களில் தொல்பொருளாய்வு செய்வதன் மூலம் பல உண்மைகள் வெளிப்படுத்தப்படலாம்.

**03. இன்றும் சுற்றயற் பிரதேசத்தில் அல்லது ஆலயத்துக்கருகாமையில் தழைத்தோங்கி வளர்ந்திருக்கும் மிகப் பழைமையான தல விருட்சங்கள்**

**04. சோழர் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த சிவ வழிபாட்டு முறைகள் இன்றும் இவ்வாலயங்களில் காணப்படுதல்**

சோழர் ஆட்சிக்காலத்தில் சிவ வழிபாடு முக்கிய இடம்பெற்றிருந்தது. அதே போன்று மூலவரான பிள்ளையாருடன் சிவன், பார்வதிதேவி போன்ற தெய்வங்களுக்கும் தனிச் சந்நிதி காணப்படுதல், நடராஜர் சந்நிதி காணப்படுதல், உற்சவ காலங்களில் விநாயகருடன் சிவன் அம்பிகை சமேதராய் எழுந்தருளி அருள்பாலித்தல் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்படுதல் இவ்வாலயங்களில் இன்றும் காணப்படுகின்றது. இவை சோழர் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறையாகும்.

**05. இவ்விநாயகர் தலங்களின் மீது 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெரும் புலவர்களால் இயற்றப்பட்ட பிரபந்தங்கள், அந்தாதிகள், பதிகங்கள் என்பன அமைந்திருக்கின்றன.**

இவ் ஏழு விநாயகர் ஆலயங்களும் வழுக்கையாறு பாயும் வழுக்கையாற்றின் ஓரத்திலேயே அரசகுமாரத்தியால் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதியில் கடல், குளம், ஆறு-ஆகிய நீர் நிலைகளை அண்டிய பிரதேசத்திலேயே தமிழர் வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்ததாக வரலாறு கூறுகிறது. அத்துடன் இவ்விநாயகர் ஆலயங்கள் ஏழும் யாழ். மாவட்ட வரைபடத்தில் வரிசைக் கிரமப்படி ஓர் நேர்கோட்டில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

மாருதப்புரவீகவல்லி காலத்தில் சோழர் ஆட்சி சிறப்புற்றிருந்த காலத்தில் கோயில்களே தேசத்தின் அரசியல், பொருளாதார சமூக போக்குகளைத் தீர்மானிக்கும் முக்கிய மையங்களாக விளங்கின. கோயில்களே மக்கள் பெருமளவு கூடும் இடங்களாக இருந்தன. எனவே கோயிற்கடவை முருகன் கோயிலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலாகப் பெருங் கோயிலாக்கி அதனை அண்டிய பிரதேசங்களில் ஏழு விநாயகர் ஆலயங்களையும் ஸ்தாபித்த அரச குலத்தில் பிறந்த இளவரசியான மாருதப்புரவீகவல்லி யாழ்ப்பாணம் சிவபூமியாகத் திகழ்வதற்கு முன்னோடியாக விளங்கினாள் என்று கூறினால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாசகம் : ( காலம் தொலைத்த நினைவுத் துகள்களுக்காய்)



கை.சரவணன்

மனசிலும் சூழலிலும்
புதியதொரு வாழ்முறையை
வாழப் பழகிய நாட்களில்தான்
மின்சாரமறியாத
தலைமுறையொன்றும்
தொடங்கியது தன்வாழ்க்கையை.

இரவுகள் நனைத்த
கோயில் மணல் முற்றத்தில்
கிளறக் கிளறக் கிளரும்
அன்றைய
நடைமுறைகளும்
இன்னும் உயிர்பிடித்திருக்கும்
பேச்சுக்களின் மிச்சமும்.

உயிருக்கு அடுத்து
பெறுமதியானதாயிருந்த மிதிவண்டி
'டைனமோ' வின் காலத்து
கொண்டலடி வைரவர்
வடக்கு வீதியும்
மாவிடுதிட்டி மாங்காணியும்
நீராளி மண்டப முற்றமும்
தொலைக்காட்சிகள் அற்றிருந்த
அன்றைய இரவுகளை
மிதிவண்டிகள் ஊர் கடந்தும்
உலவிய நீளக் கதைகளால்
நிறைக்கலாம்.

ஆனந்தர் மடத்துத் தூசிகள்
கிழமைகளில் பறந்தலைய
மடத்தின் திண்ணையில்
தண்ணுமையோடு
கொன்னக் கோலிசையும்
பண்ணிசைக்கும் சிறுவர் தம்
பக்திக் குரலிசையும்
குடியிருந்த நினைவுகளை
மடத்தின் தூண்களின்றும்
மறந்திருக்கா.
மின்னற்ற எரிபொருளைக்
கண்டால் பரவசம் கொண்ட
கார்த்திகை, மார்கழி, தை
இவை மூன்றும்
சங்கிராந்தி உபயரைக்
கழுத்திறுக்கிச் சிரித்தன.
கடலால் எண்ணை வரும் விடயமறிந்து
ஒருவாறு முயன்று பெற்று
கேணியிறைப்பு சீராய் நடக்க
உபயங்கள் பயமொழித்த
கதையின் துகள்கள்
கேணிப் படியிடுக்குகளில்
இன்னும் இருக்கலாம்.

விழாக்களின்
முன்னறிவித்தல் குழாய்களும்
ஊரெல்லாம்
ஒற்றை மாடிழுத்த
ரயர் வண்டியில்
திரிந்தலறிய சத்தத்தின்
சிலதுளிகள் தெருப்புழுதியுடன்
பறந்தோடிப் போகாது
இன்னமும் கொஞ்சம்
மீதமிருக்கலாம்.

இருண்ட நாட்களின் சாபம்
தொலைத்தகற்ற
ஒளிர் புள்ளிகளைத் திரட்டி
ஒன்றாக்கிப்
பேரொளி செய்த
பெரு முயற்சிகளில் ஒளிர்ந்தவர்
முகங்களும்
கோயில் மணல் முற்றத்துச்
சுவடுகளில் இன்றும்
அடிக்கடி மின்னுவதுண்டு.

ஆதியும் அந்தமும் அறியவே
முடியாதவொரு
நினைவுப் பெருவெளியில்
நெருக்கியடிக்கும் நினைவுகளை
ஆறியிருந்து நிரையாக்கி
அசைபோட அமைதியான
ஒரு பொழுதை
யாசகம் செய்கிறேன்;
நெடுவழியில் விரையும்
அந்தரப் பயணியாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவையம்பதியின் தவில் சக்கரவர்த்தி லயஞான குபேரபூபதி அமரர் வி.தெட்சணாமூர்த்தி

வ.மருதலிங்கம்
*முன்னாள் செயலகப் பொறுப்பாளர்,*
*கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்.*



இணுவிலில் கருவினுருவாகி வயதளவிலே வளர்ந்து அளவையம்பதியை வாழ்விடமாகக் கொண்டவர் லயஞான குபேரபூபதி அமரர் வி.தெட்சணாமூர்த்தி அவர்கள். இணுவில் - அளவெட்டி ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் மங்காப் புகழ் சேர்த்துத் தந்த பெருமைக்குரிய தவில் மேதையாகிய இவர் இசை உலகின் முடிசூடா மன்னன் என்று போற்றிப் புகழப்படுகின்றார். காலத்தால் அழியாத அணையாத ஜோதியாக இன்றும் மக்கள் மனதில் நிலைபெற்று இருக்கின்றார் இக்கலைஞர். தெட்சணாமூர்த்தி உலக இசைப் பாரம்பரியத்தின் சொந்தக்காரன் "உலகின் எட்டாவது அதிசயம்" என்று வியந்து கூறியுள்ளார் மிருதங்க இசைமேதை பாலக்காடு மணி அய்யர்.

பாரத தேசத்தின் நாதஸ்வர ஜாம்பவான்களாகத் திகழ்ந்த ரி.என்.இராஜ ரத்தினம்பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம், ஷேக் சின்ன மௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் போன்றவர்களுக்குப் பல கச்சேரிகளில் தவில் வாசித்துப் பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டவர். வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளை, கும்பகோணம் தங்கவேற்பிள்ளை, நீடாமங்கலம் சண்முகவடிவேல் போன்ற பிரபல வித்துவான்களுடன் சேர்ந்து தவில் வாசித்தபோது வித்தியாசம் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்குப் பிரமிக்கக் கூடியதாக அவருடைய நாதவித்துவம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இணுவில் N.R.சின்னராசா, கைதடி பழனிமலை, நாச்சிமார் கோயிலடி கணேசு போன்ற தவில் மேதைகள் இவருடைய சமகாலத்தவர்களாவார்கள்.

இவருடைய கைவண்ணம், வித்துவம் லயஞானம் ஆகியவற்றைக் கண்ணுற்ற இவருடைய தமிழகத்துக்குரு இராகவப்பிள்ளை அவர்கள் "உனக்குக் கற்றுக்கொடுக்க இனி எதுவுமில்லை. நான் ஒன்று சொல்ல நீ நூறு வித்தை செய்கிறாய். நீ ஊருக்குத் திரும்பிப்போ. பேரும் புகழும் வெகு சீக்கிரமே உன்னை வந்தடையும்" என்று மனதார வாழ்த்தி அனுப்பியமைக்கு இணங்க இவர் இணையற்ற தவில் மேதையாக உலகளாவிய கீர்த்தியைப் பெற்றிருந்தார்.

இலங்கையிலிருந்து முதன்முதலாகத் தமிழிசை விழாவிற்கு இந்தியாவிற்கு அழைக்கப்பட்ட தவில் இசைக் கலைஞர் என்ற பெருமைக்குரியவர் லயஞானகுபேர பூபதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் தெட்சணாமூர்த்தி கால தேச வர்த்தமானங்களைக் கடந்த ஒரு கலைஞராகத் திகழ்கிறார். தவில் இசைக் கலைஞர்களில் இவருக்கு மட்டுமே சிலை அமைக்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் இவருக்கு இருந்த மதிப்பையும் மரியாதையையும் பறைசாற்றி நிற்கின்றது. தெட்சணாமூர்த்தியின் விரல்களில் கலைத்தெய்வமான சரஸ்வதியே குடியிருப்பதாகவும் அதனாலேயே அவரால் இத்துணை துல்லியமாகத் தவில் வாத்தியத்தை இசைக்க முடிகின்றது என்பதை தமிழ் நாட்டின் சிறந்த விமர்சகரான சுப்புடு என்பவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது புதல்வன் உதயசங்கர் ஈழமண்ணின் புகழ் பூத்த தவில் கலைஞராக மிளிர்கின்றார்.

1933ஆம் ஆண்டு இணுவையம்பதியில் அவதரித்து 1975இல் அளவையூரில் தேகவியோகமெய்திய இக் கலைஞர் குறுகிய காலப்பகுதியிலேயே மாபெரும் சாதனையை நிலைநாட்டி மங்காப் புகழைத் தனக்குடைமையாக்கி யுள்ளார். அளவெட்டி கும்பழாவளை விநாயகப் பெருமானின் ஆலயத்தில் பல கலை நிகழ்வுகளில் கானமழை பொழிந்து பரவசமூட்டி மகிழ்வித்த மேதையை நாங்கள் என்றும் மறப்பதற்கில்லை. தெட்சணாமூர்த்தி அவர்கள் இசைத்த தவிலின் நாதம் உலகுள்ளவரை வாழும் தகைமையுடையது. அளவையம்பதிக்குப் பெருமை பெற்றுத் தந்த இக் கலைஞருக்கு தொண்டர் சபையினராகிய நாம் எமது அஞ்சலியைச் செலுத்தி அமைகின்றோம்.

## தொண்டர் சபையின் கடந்த கால நிர்வாகக் குழு - சில பதிவுகள்

1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தொண்டர் சபை நிர்வாகக் குழுக்களின் தகவல்களுள் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னுள்ள காலப் பகுதிக்குரிய ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை. அதனால், தவறவிடப்பட்ட தகவல்களை வைத்திருப்பவர்கள் தந்தால் எதிர்காலத்தில் வெளியீடு செய்யப்படும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 05.08.1977

**தலைவர்** : திரு.இ.இராமச்சந்திரன்

**செயலாளர்** : திரு.வி.சுந்தரமூர்த்தி

**பொருளாளர்** : திரு.மு.தயாபரன்

**உபதலைவர்** : திரு.வை.செல்லையா

**உபசெயலாளர்** : திரு.சு.மகேந்திரராஜ்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு. த.மனோகரன் திரு.து.சிவகுமார்
திரு.சி.பாலச்சந்திரன் திரு.சு.பாலச்சந்திரன்
திரு.சி.சண்முகநாதன் திரு.செ.செல்வநேசன்
திரு.த.மகேஸ்வரன் திரு.சி.சத்தியநாதன்
திரு.பொ.மகேந்திரபாலன் திரு.இ.ராகவன்
திரு.து.ஸ்ரீகாந்தன் திரு.சி.விக்னராஜா
திரு.ச.ஸ்ரீபாலன் திரு.து.பாஸ்கரதேவன்
திரு.சி.செல்வநாதன்

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.மு.செல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22.04.1978

**தலைவர்** : திரு.இ.இராமச்சந்திரன்

**செயலாளர்** : திரு.த.மனோகரன்

**பொருளாளர்** : திரு.மு.தயாபரன்

**உபதலைவர்** : திரு.வை.செல்லையா

**உபசெயலாளர்** : திரு.த.ஸ்ரீபாலன்

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.மு.செல்லையா

## 11.04.1979

**தலைவர்** : திரு.இ.இராமச்சந்திரன்

**செயலாளர்** : திரு.ச.ஸ்ரீபாலன்

**பொருளாளர்** : திரு.மு.தயாபரன்

**உபதலைவர்** : திரு.ஐ.யோகசுந்தரம்

**உபசெயலாளர்** : திரு.சி.சண்முகநாதன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு. சி.சத்தியநாதன் | திரு.வி.சுந்தரமூர்த்தி |
| திரு.த.நாகேஸ்வரன் | திரு.சு.பாலச்சந்திரன் |
| திரு.இ.புவிராஜ் | திரு.பொ.ஸ்ரீதரன் |
| திரு.ம.பகீரதன் | திரு.இ.இராஜீவன் |
| திரு.க.அருந்தவநாதன் | திரு.க.அருணகிரிநாதன் |
| திரு.ச.ஸ்ரீரஞ்சன் | திரு.வி.சுதாகரன் |
| திரு.சு.மகேந்திரராஜ் | திரு.கு.ராஜ்மோகன் |
| திரு.நா.விக்கினராஜா | திரு.கு.முகுந்தன் |
| திரு.க.கேதீஸ்வரன் | திரு.இ.பிரபாகரன் |
| திரு.க.செ.குணசேகரன் | திரு.இ.யோகேந்திரன் |
| திரு.சு.பாலச்சந்திரன் | திரு.சு.ஜெகதாஸன் |
| திரு.செ.செல்வநேசன் | திரு.த.மகேஸ்வரன் |
| திரு.இ.மோகனதாஸ் | திரு.து.ஸ்ரீகாந்தன் |
| திரு.து.சிவகுமார் | திரு.இ.ராகவன் |
| திரு.P.பிரதிராஜ் | திரு.த.வரதராஜன் |
| திரு.சி.விக்கினராஜா | திரு.பொ.சிவா |

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.வை.செல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28.03.1980

தலைவர் : திரு.இ.இராமச்சந்திரன்

செயலாளர் : திரு.சு.மகேந்திரராஜ்

பொருளாளர் : திரு.மு.தயாபரன்

உபதலைவர் : திரு.மு.செல்லையா

உபசெயலாளர் : திரு.க.அருந்தவராசா

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.வை.செல்லையா
திரு.ஐ.யோகசுந்தரம்
திரு.வே.சுப்பிரமணியம்
திரு.வ.நாகேஸ்வரன்

போசகர் : திரு.செ.மயில்வாகனம்

கணக்குப் பரிசோதகர் : திரு.சு.விஸ்வநாதன்

## 18.03.1983

தலைவர் : திரு.இ.இராமச்சந்திரன்

செயலாளர் : திரு.ச.உருத்திராபசுபதி

பொருளாளர் : திரு.சு.பாலச்சந்திரன்

உபதலைவர் : திரு.மு.செல்லையா

உபசெயலாளர் : திரு.இ.சர்வேஸ்வரன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.க.சண்முகநாதன்
திரு.மு.தயாபரன்
திரு.செ.செல்வநேசன்
திரு.செ.கணேசமூர்த்தி
திரு.இ.இராஜீவன்
திரு.இ.தில்லைநாதன்
திரு.சு.மகேந்திரராஜ்
திரு.ச.ஸ்ரீரஞ்சன்
திரு.பொ.ஸ்ரீதரன்
திரு.க.அருந்தவராசா

போசகர் : திரு.செ.மயில்வாகனம்

கணக்குப் பரிசோதகர் : திரு.பொ.இராசரத்தினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09.03.1984

தலைவர் : திரு.பொ.இராசரத்தினம்

செயலாளர் : திரு.ச.உருத்திராபசுபதி

பொருளாளர் : திரு.சு.பாலச்சந்திரன்

உபதலைவர் : திரு.இ.இராமச்சந்திரன்

உபசெயலாளர் : திரு.செ.சசிசேகரன்

நிர்வாக உறுப்பினர்கள்

திரு.செ.நம்பியாரூரன்
திரு.சு.மகேந்திரராஜ்
திரு.க.அருந்தவராசா
திரு.இ.மோகனதாஸ்
திரு.செ.ஆறுமுகம்
திரு.இ.சிங்கராசா
திரு.து.சுந்தரசபேசன்
திரு.து.இந்திரகுமார்
திரு.ந.கணேசராஜ்

போசகர் : திரு.செ.மயில்வாகனம்

கணக்குப் பரிசோதகர் : திரு.பொ.இராசரத்தினம்

## 14.09.1984

தலைவர் : திரு.பொ.இராசரத்தினம்

செயலாளர் : திரு.ச.உருத்திராபசுபதி

பொருளாளர் : திரு.சு.பாலச்சந்திரன்

உபதலைவர் : திரு.செ.செல்வநேசன்

உபசெயலாளர் : திரு.சு.மகேந்திரராஜ்

உபபொருளாளர் : திரு.க.வேலுப்பிள்ளை

நிர்வாக உறுப்பினர்கள்

திரு.இ.இராமச்சந்திரன்
திரு.ஸ்ரீசிவா
திரு.க.அருந்தவராசா
திரு.செ.ஆறுமுகம்
திரு.மகேஸ்வரன்
திரு.ரவீந்திரன்
திரு.கணேசரூபன்
திரு.இந்திரகுமார்
திரு.சசிசேகரன்
திரு.சிவரூபன்

போசகர் : திரு.செ.மயில்வாகனம்

கணக்குப் பரிசோதகர் : திரு.நா.க.பாலசுப்பிரமணியம்.

## 26.09.1986

தலைவர் : திரு.க.வேலுப்பிள்ளை

செயலாளர் : திரு.இ.கமலநாதன்

பொருளாளர் : திரு.ச. தணிகாசலபதி

உபதலைவர் : திரு.செ.செல்வநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு.மு.செல்லையா | திரு.இ.இராமச்சந்திரன் |
| திரு.ம.மயில்வாகனம் | திரு.செ.ஶ்ரீகாந்தன் |
| திரு.வி.குகேந்திரன் | திரு.அகிலதாஸன் |
| திரு.மு.பரமசிவம் | திரு.செ.ஆறுமுகம் |
| திரு.ச.ஜங்கரன் | திரு.சி.சந்திரவரதன் |

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.பொ.இராசரத்தினம்

## 27.03.1988

**தலைவர்** : திரு.க.வேலுப்பிள்ளை

**செயலாளர்** : திரு.சி.ஏகாம்பரநாதன்

**பொருளாளர்** : திரு.பொ.கணபதிப்பிள்ளை

**உபதலைவர்** : திரு.செ.நம்பியாரூரன்

**உபசெயலாளர்** : திரு.செ.நிமலன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு.இ.இராமச்சந்திரன் | திரு.ச.சந்திரவரதன் |
| திரு.வி.பிரபாரன் | திரு.க.லிங்கராசா |
| திரு.செ.ஆறுமுகம் | திரு.செ.கேசவன் |
| திரு.ச.தணிகாசலபதி | திரு.ச.ஜங்கரன் |
| திரு.வே.திவாகரன் | திரு.இ.தில்லைநாதன் |

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.ந.சிவபாதம்

## 01.10.1988

**தலைவர்** : திரு.க.வேலுப்பிள்ளை

**செயலாளர்** : திரு.சி.ஏகாம்பரநாதன்

**பொருளாளர்** : திரு.பொ.கணபதிப்பிள்ளை

**உபதலைவர்** : திரு.செ.நம்பியாரூரன்

**உபசெயலாளர்** : திரு.த.அகிலதாஸன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு.இ.இராமச்சந்திரன் | திரு.சி.சந்திரவரதன் |
| திரு.அ.தேவராசா | திரு.க.லிங்கராசா |
| திரு.இ.ஶ்ரீலவன் | திரு.செ.கேசவன் |
| திரு.செ.நிமலன் | திரு.ச.ஜங்கரன் |
| திரு.ப.ஶ்ரீஸ்கந்தராசா | திரு.இ.தில்லைநாதன் |

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.ந.சிவபாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17.01.1990

**தலைவர்** : திரு.க.வேலுப்பிள்ளை

**செயலாளர்** : திரு.சி.ஏகாம்பரநாதன்

**பொருளாளர்** : திரு.மு.செல்லையா

**உபதலைவர்** : திரு.செ.நம்பியாரூரன்

**உபசெயலாளர்** : திரு.செ.நிமலன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.வ.சுந்தரலிங்கம்
திரு.சி.சந்திரவரதன்
திரு.அ.தேவராசா
திரு.க.லிங்கராசா
திரு.இ.ஸ்ரீலவன்
திரு.செ.கேசவன்
திரு.ச.ஐங்கரன்
திரு.ப.ஸ்ரீஸ்கந்தராசா
திரு.செ.ஆறுமுகம்
திரு.ஞா.முகுந்தன்
திரு.யு.சிவன்ராஜ்

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.ந.சிவபாதம்

## 31.12.1990

**தலைவர்** : திரு.க.வேலுப்பிள்ளை

**செயலாளர்** : திரு.செ.நிமலன்

**பொருளாளர்** : திரு.மு.செல்லையா

**உபதலைவர்** : திரு.செ.நம்பியாரூரன்

**உபசெயலாளர்** : திரு.செ.பரமேஸ்வரன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.ச.உருத்திராபசுபதி
திரு.ஆ.தேவராசா
திரு.இ.ஸ்ரீலவன்
திரு.செ.கணேசமூர்த்தி
திரு.வே.சுப்பிரமணியம்
திரு.க.லிங்கராசா
திரு.ச.சந்திரவரதன்
திரு.செ.கேசவன்
திரு.அ.கந்தையா
திரு.கு.முகுந்தன்
திரு.செ.ஞானசொரூபன்
திரு.இ.திவாகரன்

**போசகர்** : திரு.செ.மயில்வாகனம்

**கணக்குப் பரிசோதகர்** : திரு.ந.சிவபாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01.12.1991

**தலைவர்** : திரு.வை.செல்லையா

**செயலாளர்** : திரு.செ.ஞானசொரூபன்

**பொருளாளர்** : திரு.மு.செல்லையா

**உபதலைவர்** : திரு.த.கிருஸ்ணதாஸ்

**உபசெயலாளர்** : திரு.க.லிங்கராசா

## 20.03.1994

**தலைவர்** : திரு.மு.செல்லையா

**செயலாளர்** : திரு.செ.நிமலன்

**பொருளாளர்** : திரு.அ.கந்தையா

**உபதலைவர்** : திரு.செ.நம்பியாரூரன்

**உபசெயலாளர்** : திரு.ச.டினேஸ்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.ஐ.யோகசுந்தரம்
திரு.க.சண்முகநாதன்
திரு.க.விஜயகுமார்
திரு.ம.நவநீதன்
திரு.ச.சிவமயம்
திரு.செ.ஞானசொரூபன்
திரு.க.லிங்கராசா
திரு.செ.கணேசமூர்த்தி
திரு.தி.தர்மலிங்கம்
திரு.வி.வினோதன்
திரு.செ.ஜெயக்குமார்
திரு.வி.யோகேந்திரன்
திரு.வி.பிரபாகரன்

## 28.12.1994

**தலைவர்** : திரு.செ.நம்பியாரூரன்

**செயலாளர்** : திரு.செ.நிமலன்

**பொருளாளர்** : திரு.அ.கந்தையா

**உபதலைவர்** : திரு.ம.கதிரமலைப்பிள்ளை

**உபசெயலாளர்** : திரு.க.அரவிந்தன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.ஐ.யோகசுந்தரம்
திரு.செ.ஜெயக்குமார்
திரு.வி.விநோதன்
திரு.க.கணராஜன்
திரு.க.சுகந்தன்
திரு.க.அருந்தவராசா
திரு.ம.நவநீதன்
திரு.வி.பிரபாகரன்
திரு.ச.சந்திரபவன்
திரு.ச.சசீந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26.04.1999

| | |
|---|---|
| தலைவர் | : திரு.செ.நம்பியாரூரன் |
| செயலாளர் | : திரு.தி.திருச்செந்தூரன் |
| பொருளாளர் | : திரு.செ.ஞானசொரூபன் |
| உபதலைவர் | : திரு.க.சுந்தரம் |
| உபசெயலாளர் | : திரு.ச.சசிதரன் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு.வி.அமுதலிங்கம் | திரு.க.அருந்தவராசா |
| திரு.ம.நவநீதன் | திரு.தி.தர்மரத்தினம் |
| திரு.செ.சச்சிதானந்தம் | திரு.க.கணராஜன் |

## 20.04.2000

| | |
|---|---|
| தலைவர் | : திரு.செ.செல்வநேசன் |
| செயலாளர் | : திரு.தி.திருச்செந்தூரன் |
| பொருளாளர் | : திரு.செ.ஜங்கரன் |
| உபதலைவர் | : திரு.செ.நம்பியாரூரன் |
| உபசெயலாளர் | : திரு.க.கிரிசாந் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு.ச.சந்திரபவன் | திரு.ச.சசீந்திரன் |
| திரு.க.சரவணபவன் | திரு.க.கணராஜன் |
| திரு.ப.கஜேந்திரன் | திரு.ந.கேதாரன் |

## 28.06.2003

| | |
|---|---|
| தலைவர் | : திரு.செ.நம்பியாரூரன் |
| செயலாளர் | : திரு.செ.கணேந்திரன் |
| பொருளாளர் | : திரு.செ.ஜங்கரன் |
| உபதலைவர் | : திரு.செ.பரமேஸ்வரன் |
| உபசெயலாளர் | : திரு.தி.திருச்செந்தூரன் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு.வி.கே.நடராஜா | திரு.க.சரவணபவன் |
| திரு.ச.நாகேஸ்வரன் | திரு.க.லிங்கராசா |
| திரு.வி.அமுதலிங்கம் | திரு.ம.சுரேந்திரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23.07.2006

| | |
|---|---|
| **தலைவர்** | : திரு.வி.விக்கினராஜ் |
| **செயலாளர்** | : திரு.செ.சனந்தன் |
| **பொருளாளர்** | : திரு.கெ.இந்திரமோகன் |
| **உபதலைவர்** | : திரு.தி.ஞானவேல் |
| **உபசெயலாளர்** | : திரு.தி.திருச்செந்தூரன் |
| **உபபொருளாளர்** | : திரு.ஞா.திரோணன் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.கு.பிரபாகரன்
திரு.இ.இரகிதன்

**போசகர்** : திரு. மு.செல்லையா
திரு. ந.கமலநாதன்

## 08.11.2007

| | |
|---|---|
| **தலைவர்** | : திரு.செ.சனந்தன் |
| **செயலாளர்** | : திரு.ம.சுரேந்திரன் |
| **பொருளாளர்** | : திரு.கெ.இந்திரமோகன் |
| **உபதலைவர்** | : திரு.ச.சந்திரபவன் |
| **உபசெயலாளர்** | : திரு.க.கஜானன் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.அ.பிரதீபன்
திரு.தி.கஜன்
திரு.க.கணராஜன்
திரு.அ.லதீபன்
திரு.இ.ரவீந்திரன்
திரு.ந.பிறேம்குமார்
திரு.அ.மயூரன்

**போசகர்** : திரு. மு.செல்லையா
திரு. ந.கமலநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.04.2011

| | |
|---|---|
| தலைவர் | : திரு.செ.சனந்தன் |
| செயலாளர் | : திரு.ஞா.திரோணன் |
| பொருளாளர் | : திரு.கெ.இந்திரமோகன் |
| உபதலைவர் | : திரு.வி.விக்கினராஜா |
| உபசெயலாளர் | : திரு.ம.சுரேந்திரன் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.ச.சந்திரபவன்
திரு.செ.சாறங்கன்
திரு.அ.மயூரன்
திரு.கு.வித்தியாகரன்
திரு.அ.பிரதீபன்
திரு.க.ஜனார்த்தனன்
திரு.பா.கஜன்

போசகர் : திரு. ம.பத்மநாதன்
திரு. வ.மருதலிங்கம்

## 17.05.2015

| | |
|---|---|
| தலைவர் | : திரு.அ.மயூரன் |
| செயலாளர் | : திரு.ஞா.திரோணன் |
| பொருளாளர் | : திரு.கெ.இந்திரமோகன் |
| உபதலைவர் | : திரு.ம.சுரேந்திரன் |
| உபசெயலாளர் | : திரு.செ.சாறங்கன் |

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு.அ.மதன்ராஜ்
திரு.ச.சந்திரபவன்
திரு.க.கணராஜன்
திரு.இ.இரகிதன்
திரு.கு.வித்தியாகரன்
திரு.க.சுகந்தன்
திரு.பா.கஜன்

போசகர் : திரு. ம.பத்மநாதன்
திரு. வ.மருதலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக்கு வித்தானோர்

அருள்மிகு கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையினரின் வைரவிழாவை முன்னிட்டு வெளியாகும் இச்சிறப்பு மலர் உருவாக்கம் பெற ஆசிச்செய்திகள் வழங்கிய வணக்கத்துக்குரிய பீடாதிபதிகள், குருமார்கள், வாழ்த்துரைகள் வழங்கிய சான்றோர்கள், சமயப் பெரியார்கள், ஆக்கங்கள் தந்துதவிய அறிஞர்கள், மலர் வெளியீட்டுக்குரிய நிதிவளத்தை நல்கிய புலம்பெயர்ந்து வாழ்கின்ற தொண்டர் சபையின் மூத்த உறுப்பினர்கள் விசேஷமாக கனடாவில் இயங்கி வரும் கும்பழாவளை திருப்பணிச் சபையினர், இம்மலரை நறுமணங்கமழ மலரச் செய்த அன்றா நிறுவனத்தார், அட்டைப்படம் வரைந்து கொடுத்த ஓவிய விற்பன்னர்கள், புகைப்படக் கலைஞர்கள், எழுத்துக்களைச் செவ்வை பார்த்துதவிய அன்பர்கள், தர்மகர்த்தாக்கள் சபையினர், தொண்டர் சபையினர், இம்மலரின் வெளியீட்டு நிகழ்வைச் சிறப்புடன் நிறைவு செய்ய உறுதுணையாகவிருந்த பெரியோர்கள், விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துச் சிறப்புப் பிரதிகள் பெற்று எமக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியை வெளிப்படுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றியுடன்
மலர்க்குழுவினர்.

வாழ்த்து


வைய நீடுக, மாமழை மன்னுக,
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக,
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக,
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.


**குறிப்பு:** பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராண ஏட்டுப்பிரதிகள் சிலவற்றில் மட்டும் காணப்படும் இறுதி வாழ்த்துச் செய்யுள் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர்சபையினால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையும் சிறப்பாக இயங்கி வரும் ஒலிபெருக்கிச் சேவை





"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
திருப்பணிச்சபை
கனடா

***என்றென்றும் எம்மையும் ஊரையும்
வாழவைக்கும் எம்பெருமான்
பாதசேவையில் பங்கேற்கும்
திருத்தொண்டர்சபையின்
வைரவிழாச் சிறப்பு மலர்
சிறந்து மணம் பரப்ப
மனதார வாழ்த்துகின்றோம்.***

தலைவர் : திரு.எஸ். கந்தசாமி
செயலாளர் : திரு.யோ.யோகராஜா
பொருளாளர் : திரு.எஸ்.மகேந்திரராஜ்
உறுப்பினர்கள் : திரு.கலாவரன்
திரு.த.அகிலதாஸன்
திரு.க.உமைபாலன்
திரு.செ.பிரிதிராஜ்
திரு.வேலுப்பிள்ளை
திரு.த.உருத்திரன்

இவர்களுடன் கனடா வாழ் அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் அடியார்கள்

"எம்கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print @ Andra Printers, Jaffna | 021 222 8929



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org